KANDIAH LAW
PROFESSIONAL CORPORATION
T 416-333-1001 www.KandiahLaw.com F 416-335-1002
வீட்டு மோட்கேஜ் பிரச்சினையா? சட்ட ஆலோசனை தேவையா?
அழையுங்கள் தயா PK கந்தையா BAS, LLB (Hons)(வழக்கறிஞர்)

வீடு வாங்க விற்க நட்பான சேவைக்கு
PRASATH SATHIYANATHAN
Sales Representative
647.296.7932
HomeLife Future Realty Inc. Brokerage
*Independently owned and operated
Prasath Estate
HOMEWORTH
See what your home worth!
www.freehomevalueplus.com

Samraj Insurance Group Inc
வாகனக் காப்புறுதி, ஆயுட்காப்புறுதி
வீட்டுக்காப்புறுதி, பயணக் காப்புறுதி
உட்பட அனைத்துக் காப்புறுதித்
தேவைகளுக்கும் அழையுங்கள்
Dr. Ananthamoorthy
(ABAssistant)
416 823 3686
647 857 0086

வீடு வாங்க விற்க...
என் நட்பான சேவை
உங்கள் திருப்தியின் மகிழ்ச்சியே...
திரு நாகராஜா
வீடு விற்பனை முகவர்
Dir: 416-590-0090
Bus: 416-289-3333
thirunagarajah@sympatico.ca
RE/MAX Realtron Realty Inc. Brokerage

GET THE RIGHT INSURANE COVERAGE
AUTO, HOME, BUSINESS
20+ ஆண்டுகள் அனுபவம் பெற்ற நம்பகமான காப்புறுதி முகவர்! சரியான காப்புறுதி! குறைந்த காப்புறுதி கட்டணம்!
JEYA SHANTHY
SIVASOTHY
647.268.2710
AAXEL

மலர்:- 32, 30 மே 2025 இதழ்:- 22

# ஈழநாடு

பிரதம ஆசிரியர்: T.K.பரமேஸ்வரன் 416 841 9600

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Cash Point
PAWN BROKERS
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
$1000 $20/month
Tel : 416-284-7000

BASKARAN SINNADURAI
Broker
Cell: (416) 880-8585
RE/MAX ACE
3-1286 Kennedy Rd. Toronto, ON M1P 2L5
Tel: (416) 270-1111
Fax: (416) 270-7000
Commercial
Industrial
Investment
baskaran.toronto@hotmail.com

GT Brokers
Protect You & Your Family
Critical Illness | No medical Life
Disability Income | Mortgage Life
Travel & Visitor | Life Insurances.
RRSP | RESP
Best Insurance for the Lowest Rate !!!
Guna Thuraisingham
Independent Insurance Advisor
Dir: 416 528 1407
www.gtbrokers.ca
Super Visa Insurance 100% Refund

BUYING OR SELLING
Indra Michael Xavier
Broker
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
Tel: 905-201-9977 Fax: 905-201-9229
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
*INDEPENDENTLY OWNED AND OPERATED

## போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளை வாழ வையுங்கள்! உறவுகளே! யூன் மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

என் இனிய உறவுகளே! அன்பு இல்லம், பாரதி இல்லம், செஞ்சோலை இல்லம் ஆகிய மூன்று இல்லங்களில் வாழும் 423 குழந்தைகளுக்காக வருடத்தில் ஒரு நாள் உங்கள் பிறந்த நன்நாள், திருமண நன்நாள், குழந்தைகளின் பிறந்தநாள், உங்கள் அன்புக்குரியவர்களின் பிரிவு நாள் என மலரும் உங்கள் நினைவுகளில் இவர்களையும் நினைத்து ஒரு நாள் உணவளிக்க முன் வாருங்கள்! தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்னதானம் வழங்குவதிலும் விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும். 14வது வருடத்தில் தொடரும் சேவை. ஈழநாடு பத்திரிகையின் அறப்பணியில் நீங்களும் பங்கு கொள்ளுங்கள். விபரங்களை 10ம் 11ம் பக்கங்களில் காணலாம். தொடர்புகளுக்கு:- ஈழநாடு பரமேஸ் 416 841 9600

## அநுர அரசின் ஆட்டம் ஆரம்பம்! முன்னாள் அமைச்சர்கள் இருவருக்கு 25, 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை!

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சதொச நிறுவனத்தின் முன் னாள் தலைவர், முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய் யப்பட்ட வழக்கில் குறித்த இருவரும் குற்றவாளிகள் என மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. (4ம் பக்கம் பார்க்க)



ஈழநாடு பத்திரிகையை வாரம் தோறும்
eelanadu.ca
மின்னிதழ் மூலம் வாசிக்கலாம்

## வடக்கில் காணி அபகரிப்பு! வர்த்தகமானி அறிவித்தலை வாபஸ் பெற்றது அரசு!

வடக்கு மாகாணத்தில் நில தீர்வு தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியை அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் நிலங்களை(7ம் பக்கம் பார்க்க)

## படையினரின் கையிலுள்ள துப்பாக்கி எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படக்கூடாது என்ற அநுராவின் உரை இனவாதிகளை உசுப்பேத்தியது?

...... இங்குள்ள பெயர்ப் பலகையில் தனது மகனின் பெயர் இருக்கிறதா? கணவரின் பெயர் இருக்கிறதா? தந்தையின் பெயர் இருக்கிறதா என்பதை பலரும் விரல் விட்டுத் தேடுவதை நான் அவதானித்தேன். தெற்கில் மட்டுமா இந்த நிலை? வடக்கிலும் அவ்வாறே தேடுகின்றனர். தனது பிள்ளைகளை, தனது கணவரை இழந்தோர் அவர்களின் புகைப் படங்களை வீதிகளில் வைத்துக் கொண்டு அவர்கள் தொட ர்ந்து கேள்வி எழுப்புகின்றனர். அனைத்துப் பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளை ஓர் இரத்தினக்கல். படையினரது கைகளிலுள்ள துப்பாக்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயற்படக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு'. (6ம் பக்கம் பார்க்க)





## சர்ச்சையில் சிக்கி இருக்கும் "வேடன்" இந்து அமைப்புக்கள் இவரைக் குறி வைப்பது ஏன்?

கேரளாவைச் சேர்ந்த பிரபல ராப் பாடகரான வேடனை பா.ஜ.க வும் இந்து அமைப்புகளும் கடுமையாக விமர்சித்து வருகின்றன. பா.ஜ.கவைச் சேர்ந்த தலைவர் ஒருவர், வேடனை தேசியப் புலனாய்வு முகமை விசாரிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். யார் இந்த வேடன்? கடந்த சில நாட்களாக கேரளாவின் சமூக ஊடகங்களிலும் தமிழ்நாட்டின் யூடியூப் சேனல்களிலும் பரவலாக அடிபடும் பெயர் வேடன். கேரளாவைச் சேர்ந்த ராப் பாடகரான வேடனை பா.ஜ.கவும் இந்து அமைப்புகளும் (16ம் பக்கத் தொடர்ச்சி)

THINKING OF

# SELLING OR BUYING A HOME?

www.AgentSiva.com

*Your neighborhood sales representative*

**PROFESSIONAL AGENTS! PREMIER RESULTS !!**

RE/MAX REALTRON Realty Inc. Brokerage

Home of the Top Producers



22 Years Real Estate Experience

## Siva Kandiah

Sales Representative

**Dir: 416-301-9540**

sivakandiahhome@gmail.com

## Piravien Siva

Sales Representative B.Comm.

**Dir: 647-221-5220**

piravien@gmail.com



885 Progress Ave #209, Scarborough, ON. M1H 3G3
Independently owned and operated

**Bus: 416-289-3333**

• 1% LISTING COMMISSION* • VIRTUAL TOUR • FREE HOME STAGING • PROFESSIONAL PHOTOGRAPHY


### Warden/Finch



Scarborough $424,900

2 Beds • 1 Baths • 6 Rooms
Walking distance to school

### Kennedy / Hwy 401



Scarborough $429,900

1 Beds • 1 Baths • 5 Rooms
Newly Renovated Unit


### Markham / Sheppard Ave



Scarborough $479,000

1 Beds • 1 Baths • 3 Rooms
Corner Condo Townhouse


### McCowan / Ellesmere



Scarborough $599,000

2 Beds • 2 Baths • 5 Rooms
Just A Short Walk To STC


### Mccowan & Hwy 401



Scarborough $549,900

2 Beds • 2 Baths • 5 Rooms
Corner suite, unobstructed views


### Kennedy / 401



Scarborough $538,000

2 Beds • 1 Baths • 5 Rooms
Open Concept Living-Dining

### Simcoe St / 401



Oshawa $575,900

3+1 Beds • 2 Baths • 5+1 Rooms
Newly Painted, 1100+ Sqft


### Grandview Dr. / Bloor



Oshawa $649,800

2+2 Beds • 2 Baths • 7+4 Rooms
Upgraded floor, Newly renovated


### 9TH LINE / HIGHWAY 7



Markham $1,100,000

4 Beds • 4 Baths • 9 Rooms
luxury freehold townhouse


### Dixie/ Glenanna



Pickering $799,000

3 Beds • 2 Baths • 6 Rooms
Great area close to all amenities


### Audley Rd & Rossland Rd E



Ajax $799,000

3 Beds • 3 Baths • 8+3 Rooms
No maintenance fees Townhouse

### Markham & Ellesmere



Scarborough $1,050,000

3+1 Beds • 2 Baths • 6 Rooms
Fin.basement with sep.entrance

### Morningside/Mcnicol



Scarborough $1,099,900

3 Beds • 3 Baths • 7+2 Rooms
Hardwood flooring throughout


### 401/Morningside



Scarborough $1,249,000

4+2 Beds • 4 Baths • 12 Rooms
Easy access to the new 407


### 10th Line/ Hoover Park Dr



Stouffville $1,499,999

4+1 Beds • 4 Baths • 10 Rooms
3,162 Sqft ,Upgrades Designed

### 9th Line/Hoover Park



Stouffville $999,000

4 Beds • 3 Baths • 8 Rooms
Modern Living Elegant Upgrades

**EELANADU**
203 Gardiner Dr
Bradford - ON
L3Z 0J5 - CANADA

416 841 9600 / 905 653 3000
eelanadu1993@ gmail.com

### வாசகர்கள் வர்த்தகர்கள் கவனத்திற்கு!

எமது ஈழநாடு பத்திரிகை அலுவலகம் திங்கள் முதல் ஞாயிறு வரை வாரத்தில் ஏழ நாட்களும் காலை 9.00 மணி முதல் இரவு 12.00 மணி வரை திறந்திருக்கும். மரண அறிவித்தல், நினைவஞ்சலி மற்றும் முக்கிய மான அறிவித்தல்கள் மட்டுமே வியாழன் இரவு 12.30 மணி வரை ஏற்றுக் கொள்ளப் படும்.

உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையில் விளம்பரம், அறிவித்தல் செய்ய விரும்பு வோர் அலுவலகத்துடன் (416) 841 9600 அல்லது (905) 653 – 3000 என்ற தொலை பேசியில் தொடர்பு கொண்டு விட்டு கீழ் காணும் இடங்களில் அறிவித்தல்களை ஒப்படைக்கலாம். தங்கள் ஆதரவிற்கு நன்றி.

**1 SANKAR INTERNATIONAL**
**2425 EGLINTON AVE EAST**
**(EGLINTON / KENNEDY)**

**2 NEW OCEAN SUPER MARKET**
**5635 FINCH Ave**
**(MARKHAM / FINCH Ave)**

**3 AGP MART**
**4A WADE AVE**
**TORONTO**

**4 KALAIMAHAL BOOK DEPOT**
**595 PARLIAMENT ST**
**TORONTO**

**5 UTHAYA SUPER MARKET**
**5010 STEELES AVE WEST**
**ETOBICOKE**

ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அனைத்து அறிவித்தல்கள், விளம்பரங்களுக்கு சம்பந்தப்பட்ட வர்களே பொறுப்பாளர்கள். ஈழநாடு எந்த வகை யிலும் பொறுப்பேற்காது. அத்துடன் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்திற்கும் ஆக்கியோரே பொறுப் பாளர்கள். ஆசிரியர் அல்ல.

அன்பு இல்லக் குழந்தைகளுக்கான நன்கொடை யாளர்கள் 416 841 9600 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**வெள்ளிக்கிழமைகளில் உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையை eelanadu.ca மின்னிதழ் மூலமாகவும் வாசிக்கலாம்.**

# முன்னாள் ஆட்சியாளர்கள் வழியில் அநுர அரசு? வடக்கு ஆளுநர் வேதநாயகன் சொல்வது என்ன?

ஜனாதிபதி அனுர திசநாயக்க நல்லவர்.அவர் கேட்டுக் கொண்டதாலேயே ஆளுநர் பதவியை பொறுப்பேற்றதாக தெரிவித்து வந்த வடக்கு ஆளுநர் திரு வேதநாயகன் நாகலிங்கம் அவர்கள் தற்போது அரசிற்கு எதிராக குற்றச் சாட்டுக்களை முன்வைக்க தொடங்கியுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வெளிப்படு த்தல் உறுதி மூலமாக காணி மோசடிச் சம்பவங்கள் நடை பெற்று வருவதாக ஆளுநர் குற்றஞ் சுமத்தியுள்ளார். எனினும் அத்தகைய நடவடிக்கை தொடர்பில் கடுமையான நடவடிக்கைகளை எடுத்த காவல்துறை அதிகாரிகள் அரசி னால் இடமாற்றப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

ஆட்சியிலிருப்பது ஊழலை ஒழிக்கவந்ததாக கூறிக் கொண்ட தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பிரதிநிதியாக ஆளுநர் இருந்துவருகின்றார்.எனினும் ஆளுநரையும் மீறிய சக்தி ஒன்று அரசாங்கத்திற்குள் இருந்து வடக்கு மாகா ணத்தை ஆட்டுவிக்கின்றதா? ஏன்ற கேள்விகள் முன் வைக்கபட்டுள்ளன.

கட்சியின் ஆதரவாளர்கள் பெயரில் மோசடிகளில் ஈடுபடும்



கும்பலினை பாதுகாக்கும் அமைச்சர் பற்றியே தற்போது தேசிய மக்கள் சக்தியில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப் பட்டு வருகின்றது.

# கனடா பொதுபாதுகாப்பு அமைச்சர் ஹரியிடம் விஜயதாஸ ராஜபக்ஷ எழுப்பும் கேள்வி! பதிலளிப்பாரா ஹரி?

பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில் கனடாவில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் தோற்றம் பெறுமாயின் அதன் விளைவாக ஏற்படும் உயிரி ழப்புக்கள் தொடர்பில் கனேடிய அரசு நடவடிக்கை எடுக்கு மாயின் அதனையும் 'இனப்படுகொலை' என்று வகைப்படுத் துவீர்களா? என கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரியிடம் முன்னாள் நீதியமை ச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து விஜயதாஸ ராஜபக்ஷவினால் ஹரி ஆனந்த சங்கரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: கடந்த அரசாங்கத்தில் நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராகப் பதவி வகித்த நான் தேசிய நல்லிணக்கத் தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளில் தொட ர்ந்து ஈடுபட்டேன்.





இலங்கையில் சுபீட்சத்தையும், புரிந்துணர்வையும் கட்டி யெழுப்பும் நோக்குடனேயே உங்களுக்கு இக்கடிதத்தை எழுதுகின்றேன். முதலாவதாக கனடாவின் அரசியலில் உச்சத்தை எட்டியிருக்கும் உங்களுக்கு எனது வாழ்த்தி னைக் கூறுகின்றேன். இலங்கையில் சகல சமூகங்களினதும் மதிப்பைப்பெற்ற தமிழ் அரசியல்வாதியான வீ.ஆனந்தசங்கரி யின் மகனான உங்களது அமைச்சு நியமனம் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

அண்மைய காலங்களில் வெளியிடப்பட்டுள்ள சில கருத்து க்கள் மற்றும் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஒரு முன்னுதாரணமாகக் காண்பிக்கும் வகையிலான செயற்பாடுகள் தொடர்பில் நான் மிகுந்த அதிருப்தி அடைகின்றேன்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் சுமார் 60,000க்கும் மேற்பட் டோர் கொல்லப்பட்டதுடன், அவர்களில் சுமார் 27,000 க்கும் மேற்பட்டோர் இராணுவத்தினராவர்.

பொதுமக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பான அமைச்சர் என்ற ரீதியில், கனடாவில் இவ்வாறான அச்சுறுத்தல்கள் தோற்றம் பெறுமாயின், உயிரிழப்புக்கள் தொடர்பில் கனேடிய அரசு நடவடிக்கை எடுக்குமாயின், அதனையும் 'இனப்படு கொலை' என்று வகைப்படுத்துவீர்களா? இல்லை எனில், இலங்கை மீது அதனை ஒத்தவகையில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு தீவிர கரிசனைக்குரியதாகும்.

தற்போது இலங்கைக்கு தூரநோக்கு சிந்தனையும், கருணையும் தேவைப்படும் சந்தர்ப்பத்தில் சில புலம்பெயர் அமைப்புக்கள் மற்றும் சில வெளிநாட்டுத்தரப்புக்களின் சந்தர்ப்பவாத அரசியல் செயற்பாடுகள் உள்நாட்டு நிலைவர த்தை மேலும் மோசமாக்குகின்றன.

கனடாவின் முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் பிரம்டன் நகர மேயர் பற்றிக் பிரவுன் ஆகியோர் இந்தத் துருவமயமாக்கலுக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். அதற்குக் காரணம் தமிழ் சமூகத்தின் மீதான அக்கறை அல்ல. மாறாக அரசியல் ரீதியான நோக்கங்களும், தேர்தல் அடைவுகளுமே அதற்குக் காரணமாகும் என அக்கடிதத் தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

**Balachandran Law Office**
**Balachandran Muthaiah**
**Barrister, Solicitor & Notary**
குடிவரவுச்சட்டம் - விசா, ஸ்பொன்சர், அகதிமனு கோரிக்கைகள்
வீடு, வர்த்தகம், அடைமான சட்டம்.
விவாகரத்து, பிரிவு உடன்படிக்கை
உயில், தத்துவபத்திரம் தயாரித்தல்.
உட்பட சகல சட்ட தேவைகளுக்கும்
பாலச்சந்திரன் சட்ட அலுவலகம்
2401 Eglinton Ave East, Suite 300
Toronto, Ontario M1K 2M5
416 755 5544



# அநுர அரசின் ஆட்டம் ஆரம்பம்! முன்னாள் அமைச்சர்கள் இருவருக்கு 25, 20 வருட கடூழியச் சிறைத் தண்டனை!

முன்னாள் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குறித்த இருவரும் குற்றவாளிகள் என மேல் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் போது, சதொச ஊடாக 14,000 கேரம் பலகைகளை கொள்வனவு செய்ததன் மூலம் 53 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றம் சுமத்தியிருந்தது.

அதற்கமைய குறித்த வழக்கு இன்று மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி, சதொச நிறுவனத்தின் முன்னாள் தலைவர், முன்னாள் வர்த்தக அமைச்சருமான நளின் பெர்னாண்டோவுக்கு 25 வருட கடூழிய சிறைத்தண்டனையும், முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகேவுக்கு 20 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

தீர்ப்புக்கு முன்னர் நீதிமன்றத்தில் சாட்சியங்களை சமர்ப்பித்த இலஞ்ச விசாரணை ஆணைக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரி, இந்த பிரதிவாதிகள் தங்கள் பதவியின் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் தவறான செயலைச் செய்துள்ளதாக குறிப்பிட்டார். இந்தத் தவறு காரணமாக, அரசாங்கம் 53 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பொது வரி வருமானத்தை இழந்துள்ளதாகவும், இதனால் பொதுமக்களுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இது போன்ற குற்றங்களைச் செய்யத் தயாராகி வருபவர்களுக்கு ஒரு பாடமாக அமையும் வகையிலும் ஊழல் எதிர்ப்பு ஆர்வலர்களை ஊக்குவிக்கும் வகையிலும் தீர்ப்பை வெளியிடுமாறு இலஞ்ச விசாரணை ஆணைக்குழு சார்பில் ஆஜரான சட்டத்தரணி நீதிமன்றத்தைக் கோரினார்.



முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை பரிசீலித்த பின்னர், நீதிபதி மஹேன் வீரமன் தலைமையிலான மூவரடங்கிய மேல் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்தது.



இது இவ்வாறிருக்க முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவை ஜஜீன் 5 ஆம் திகதி வரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு ஹெவ்லொக் சிட்டி குடியிருப்பு வளாகத்தில் வசிக்கும் பெண்ணொருவரின் பயணப் பையில் இருந்து கண்டு பிடிக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட துப்பாக்கி தொடர்பில், முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கடந்த 23ஆம் திகதி கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்த தங்க முலாம் பூசப்பட்ட T-56 துப்பாக்கி கடந்த செவ்வாய்க்கிழமை கண்டு பிடிக்கப்பட்டது, மேலும் இது தொடர்பாக இரண்டு பெண்களும் ஆணொருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகளின் போது வெளியான தகவல்களுக்கு அமைய, முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கைது செய்யப்பட்டார்.

பின்னர் முன்னாள் அமைச்சரை கல்கிஸ்ஸ பதில் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர், 29 மே 2025 வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

பின்னர் அவருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக சிறைச்சாலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதோடு, விசேட வைத்தியரின் பரிசோனையைத் தொடர்ந்து, அவரை மீண்டும் மகசின் சிறைச்சாலைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

கடன் தொல்லையா?
பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்
கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive, Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224, Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com



# நல்லிணக்கத்தைத் தோற்கடிக்க வடக்கில் தமிழ் ராஜபக்ஷாக்கள் தோற்றம் பெற்றுள்ளனர்-பிமல்

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போது பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிடம் தமிழ் ராஜபக்ஷக்களை கண்டோம். தமிழ் ராஜபக்ஷக்கள் தோற்றம் பெறுவார்கள்




என்று ஒரு போதும் நினைக்கவில்லை. இது கவலைக்குரியது. வடக்கு மாகாண மக்களின் ஆதரவு எமக்கு உள்ளது. இது ஆரம்பத்தின் முதல் வெற்றியாகும். வடக்கில் பல. மான அரசியலுக்கான அத்திவாரமிட்டுள்ளோம். நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திகளை முன்னிலைப்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கில் செயற்படுவோமென போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி, கப்பற்றுறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரும், சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

தமிழ் ராஜபக்ஷர்களின் தோற்றத்தை எதிர்பார்க்கவில்லை, கவலையடைந்தோம் வடக்கு என்பது யாழ்ப்பாணமல்ல, வன்னிக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுள் உண்டு.

வடக்கு மாகாணத்தில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்களில் தேசிய மக்கள் சக்தி உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்டுள்ளது. மன்னார் வவுனியா உள்ளிட்ட பகுதிகளிலும் முன்னிலையில் உள்ளோம்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இரண்டாம் நிலையில் உள்ளோம். ஏனைய சிங்கள கட்சிகளை காட்டிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தி முன்னிலையில் உள்ளது.

பாராளுமன்றத் தேர்தலை காட்டிலும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தில் வாக்குகள் குறைவடைந்துள்ளது என்பதை ஏற்றுக் கொள்கிறோம்.

வடக்கு மாகாணத்தில் போட்டியிட்ட எமது வேட்பாளர்கள் புதியவர்கள். அத்துடன் ஒரு தரப்பினர் எமக்கு எதிராக இனவாதத்தையும் கட்டவிழ்த்து விட்டார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போது பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களிடம் தமிழ் ராஜபக்ஷர்களை கண்டோம். தமிழ் ராஜபக்ஷர்கள் தோற்றம் பெறுவார்கள் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. இது கவலைக்குரியது.

வடக்கு மாகாண மக்களின் ஆதரவு எமக்கு உள்ளது. இது ஆரம்பத்தின் முதல் வெற்றியாகும். வடக்கில் பலமான அரசியலுக்கான அத்திவாரமிட்டுள்ளோம். நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திகளை முன்னிலைப்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கில் செயற்படுவோம் என்றார்.

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டம் உருவாக்கப்படும் வரை காத்திருக்கக் தேவையில்லை

அரசாங்கம் புதிய பதிலீட்டு சட்டம் தயாரிக்கப்படும் வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்காது எனின், குறைந்தபட்சம் அச்சட்டம் பிரயோகிக்கப்படுவதை இடைநிறுத்தவேண்டும் என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரும், சித்திரவதைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் நம்பிக்கை நிதியத்தின் உறுப்பினருமான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கும் அதேவேளை அதனைப் பதிலீடு செய்யும் வகையில் உருவாக்கப்படும் புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பில் நீதியமைச்சினால் பொதுமக்களிடம் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

இது குறித்து தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் பதிவொன்றைச் செய்திருக்கும் அம்பிகா சற்குணநாதன்,

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான புதிய சட்ட உருவாக்கம் தொடர்பில் அரசாங்கம் பரிந்துரைகளைக் கோரியிருப்பது நேர்மறையானதொரு விடயமாகும் எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருப்பினும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு புதிய சட்டத்தை உருவாக்கும் வரை காத்திருக்க வேண்டிய அவசியமில்லை எனவும் புதிய சட்டத்தை உருவாக்குவது என்பது பல கட்ட ஆலோசனைகளின் அடிப்



படையில் நிகழவேண்டிய நீண்ட செயன்முறை என்பதனால், அதற்கு அதிக கால அவகாசம் தேவைப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய சட்டம் தயாரிக்கப்படும் வரை அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்காது எனின், குறைந்தபட்சம் அச்சட்டம் பிரயோகிக்கப்படுவதை இடைநிறுத்தவேண்டும்.

அதேபோன்று புதியசட்டம் தொடர்பான பரிந்துரைகளை சமர்ப்பிப்பதற்கு 14 நாட்கள் கால அவகாசம் போதுமானதன்று. மாறாக குறைந்த பட்சம் ஒருமாத கால அவகாசத்தையேனும் வழங்கவேண்டும் எனவும் அம்பிகா சற்குணநாதன் வலியுறுத்தியுள்ளார்.

# தமிழ்கட்சிகளால் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவது...

உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளைத் தொடர்ந்து வடக்கு கிழக்கில் பெரும்பாலான சபைகளை அமைக்க வேண்டுமாயின், தமிழ் கட்சிகளுக்கு இடையில் இணக்கப்பாடு அவசியம். வடக்கு கிழக்கில் பெரும்பாலான சபைகளில் தமிழ் அரசுக் கட்சி முன்னிலை வகித்தாலும் கூட ஆட்சியமைக்க வேண்டுமாயின் ஏனைய தமிழ் கட்சிகளின் ஆதரவு கட்டாயம் தேவை. ஆனால், விட்டுக் கொடுப்புடன் சபைகளை அமைக்கும் முயற்சியில் இதுவரையில் தமிழ் கட்சிகள் மத்தியில் இணக்கப்பாடு ஏற்படவில்லை.

இந்த நிலையில், தற்போது ஒவ்வொரு கட்சிகளும் சபைகளை அமைப்பதற்கான தந்திரோபாயங்களில் ஈடுபட்டு வருகின்றன. ஏட்டிக்குப்போட்டியான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. தமிழ் கட்சிகள் எவ்வாறு சபைகளை அமைப்பது என்பதில் இழுபறிப்பட்டுக் கொண்டிருக்கும்போது, கிழக்கு மாகாணத்தில் முதலமைச்சர் பதவியை எவ்வாறு கைப்பற்றலாம் என்னும் அடிப்படையில் முஸ்லிம் கட்சிகள் வியூகங்களை வகுத்துக் கொண்டிருக்கின்றன.

இந்த அடிப்படையில் இதுவரையில் எதிரும் புதிருமாக மோதிக் கொண்ட முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் இடையில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. ஆனால் தமிழ் கட்சிகளோ மாகாண சபைகள் தேர்தல் தொடர்பில் குறிப்பாக, கிழக்கு மாகாணம் தொடர்பில் எவ்வித கரிசனையுமின்றி தங்களுக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தும் முயற்சியில் மோதிக் கொண்டவர்கள் பின்னர், பாராளுமன்றத் தேர்தலில் மேலும் பிளவுற்று இப்போது உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் விடயத்தில் மோதிக் கொண்டிருக்கின்றனர். தமிழ் பொது வேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட்டவர்கள் கூட பாராளுமன்றத் தேர்தலில் ஒன்றுபடவில்லை. அதற்கு சிவில் சமூகமாக தங்களை அடையாளப்படுதிக் கொண்டவர்களில் ஓர் அணியினரின் சதி முயற்சிகளும் முக்கிய காரணம் என்னும் விடயமும் இருந்தாலும்கூட, சூழ்நிலைகளைப் புரிந்து கொண்டு கட்சிகளால் செயல்பட முடியாவிட்டால் அந்தக் கட்சிகளை மக்கள் ஆதரிப்பதால் என்ன பயன் உண்டு?

உள்ளூராட்சித் தேர்தலில் பிரிந்து நின்றது போலவே மாகாண சபைகள் தேர்தலையும் கட்சிகள் எதிர்கொள்ளுமாக இருந்தால் மாகாண சபை மூலம் கிடைக்கக்கூடிய எந்தவொரு நன்மையும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. முக்கியமாக, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் அபிவிருத்தியில், சமூக முன்னேறத்தில் ஏனைய சமூகங்களுடன் போட்டியிட முடியாத கையறு நிலையிலேயே இருப்பார்கள். தமிழ் மக்களை சமூக, பொருளாதார ரீதியில் முன்னேற்றாத சுலோகங்களால் எந்தப் பயனும் இல்லை. இனிவரும் காலம் இன்னும் சிக்கலானதாக இருக்கப் போகிறது. இந்த நிலையில், தேசிய மக்கள் சக்தியும் வடக்கு – கிழக்கில் கணிசமான செல்வாக்குடன் இருக்கிறது.

குறிப்பாக கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரையில் முஸ்லிம்களை இணைத்துக் கொண்டு மாகாண சபையை தேசிய மக்கள் சக்தி கைப்பற்றுவதற்கு அதிக வாய்ப்பு உண்டு. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் முஸ்லிம் காங்கிரஸ் முதலமைச்சரை கருத்தில் கொண்டு தென்னிலங்கையுடன் தான் நிற்கும். இது தான் கடந்த கால வரலாறு. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ் கட்சிகள் தூரநோக்குடன் ஒன்றுமையாக செயல்படாது விட்டால், தமிழ் கட்சிகளால் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை.

**மறவாதீர்கள்! 01 யூன் 2025 ஞாயிற்றுக்கிழமை**

**உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்**

**ஆண்டு விழா விபரங்கள் உள்ளே!**

# நாங்கள் பயங்கரவாதத்தை தோற்கடித்து விட்டோமா? சிங்கள பௌத்த இனவாதத்தை தோற்கடிக்கவில்லையா?



வாரஇறுதியில் நான் நீர்கொழும்பில் கடற்தொழிலாளர்கள் சங்கமொன்றின் அலுவலகத்திற்கு அருகில் அமைந்திருந்த எனது நண்பனின் வீட்டிற்கு சென்றேன்.அந்த பகுதியில் செழிப்பு மிக்க மீன்பிடி கலாச்சாரம் குறித்து ஆராய்வதே எனது நோக்கம். ஆனால் அமைதியான வாரஇறுதிக்கு பதில் நான் இலங்கை சமூகத்தின் மேற்பரப்பில் இன்னமும் நிலவும் இனப் பதட்டங்களை அம்பலப்படுத்தும் ஒரு சம்பவத்தை பார்த்தேன்.

2009ம் ஆண்டு யுத்தத்தின் இறுதி நாட்களில் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களை அமைதியான முறையில் நினைவுகூருவதற்காக சுமார் 20 முதல் 30 தமிழர்களும் சிங்களவர்களும் அங்கு கூடியிருந்தனர்.

பல பொலிஸ் வாகனங்கள் அங்குவரும் வரை அனைத்தும் அமைதியாக காணப்பட்டது. அந்த வாகனங்களில் இருந்து சுமார் 30 பொலிஸார் இறங்கி சுற்றி வரவுள்ள பகுதிகளிற்கு சென்றார்கள்.

சிங்களராவய என்ற சிங்கள தேசியவாத குழுவின் அச்சுறுத்தல் காரணமாகவே பொலிஸார் அங்கு அனுப்பப்பட்டனர் என்பதை பின்னர் நான் அறிந்தேன். நீர்கொழும்பு தெல்வெல சந்தியில் இடம் பெறவிருந்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு குறித்து இந்த குழுவினர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

நீதிமன்ற உத்தரவை தொடர்ந்து ஏற்பாட்டாளர்கள் வேறு இடத்தில் நிகழ்வை நடத்துவதற்கு இணங்கியிருந்தனர். ஆனால் நீதிமன்ற உத்தரவின் பேரில் அந்த நிகழ்வு தடை செய்யப்பட்டுள்ளமை அந்த நிகழ்வில் கலந்து கொண்ட பலருக்கு தெரியாது.

பொலிஸார் கடற்தொழிலாளர்கள் சங்கத்தின் அலுவலகத்தை சுற்றிவளைத்ததும் இன்னொரு குழுவினர் தேசிய கொடியை ஏந்தியவாறு நிகழ்வை ஏற்பாடு செய்தவர்களிற்கு எதிராக கோஷமிட்டவாறு அந்த பகுதிக்கு வந்தனர்.

பதற்றம் அதிகரித்தது. ஆனால் பொலிஸார் உறுதியான விதத்தில் செயற்பட்டனர், ஆர்ப்பாட்டக்காரர்கள் நிகழ்வு இடம் பெறும் பகுதிக்குள் செல்வதை தடுத்தனர். இதன் மூலம் இரண்டு குழுக்களிற்கும் இடையில் மோதல் இடம்பெறுவதை தடுத்தனர்.

அன்றைய நாள் வன்முறைகள் எதுவுமின்றி முடிவடைந்தது. அதேநாளில் சர்ச்சைக்குரிய சமூக ஊடக பதிவொன்று வேகமாக பரவியது.முஸ்லீம் ஒருவர் பதிவிட்டதாக தெரிவிக்கப்படும் அந்த பதிவில்,அறுகம் குடாவிற்கு வரும் வெளிநாட்டவர்கள் பிக்னியை அணிந்து வீதிகளில் நடமாடக் கூடாது என தெரிவித்திருந்தது.

உள்ளூர் கலாச்சார விழுமியங்களை மதிக்கவேண்டியதன் அவசியம் குறித்து குறிப்பிடப்பட்டிருந்தது. தொடர்பில்லாததாக தோன்றினாலும் ,பதிவின் நேரமும் தொனியும் சகிப்புதன்மையின்மையின் சமாந்திரமான வடிவத்தை பிரதிபலிக்கின்றது. கலாச்சார வெளிப்பாடு, நினைவேந்தல், மற்றும் பொது நடத்தையை கட்டுப்படுத்துவதற்கான ஒரு முயற்சி.

இந்த மூன்று சம்பவங்களும் இரண்டு நினைவேந்தல் தொடர்பானது, ஒன்று சுற்றுலாப்பயணிகளை இலக்கு வைத்து – கடினமான கேள்விகளை எழுப்புகின்றன.

சமூகத்தின் மீது தங்கள் மதிப்புகளை திணிக்க முயலும் இவர்கள் இந்த குழுக்கள் யார்? எந்த சிந்தாந்தம் இவர்களை இயக்குகின்றது? அவர்கள் என்ன அதிகாரத்தை கொண்டுள்ளனர்? அரசியல் ரீதியில் இவர்களை யார் ஆதரிக்கின்றனர்?

அவர்கள் ஜனநாயகத்தின் அதிகாரத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்த முயல்கின்றார்களா? இந்த நடவடிக்கைகளை அரசாங்கம் புறக்கணிக்க முடியுமா?

மிக முக்கியமாக அரசியலமைப்பின் அதிகாரத்தை பயன்படுத்தாமல் அரசாங்கத்தினால் அதிகரித்துவரும் சமூக தீவிரவாதத்தை எதிர்கொள்ள முடியுமா?

பயங்கரவாதத்தை நாம் தோற்கடித்து விட்டோம். பயத்தையும் பிரிவினையையும் பயன்படுத்தி செழித்து வளர்ந்த அரசியல் சக்திகளை வாக்களிப்பின் மூலம் நாங்கள் வீழ்த்தியுள்ளோம். ஆனால் ஒரு காலத்தில் ஒரு இருண்ட அத்தியாயங்களிற்கு ஒளியூட்டிய இனவெறி சர்வாதிகார தீவிரவாத மனோநிலைகளை நாம் உண்மையிலே அகற்றி விட்டோமா?

இல்லையென்றால் நாம் எதிர்காலத்திற்கு எந்த ஆபத்தை ஏற்படுத்துகின்றோம். இவை இனிமேல் தேசிய பாதுகாப்பு அல்லது அரசியல் போட்டி தொடர்பான விடயங்கள் இல்லை. இவை எமது குடியரசின் ஆன்மாவை பற்றிய கேள்விகள்.

நீதி சமத்துவம் அனைவருக்கும் பரஸ்பர கௌரவம் ஆகியவை நிலவும் சமூகத்தை கட்டியெழுப்ப தயாரா? அல்லது மீண்டும் பழைய பிசாசுகள் நமது எதிர்காலத்தை தீர்மானிப்பதற்கு அனுமதிக்கப் போகின்றோமா?

# படையினரின் கையிலுள்ள துப்பாக்கி எந்தச் சந்தர்ப்பத்திலும் பயன்படக்கூடாது என்ற அநுராவின் உரை இனவாதிகளை உசுப்பேத்தியது?

...... இங்குள்ள பெயர்ப் பலகையில் தனது மகனின் பெயர் இருக்கிறதா? கணவரின் பெயர் இருக்கிறதா? தந்தையின் பெயர் இருக்கிறதா என்பதை பலரும் விரல் விட்டுத் தேடுவதை நான் அவதானித்தேன். தெற்கில் மட்டுமா இந்த நிலை? வடக்கிலும் அவ்வாறே தேடுகின்றனர். தனது பிள்ளைகளை, தனது கணவரை இழந்தோர் அவர்களின் புகைப் படங்களை வீதிகளில் வைத்துக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றனர். அனைத்துப் பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளை ஓர் இரத்தினக்கல். படையினரது கைகளிலுள்ள துப்பாக்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயற்படக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு'.

போர் வெற்றிவிழாவில் ஜனாதிபதி அநுர குமர –

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைகளை அடுத்து அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் ராணுவ வெற்றிநாள் என்ற பெயரில் இந்நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

தமது இனவாதப் போக்கினால் மேற்கொள்ளப்பட்ட தமிழின அழிப்புப் போரில் மரணித்த 27,000 பேருக்கும் மேலான இராணுவத்தினருக்கு மரியாதை வழங்க இந்த நாளை அவர் உருவாக்கினார். இவ்வருட விழாவில் ஜனாதிபதி அநுர குமர பங்குபற்ற மாட்டாரென்று இருந்தபோதிலும் எதிர்க்கட்சிகள் இதனை அரசியலாக்க எத்தனித்ததால் அவர் பங்குபற்றினார் என்பதே உண்மை.

இந்நிகழ்வில் அவர் நிகழ்த்திய உரையில் இராணுவத்தினர் என்ற சொற்பதத்தை தவிர்த்து அதற்குப் பதிலாக படையினர் என்று குறிப்பிட்டதை எதிர்த்தரப்பினர் – முக்கியமாக உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்றவர்கள் கடுமையாக விமர்சிக்கின்றனர். ஜனாதிபதி உண்மையைப் பேசவில்லையென்று சிங்கள இனவாதிகளை உசுப்பேற்றும் வகையில் இவ்விருவருடைய உரைகளும் சிங்கள ஊடகங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இலங்கையில் அரச பயங்கரவாதத்தை நிலைநிறுத்திய இனஅழிப்புப் போரில் இராணுவத்தினர் (காலாட்படை – ஆமி) மட்டும் ஈடுபடவில்லை. கடற்படை, வான்படை, காவற்படை என்ற சகல படைத்தரப்பினரும் தமிழின அழிப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் அனைவர் தரப்பிலும் உயிரிழப்பு இடம்பெற்றது. இதன் பின்னரே அனைத்துத் தரப்புகளையும் இணைத்து முப்படைத் தளபதியாக போர்க் குற்றவாளியான சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டார். அநுர குமர ஜனாதிபதியாகிய பின்னரே இவர் ஓய்வுக்கு அனுப்பப்பட்டார்.

எனவே போரில் இறந்த அல்லது உயிர் நீத்த படையினரை வெறுமனே இராணுவத்தினர் என்று அழைப்பது முறையற்றது. அதனாலேயே அவர்களை படையினர் என்று அநுர குமர குறிப்பிட்டதில் தவறு இருக்க முடியாது. இதனை ஒரு குற்றமாகச் சுட்டிக் காட்டி இராணுவத்தினரை ஆட்சித் தரப்புக்கு எதிராக்க உதய



கம்மன்பிலவும், விமல் வீரவன்சவும் முனைவது தெரிகிறது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமர ஆற்றிய உரையின் ஒரு பகுதி பின்வருமாறு இருந்தது: 'இங்குள்ள பெயர்ப் பலகையில் தனது மகனின் பெயர் இருக்கிறதா? கணவரின் பெயர் இருக்கிறதா? தந்தையின் பெயர் இருக்கிறதா என்பதை பலரும் விரல் விட்டுத் தேடுவதை நான் அவதானித்தேன். தெற்கில் மட்டுமா இந்த நிலை? வடக்கிலும் அவ்வாறே தேடுகின்றனர். தனது பிள்ளைகளை, தனது கணவரை இழந்தோர் அவர்களின் புகைப் படங்களை வீதிகளில் வைத்துக் கொண்டு அவர்கள் தொடர்ந்து கேள்வி எழுப்புகின்றனர். அனைத்துப் பெற்றோருக்கும் அவர்களின் பிள்ளை ஓர் இரத்தினக்கல். அனைத்துப் படையினரதும் கைகளிலுள்ள துப்பாக்கி எந்தவொரு சந்தர்ப்பத்திலும் செயற்படக்கூடாது என்பதே அவர்களின் எதிர்பார்ப்பு', என அநுர குமர குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் உரையாற்றும 'போது 1971 ஏப்ரல் சேகுவேரா கிளர்ச்சியின் போதும், 1987 – 1989 காலப்பகுதியில் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்ட ஜே.வி.பி.யினர் பற்றியும் அநுர குமர நினைவில் கொண்டுள்ளாரென்பது நன்றாகத் தெரிகிறது. அதனாலேயே அவரது உரையில் உண்மை வெளிச்சமாகியது.

இந்த உண்மையை இவரும் இவரது தரப்பினரும் உண்மையாகவே தொடருவார்களானால் நாடு நலன் பெறும், மக்களும் நலம் பெறுவர். பேச்சு பல்லக்கு, தம்பி கால்நடையாக இருக்கக்கூடாது. – பனங்காட்டான் கட்டுரையில் இருந்து

# வரலாற்றுச் சிறப்புமிக்க உகந்தைமலை முருகன் ஆலய கடற்கரையில் முளைத்த புத்தர் நிலை




வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தைமலை முருகன் ஆலய கடற்கரை சூழலில் உள்ள குன்றில் புத்தர் சிலை ஒன்று வைக்கப்பட்டுள்ள விவகாரம் சர்ச்சையை கிளப்பி உள்ளது.

உகந்தை மலை ஆலய தீர்த்தக் கடற்கரையில் கடற்படை முகாமுக்கு அருகே உள்ள குன்றிலேயே குறித்த புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு பௌத்த கொடியை பறக்க விடப்பட்டுள்ளமையும் கடுமையான எதிர்ப்பலையை ஏற்படுத்தி உள்ளது. உகந்தைமலையில் நாங்கள் முருகன் சிலையொன்றை நிறுவ முற்பட்டபோது அனுமதி மறுக்கப்பட்டுள்ள நிலையில் அதே சூழலில் இந்த புத்தர் சிலை எவ்வாறு வைக்கப்பட்டது? என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளைனர்.

கதிர்காமம் போல் உகந்தை மலையையும் மாற்றுவதற்கு திட்டமிட்ட சதி நடக்கிறதா? என்றும் இந்து மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையில் புகழ் பெற்ற இந்துக் கோயில்களுள் ஒன்றான உகந்தை மலை வேலாயுத சுவாமி கோயில் குன்றில் முளைத்துள்ள சிலை பௌத்த ஆக்கிரமிப்பின் மற்றொரு அங்கம் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# கனடாவில் மனநலப் பிரச்சனைகளை எதிர்த்துப் போராடுபவர்களுக்காக வைத்தியசாலைக்கு 1மில்லியன் டொலர்கள் வழங்கிய ரோய் ரத்னவேல்




கனடாவில் மனநலப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக ஈழத்தமிழரான ரோய் ரத்னவேல் மற்றும் அவரது மனைவி சூநாதனும் ஸ்கார்பரோ ஆரோக்கிய வலையமைப்பு (SHN) அறக்கட்டளைக்கு மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

1969 ஆம் ஆண்டு யாழ்.வடமராட்சியில் பிறந்த ரோய் ரத்னவேல். பதினேழு வயதில், ஒரு அரசியல் கைதியாகி, கொடூரமான மற்றும் அடக்குமுறை சூழ்நிலைகளில் கடுமையான மாதங்களைக் கழித்தார்.

சிறையில் இருந்து அதிர்ஷ்ட வசமாக விடுவிக்கப்பட்ட பிறகு, பதினெட்டு வயதில் கனடாவுக்குத் தனியாக வந்த ரத்னவேல், தற்போது கனடாவின் மிகப்பெரிய சுயாதீன சொத்து மேலாண்மை நிறுவனத்தில் ஒரு நிர்வாகியாக உள்ளார்.

அத்துடன் சித்திரவதை மற்றும் சிறை வாசத்திலிருந்து தப்பித்து, சட்டைப்பையில் டொலர்50 உடன் கனடாவுக்கு வந்து, பின்னர் அஞ்சல் அறையிலிருந்து கனடாவின் மிகப்பெரிய சுயாதீன சொத்து மேலாண்மை நிறுவனத்தின் நிர்வாக அறைக்கு உயர்ந்த ஒரு முக்கிய தமிழரின் நம்பமுடியாத கதையான தனது Prisoner #1056ஐயும் அவர் பகிர்ந்து கொண்டார்.

இவ்வாறான விடயங்கள் மூலம் மனநலம் தொடர்பான பெரும் சவால்களை நன்கு அறிந்திருக்கும் ரோய் ரத்னவேல், மனநலப் பிரச்சினைகளை எதிர்த்துப் போராடுபவர்களுக்கு சரியான ஆதரவை வழங்குவதற்கு முன்வந்துள்ளார். இதன்படி, பன்முகத்தன்மை கொண்ட சமூகத்திற்கு அத்தியாவசிய மற்றும் சிறப்பு சுகாதார சேவைகளை வழங்கி வரும் நிறுவனமான ஸ்கார்பரோ ஆரோக்கிய வலையமைப்பு அறக்கட்டளைக்கு அவரும் அவரது மனைவியும் மில்லியன் டொலர்களை நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ரோய் ரத்னவேல் குடும்பம் வழங்கிய இந்த நன்கொடை மனநல சவால்களை எதிர்கொள்ளும் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களின் வாழ்க்கையில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், பிர்ச்மவுண்ட் மருத்துவமனையில் உள்நோயாளி மனநலத்தை விரிவுபடுத்துவதற்கும், தொடர்ச்சியான மனநல நிலைமைகள் மற்றும் பிறசிக்கலான சுகாதாரத் தேவைகளைக் கொண்ட பாதிக்கப்படக்கூடிய நபர்களை ஆதரிப்பதற்கும் அது குறிப்பாக உதவும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கையில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்தும் காசா

காசாவில் இடம்பெறும் பாரிய மனித உரிமை மீறல்கள் இலங்கை உட்பட பல நாடுகளில் நிகழ்ந்த சம்பவங்களை நினைவுபடுத்துகின்றன என தெரிவித்துள்ள ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களிற்கான செயலாளர் நாயகம் டொம் பிளெச்சர் இனப்படுகொலையை தடுத்து நிறுத்துவதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் உரையாற்றுகையில் இதனை தெரிவித்துள்ள அவர் காசாவில் அழிவின் அளவு குறித்து கடும் எச்சரிக்கை விடுத்துள்ளதுடன், இலங்கை உட்பட நாடுகள் சிலவற்றில் இடம் பெற்ற அட்டுழியங்களை சர்வதேச சமூகம் தடுக்க தவறியதை காசா நிலைமையுடன் ஒப்பிட்டுள்ளார். சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மனித உரிமை மீறல்கள் பாரியளவில் மீறப்பட்ட முன்னைய சந்தர்ப்பங்களில் ஐநா செயற்பட்ட விதம் குறித்த முந்தைய மீளாய்வுகளில், மியன்மார் இலங்கை ருவாண்டா போன்ற நாடுகளில் இழைக்கப்பட்ட மீறல்களின் அளவு குறித்து ஐநா பேசத் தவறியது என தெரிவிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே கொல்லப்பட்டவர்களிற்கும் மௌனமாக்கப்பட்டவர்களிற்கும் என்ன ஆதாரங்கள் தேவை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்?

ஆக்கிரமிக்கப்பட்ட பாலஸ்தீன பகுதிகளில் இஸ்ரேல் வேண்டுமென்று வெட்கம் அற்று மனிதாபிமானமற்ற நிலைமையை இஸ்ரேல் உருவாக்குகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் காணி அபகரிப்பு! வர்த்தகமானி அறிவித்தலை வாபஸ் பெற்றது அரசு!



வடக்கு மாகாணத்தில் நில தீர்வு தொடர்பாக வெளியிடப்பட்ட வர்த்தமானியை அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது. வடக்கு மாகாணத்தில் உள்ள பல கிராமங்களில் நிலங்களை கையகப் படுத்துவது தொடர்பாக விவசாயம், கால்நடை, நிலங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சகத்தின் கீழ் உள்ள நில உரிமை தீர்வுத் துறையால் வர்த்தமானி அறிவிப்பு எண் 2430 கடந்த ர்ச் 28. அன்று வெளியிடப்பட்டது.

இந்நிலையில்,வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள் தொடர்ந்தும் அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டுக்கு எதிராக களத்தில் இறங்கியிருந்த நிலையில் தற்சமயம் குறித்த வர்த்தமானியை அரசாங்கம் திரும்பப் பெற்றுள்ளது.

இதேவேளை வடமாகாண காணி தொடர்பான வர்த்தமானியை மீளபெற்றமைக்காக ஜனாதிபதி அனுரகுமாரதிச நாயக்கவிற்கும் அமைச்சரவைக்கும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச்செயலாளருமான சுமந்திரன் நன்றியை தெரிவித்துள் ளார்

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ்பிரசுரித்த வர்த்தமானியை மீள்கை வாங்குவதாக செய்தி வெளியாகியுள்ளது. நாம் விதித்த காலக்கெடுவுக்கு முன் இத் தீர்மானம் எடுக்கப்படுள்ளது. இது உடனடியாக இன்றிரவே வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என எதிர்பார்க்கிறோம் என அவர் தெரிவித்துள்ளார் சமூக ஊடக பதிவில் இதனை தெரிவித்துள்ள அவர் ஜனாதிபதிக்கு இலங்கை தமிழரசுக்கட்சி எழுதிய கடிதமொன்றையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க காணி சுவிகரிப்பு வர்த்தமானியை அரசாங்கம் மீளப்பெற்றமை வடக்கு மாகாண மக்களுக்கு கிடைத்த வெற்றி. இதற்காகப் பாடுபட்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் இணைந்து செயற்பட்டதன் விளைவாகவே இந்த நிலை ஏற்பட்டது என தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்

பாராளுமன்றத்தில் இவற்றை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இணைந்து இந்த அழுத்தங்களை வழங்காது விட்டால் இதனைச் செய்திருக்க முடியாது. மேலும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் றவுப் ஹக்கிம் அவர்களுக்கும் விசேட நன்றிகள் பிரதமருடன் சந்திப்பில் இவர்கள் இருவரும் தமது நிலைப்பாட்டை வலியுறுத்தி இருந்தார்.

இதில் முக்கியமாக இந்த வர்தகமானி வாபஸ் பெறப்பட்டமையானது தமிழ்பேசும் மக்களாக நாங்கள் இணைந்து விவாதித்தது கூட்டு முயற்சியாக வெற்றியளித்தது இதனைத் தமிழ் முஸ்லிம் மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் இன்றைய ஆட்சியாளர்கள் தமிழ் முஸ்லிம் மக்கள் எமக்கு வாக்களித்தார்கள் என்று கூறுவது மட்டுமல்லாது பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பொருன்பான்மைக்கு அதிகமாக அவர்கள் இருக்கும் நிலையில் தமிழ் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இணைந்து செயற்பட்டதன் வெற்றியாகும்.

சிங்கள மக்கள் குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு நாம் கேடுதல் செய்யவில்லை என்பதைச் சிங்கள மக்கள் உணர வேண்டும். எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சிங்கள மக்களுக்கு எதிராக நடக்க வேண்டும் என்பது எமது அடிப்படை கோட்பாடு அல்ல. முஸ்லிம் மக்களையும் நாம் இணைத்துச் செயற்படுவதன் மூலம் நாம் அசைக்க முடியாத பலத்தை வெற்றியை அடையலாம்.

# இந்திய மாநிலங்களவை உறுப்பினராகின்றார் கமல்ஹாசன்! வாய்ப்பு வழங்குகின்றது திராவிட முன்னேற்றக் கழகம்!



மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். கூடவே ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல் மநீமவுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட திமுக மாநிலங்களவை எம்பிக்கள் எம்.சண்முகம், முகமது அப்துல்லா, பி.வில்சன், பாமக எம்பி அன்புமணி, அதிமுக எம்பி சந்திரசேகரன், மதிமுக எம்பி வைகோ ஆகியோரின் பதவிக் காலம் ஜீலை 24-ம் தேதியுடன் நிறைவடைகிறது. இந்தச் சூ ழலில் தமிழகத்தில் இருந்து 6 புதிய மாநிலங்களவை உறுப்பினர்களை தேர்வு செய்ய ஜஜீன் 19-ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தலைமை தேர்தல் ஆணையம் அண்மையில் அறிவித்தது.

இந்நிலையில் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் திமுக வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர். கூடவே ஏற்கெனவே ஒப்பந்தம் செய்யப்பட்டது போல் மநீமவுக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது திமுக வேட்பாளர்களாக 1. பி.வில்சன், 2.எஸ்.ஆர்.சிவலிங்கம், 3.ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா, ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களை எம்.பி ஆகிறார் கமல் ஹாசன் - கடந்த 2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கோவை தெற்கில் போட்டியிட்டு தோல்வியை சந்தித்த கமல்ஹாசன், கடந்த மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்தார். அவர் மக்களவைத் தொகுதியில் போட்டியிடாத நிலையில், கூட்டணி பேச்சுவார்த்தையின் போது, மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்குவது குறித்து உடன்பாடு செய்யப்பட்டது.

இதையடுத்து திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்தார். மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி அனைத்து தொகுதிகளையும் கைப்பற்றியது.

எனவே, ஏற்கெ னவே செய்யப்பட்ட உடன்பாடு அடிப்படையில் திமுகவில் ஒரு எம்.பி. பதவி கமலுக்கு வழங்கப்படுகிறது. இதன் மூலம் கமல்ஹாசன் மாநிலங் களவை எம்.பி ஆகிறார்.

## இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயார்! - பாகிஸ்தான்

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் மற்றும் ஒபரேஷன் சிந்தூர் நடவடிக்கை காரணமாக இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே மோதல் நிலை அதிகரித்து வரும் நிலையில் இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்துள்ளார். தனது ஈரான் பயணத்தின் போது காஷ்மீர், பயங்கரவாதம், நீர் பங்கீடு மற்றும் வர்த்தகம் உள்ளிட்ட அனைத்து பிரச்சினைகளையும் தீர்க்க இந்தியாவுடன் அமைதிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தயாராக இருப்பதாக பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் தெரிவித்ததாக சர்வ தேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதுதொடர்பாக ஈரான் ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியனுடன் தெஹ்ரானில் நடைபெற்ற கூட்டு செய்தியாளர் சந்திப்பில் பேசிய பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப், காஷ்மீர் பிரச்சினை மற்றும் நீர் பிரச்சினை உட்பட அனைத்து சர்ச்சைகளையும் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க விரும்புகிறோம், மேலும் வர்த்தகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு குறித்து நமது அண்டை நாடுகளுடன் பேசவும் தயாராக இருக்கிறோம்.

சமாதான முன்மொழிவு ஏற்றுக் கொள்ளப்பட்டால் அவர்கள் (இந்தியா) 'உண்மையிலேயே அமைதியை தீவிரமாகவும் உண்மையாகவும் விரும்புகிறார்கள் என்பதைக் காண்பிப்பார்கள். இந்தியாவுடனான மோதலில் இருந்து எங்கள் நாடு வெற்றி அடைந்தது எனத் தெரிவித்துள்ளார் .இதற்கிடையில் ஆக்கிரமிப்பு காஷ்மீர், பயங்கரவாதிகளை ஒப்படைப்பது குறித்து மட்டுமே பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியும் என்ற தனது நிலைப்பாட்டை இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.




# அநுரா:- சிங்கள பௌத்த தேசியவாதத்தின் அழுத்தங்களுக்கு அடி பணியக் கூடாது!

முள்ளிவாய்க்கால் அவலம் அரங்கேறி 16 வருடங்கள் கடந்துள்ள போதிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தமது பிரச்சினைகளுக்கு தீர்வின்றியும், இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி இன்றியும் அவலத்தை சந்தித்து வருகின்றனர். இந்த நிலையில் பேரழிவுகளை சந்தித்த தமிழ் மக்கள், உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற் கொண்டிருந்தனர்.




முள்ளிவாய்க்கால் முற்றத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்றுகூடி, அழுது புலம்பி தமது உறவு களை உணர்வு எழுச்சியுடன் நினைவு கூர்ந்தி ருந்தனர். இந்நிலையில் வழமைபோன்றே இம் முறையும் தெற்கில் வெற்றி விழா கொண்டாட்டம் இடம் பெற்றிருக்கின்றது.

யுத்தத்தில் உயிர் நீத்த படையினரை நினைவு கூரும் வகையில் ஜெயவர்தனபுர போர் வீரர்கள் நினைவுத் தூபி அமைந்துள்ள மைதானத்தில் 16ஆவது தேசிய போர் வீரர் வெற்றி நினைவு நாள் அனுஷ்டிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கிலும் புலம்பெயர்ந்த தேசங்களிலும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெற்றிருந்த நிலையில் தெற்கில் வெற்றி விழா இம்முறையும் கொண்டாடப்பட்டிருக்கிறது.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதையடுத்தே இறுதி யுத்தத்தின் போது படுகொலை செய்யப்பட்ட தமது உறவுகளை நினைவு கூருவதற்கு அன்றைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் அனுமதி மறுத்திருந்தது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கூட மக்கள் அனுஷ்டிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த வேளையில் தெற்கில் அன்றைய அரசாங்கத்தினால் தேசிய சுதந்திர தினத்தை விடவும் கோலாகலமாக இராணுவ வெற்றி விழா கொண்டாடப்பட்டு வந்தது.



பல்லாயிரக்கணக்கான மக்களை முள்ளிவாய்க்காலில் இழந்து தமிழ் மக்கள் தவித்து வந்த வேளையில், அந்த உறவுகளை நினைவு கூருவதற்கு அனுமதிக்காத அன்றைய அரசாங்கம், வெற்றி விழா வை மாத்திரம் வெகுகோலாகலமாக கொண்டாடியது. இந்த செயற்பாடானது பெரும் இழப்புகளை சந்தித்த தமிழ் மக்களுக்கு பெரும் வேதனையை அழிக்கும் விடயமாகவே இருந்து வந்தது.

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் மாற்றமடைந்ததை அடுத்து நல்லாட்சி அரசாங்கத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மேற் கொள்வதற்கான சூ ழ்நிலை ஏற்படுத்தப்பட்டது. ஆனாலும், படையினரை நினைவு கூரும் போர்வையில் வெற்றி விழா கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டு வந்தன.

வடக்கில் தமிழ் மக்கள் உயிரிழந்த உறவுகளை நினைவேந்தல் செய்த நிலையில் தெற்கில் அரசாங்கம் வெற்றி விழாவை கொண்டாடி வந்தது. இதிலிருந்து வடக்கும் தெற்கும் இரு துருவங்களாக பிரிந்திருந்தமை நிரூபணமாகி வந்தது.

தற்போது தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி இடம் பெற்று வரும் நிலையில் நாட்டில் இனங்களுக்கிடையே நல்லிணக்கம் கட்டி எழுப்பப்படும், யுத்த வெற்றி கோஷங்கள் இல்லாத செயற்பாடுகள் மேற் கொள்ளப்படும், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் மனங்கள் பாதிக்கப்படாதவாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றெல்லாம் கருதப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியானது யுத்தத்தின் கொடூரத்தை நன்கு விளங்கிய கட்சியாக செயற்படும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் மேலோங்கியிருந்தது. தாம் ஆட்சிக்கு வந்தால் இறுதி யுத்த த்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவோம், காணாமல் போனோரது பிரச்சினைக்கு தீர்வு காணப்படும், தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்றெல்லாம் தேசிய மக்கள் சக்தியினர் வாக்குறுதி வழங்கியிருந்தனர். அத்தகைய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும், நாட்டில் இனவாதமும் மதவாதமும் இல்லாது ஒழிக்கப்படும், இதன்மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற் படுத்த முடியும் என்றெல்லாம் தமிழ் மக்கள் எதிர் பார்த்திருந்தனர். ஆனால், தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும் படையினரை நினைவு கூர்வது என்ற போர்வையில் வெற்றி விழா நிகழ்வு இடம் பெற்றமையானது தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பெரும் கவலையை ஏற்படுத்தியிருக்கி ன்றது.

தெற்கில் இடம்பெற்ற வெற்றி விழாவில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்துகொள்ள மாட்டார் என்றே எதிர் பார்க்கப்பட்டது. இந்த விடயம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற எயார்வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொந்த கடந்த 18ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சில் செய்தியாளர் மாநாடொன்றினை நடத்தி அறிவிப்பினை விடுத்திருந்தார்.

16ஆவது தேசிய போர் வீரர் நினைவு தினம் கோட்டே ஸ்ரீ ஜெயவர்தனபுரவில் உள்ள தேசிய போர் வீரர் நினைவு தூபியில் இடம் பெறும் என்றும் இந்த நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சார்பில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் மேஜர் ஜெனரல் அநுர ஜெயசேகர கலந்து கொள்வார் எனவும் பாதுகாப்பு செயலாளர் அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பையடுத்து தேசிய போர் தின நிகழ்வில் ஜனாதிபதி பங்கேற்க மாட்டார் என்ற விடயம் வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு எதிரணியைச் சேர்ந்த பல்வேறு கட்சிகளும் எதிர்ப்புகளை தெரிவித்திருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொஜன பெரமுன, உதய கம்மன்பில தலைமையிலான பிவிதுரு ஹெலஉறுமய, விமல் வீரவன்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி என்பன ஜனாதிபதி நிகழ்வில் பங்கேற்காதிருப்பது குறித்து கடும் கண்டனங்களை தெரிவித்திருந்தன. இதனை விட பல்வேறு சிங்கள பௌத்த தேசியவாத அமைப்புகளும் தமது அதிருப்திகளை தெரிவித்திருந்தன. இத்தகைய அதிருப்திகளையடுத்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் தேசிய போர் வீரர் நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்திருந்தது. இதற்கிணங்க தேசிய போர் வீரர் நினைவு தினத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டிருந்தார்.

தேசிய நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையை கட்டியெழுப்பி நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும், அதற்கான செயற்பாடுகளில் ஈடுபடும் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில் தேசிய போர் வீரர் நினைவு தினம் வழமை போன்று இடம்பெற்றமையும் அதில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கலந்து கொண்டமையும் கடந்த கால அரசாங்கங்களைப் போன்றே தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் செயற்படுகின்றது என்ற எண்ணப்பாட்டை உருவாக்கியிருக்கின்றது.

இந்த நிகழ்வில் பங்கேற்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இங்கு உரையாற்றுகையில், அதிகாரம் மோகம் உடையவர்கள் வடக்கிலும் தெற்கிலும் மீண்டும் இனவாதத்தை தூண்ட ஆரம்பித்துள்ளனர். இனவாதம் தலைதூக்குவதற்கு இனி ஒரு போதும் இடமளிக்கப்பட மாட்டாது. காலத்துக்குக் காலம் அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் அதனை பாதுகாத்துக் கொள்வதற்காகவும் தாம் செய்த குற்றங்களை மறைப்பதற்காகவும் யுத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டியிருந்தார்.

தெற்கில் சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் அழுத்தம் அதிகரித்து வருகின்றது. படைவீரர் நினைவு தின கொண்டாட்டம் தொடர்பில் அவர்கள் வெளிப்படுத்திய கருத்துகள் மற்றும் ஜனாதிபதிக்கு எதிரான அவர்களின் செயற்பாடுகள் என்பன இதனை உணர்த்துவதாக உள்ளன.

சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் அழுத்தத்துக்கு அடிபணியும் நிலையில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உள்ளதோ என்ற சந்தேகத்தை தேசிய போர் வீரர் நிகழ்வில் ஜனாதிபதியின் பங்கேற்பு ஏற்படுத்தியிருக்கின்றது.

முதலில் அந்த நிகழ்வில் பங்கேற்பதில்லை என்ற எண்ணத்திலிருந்த ஜனாதிபதி, சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் எதிர்ப்புகளை அடுத்து இந்நிகழ்வில் பங்கேற்றாரா என்றும் கேள்வி எழுப்பப்படுகின்றது.

கடந்த கால வரலாற்றை எடுத்துக் கொண்டாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயத்தில் முயற்சிகள் எடுக்கப்பட்ட போது சிங்கள பௌத்த (16ம் பக்கம் பார்க்க)

# 14வது ஆண்டில் வாசகர்களின் ஆதரவோடு ஈழநாட்டின் அறப்பணி

## உறவுகளே! மே மாதம் உணவளிக்க முன் வாருங்கள்!

அன்பு இல்லம் - பாரதி இல்ல நிர்வாகசபை உறுப்பினர்கள்.
தலைவர்- வைத்திய கலாநிதி து.வி.ஜெயகுலராஜா
செயலாளர்- திரு.எஸ்.கிருஸ்ணமூர்த்தி (கிராமசேவையாளர்)
பொருளாளர்- திரு.சு.கபிலன் (கிளிநொச்சி)
உபதலைவர்- திரு.பரமேஸ்வரன் (வற்றாப்பளை அம்மன் ஆலய நிர்வாகி)
உபசெயலாளர்- செல்வி சி.கவிதா (முல்லைத்தீவு)
பதவிக்கால போசகர்-திரு த.செ.பத்மநாதன்
இணைப்போசகர்-திரு.ச.சரத்சந்திரன்

அன்புத் தமிழ் நெஞ்சங்களே! ஆயிரம் கோடி வணக்கங்கள்! குழந்தைகள் எல்லோரும் தெய்வத்திற்கு சமன். ஆதரவற்ற குழந்தைகளுக்கு நாம் செய்யும் பணி தெய்வத்திற்கு செய்யும் பணிக்கு சமன். சிறார்கள் வாழும் நிலையமும் ஒரு கோவில் தான்.

இந்தக் குழந்தைகளுக்கு தாய், தந்தை, உறவுகள் என்று எவருமே இல்லை. அவர்களின் தாய் தந்தையர்கள் போரின் போது உயிரை இழந்து விட்டனர். சிலர் காணாமல் போய் இன்னும் திரும்பி வரவில்லை. இன்று யார் இந்தப் பிள்ளைகளுக்கு உதவுகின்றார்களோ அவர்களே தாயுமாகி தந்தையுமாகி தெய்வமுமாகி நிற்கின்றார்கள்.

அந்த வகையில் நீங்களும் உங்கள் அன்புக் குரியவர்களின் நினைவாக உங்கள் பிறந்தநாள், பிள்ளைகளின் பிறந்தநாள், திருமண நன்நாள், அன்புக்குரியவர்களின் நன்நாள் என வருடத்தில் வரும் ஒரு நாளில் உணவுக்கு உதவுவதன் மூலம் அந்தக் குழந்தைகளுக்கு வாழ்வளியுங்கள்.

ஆயிரம் கோவில்களில் அன்னதானம் கொடுப்பதை விட கோடி புண்ணியம் உங்கள் வாசல் கதவைத் தேடி வரும் என்பதை மறவாதீர்கள். நாம் மனிதர்களாகப் பிறந்ததிற்கு ஓர் அர்த்தம் தேவை. மற்றவர்களுக்கும் சிறு உதவிகளை செய்வதன் ஊடாக கொஞ்சம் புண்ணியத்தையும் தேட வேண்டும்.

இளம் தளிர்களை எப்படி பராமரிக்கின்றோம் என்பதில் தான் அவர்களின் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. உங்களால் முடிந்தளவு நன்கொடையை இந்த அன்பு இல்லக் குழந்தைகளுக்கு வழங்குங்கள்.

14 வருடங்களுக்கு முன் 86 குழந்தைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட அன்பு இல்லத்தில் இன்று 423 குழந்தைகள் இருக்கிறார்கள். இவர்களில் 36 பேர் மாவீரர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். பலர் போராளிகளின் பிள்ளைகள். அத்துடன் போரின் கொடுமையால் பெற்றோரைப் பறி கொடுத்தவர்கள் மட்டுமல்ல உறவுகளால் வாழ்க்கையைத் தொலைத்தவர்கள் கல்வியைத் தொலைத்தவர்கள் என பலரும் அடங்குகின்றனர்.

இவர்களுடைய உணவுத் தேவையை மாத்திரம் கனடா வாழ் அன்புத் தமிழ் மக்களாகிய உங்களை நம்பி நாம் பொறுப்பேற்று கடந்த 14 ஆண்டுகளாக சிறப்பாகச் செய்து வருகின்றோம். மூன்று வேளையும் நேர காலம் தவறாமல் சைவம் அசைவம் என அட்டவனைப்படுத்தி சிறப்பு உணவு வழங்கி வருகின்றோம்.

ஜனவரி 2017 முதல் ஒரு நாள் முழுவதுக்குமான உணவுக்காக குறைந்த பட்சம் 200.00 டொலர்களை மாத்திரமே நாம் உங்களிடம் வேண்டி நிற்கின்றோம் என்பதை உதவி செய்யும் அன்பர்கள் கவனத்தில் கொள்க.

உங்களது உதவிகள் அனைத்தும் சரியான நேரத்தில் அவர்களைச் சென்றடைந்து உங்களது நிகழ்வுகள் சரியான திகதியில் நடைபெறும் என்பதை பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றோம். உங்கள் உதவிகள் சரியான நேரத்தில் சென்றடைகின்றது என்பதை நீங்கள் அறிந்து கொள்ளும் ஒரு குறியீடாகவே போட்டோக்கள் 11ம் பக்கத்தில் பிரசுரமாகின்றன.

அன்புக்குரியவர்களே! மீண்டும் கூறுகின்றோம் உங்கள் வாழ்வில் - உங்கள் மனதில் பதிந்துள்ள இன்ப நாட்களை - நினைவு நாட்களை எண்ணி அன்றைய நாளில் இந்தப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குங்கள். வருடத்தில் ஒரு நாள் உணவு வழங்குவதற்கு முற்பதிவு செய்யுங்கள். அன்பளிப்பை 5 நாட்களுக்கு முன் தந்து உதவுங்கள். இவ்வாறு நீங்கள் உதவி செய்தால் எமது பணியை சீராகச் செய்ய முடியும் என்பதோடு எமக்கும் ஓர் நம்பிக்கையும் உற்சாகமும் பிறக்கும். அந்தப் பிள்ளைகளுக்கும் தங்கள் வாழ்வு ஒளி மயமாக மாறுகின்றது என்ற எண்ணம் வரும்.

புலம் பெயர்ந்த மனிதாபிமானம் உள்ளவர்கள் - மனித நேயம் உள்ளவர்கள் இருக்கும் வரை நாம் அநாதைகள் அல்ல என்ற நம்பிக்கை அவர்களுக்கு வளரும். இந்த நம்பிக்கை தான் அவர்களது வாழ்க்கை. அந்த நம்பிக்கையை நாம் உங்களது பெரும் உதவியோடு தாராளமாக ஏற்படுத்தியுள்ளோம். அதனைத் தொடர்ந்து செய்வதற்கு எம்மோடு இணையுங்கள்.

எங்கள் இனத்திற்காக - எங்கள் வாழ்வுக்காக மரணித்த அந்த மக்களின் பிள்ளைகளை - மாவீரர்களின் குழந்தைகளை பட்டினியால் வதைக்கலாமோ?

ஒரு கணம் சிந்தியுங்கள் உறவுகளே! அந்தப் பிள்ளைகளின் பெற்றோரின் உயிர்த் தியாகம் தான் இங்கு எங்களது வாழ்வுக்கு வழி கோலியது என்பதை ஒரு கணம் சிந்திப்போமாக.

"தர்மம் தலை காக்கும்" "கோடி புண்ணியம் தேடி வரும். ஆயிரம் கோவில்களுக்குச் சென்று வழிபடுவதிலும் அன்ன தானம் வழங்குவதை விட உங்கள் பெயரால் பசியாறும் அந்தக் குழந்தைகளின் வாழ்த்து உங்களை ஆசீர்வதிக்கும்.

23 மே 2025 - 30 மே 2025 வரையான நாட்களில் உணவுக்கு உதவியவர்களின் நிகழ் வின் தொகுப்பு 11ம் பக்கத்தில் உள்ளது.

கனடியத் தமிழ் சமூகத்தின் மகத்தான ஆதர வோடு கடந்த செப்டம்பர் முதல் 14வது ஆண்டில் எமது அறப்பணி தொடர்கிறது என்ற மகிழ்வான செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.

**மேலதிக விபரங்களுக்கு:-**

**ஈழநாடு பரமேஸ் 416 841 9600**

## 8வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி

வேலணை தலைகாட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டி ருந்த திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி (இளைப்பாறிய ஆசிரியை) அவர்களது எட்டாவது ஆண்டு நினைவு நாள் 17 மே 2025 சனிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி திலகவதி திருஞானசம்பந்தமூர்த்தி அவர்களை நினைவு கூரும் அன்னாரின் குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம்

யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர், லண்டன், மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கனடா மிஸிசாகாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாள் 18 மே 2025 ஞாயிற்றுக்கிழமையாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 6வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு நாகலிங்கம் முத்தையா

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகலிங்கம் முத்தையா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாள் 30 மே 2025 வெள்ளிக்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு நாகலிங்கம் முத்தையா அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் செஞ்சோலைஇல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி குமாரதாசன் விஜயகௌரி

இணுவில் கிழக்கு இணுவிலைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களின் 21வது ஆண்டு நினைவு நாள் 22 மே 2025 வியாழக்கிழமையாகும் அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்கு சிறப்பு உணவு வழங்கினார்கள். திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களை நினைவு கூர்ந்து பிரார்த்திக்கும் அன்னாரது குடும்பத்தினருடன் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 4வது ஆண்டு நினைவஞ்சலி



### திரு கோபிநாத் கணேசமூர்த்தி

புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அமரர் திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது நான்காவது ஆண்டு நினைவுநாள் 27 மே 2025 செவ்வாய்க்கிழமையாகும். அன்றைய தினம் அன்னாரது நினைவாக அவரது பெற்றோர்களும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

## 21வது ஆண்டு நினைவஞ்சலி



### செல்வி நாகம்மா கணபதிப்பிள்ளை

மறவன்புலவு சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வி நாகம்மா கணபதிப்பிள்ளை அவர்களது 21வது ஆண்டு நினைவு நாள் 28 மே 2025 புதன்கிழமையாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது நினைவாக அவரது குடும்பத்தினரும் உறவுகளும் இணைந்து பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள். செல்வி நாகம்மா கணபதிப்பிள்ளை அவர்களை நினைவு கூர்ந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் பாரதி இல்லக் குழந்தைகளும் ஈழநாடு பத்திரிகை வாசகர்களும் இணைந்து ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றார்கள்.

# அன்பு இல்லக் குழந்தைகளுக்கு இந்த வாரம் உணவளித்து அவர்களின் தாயுமாகி தந்தையுமாகிய கனடா வாழ் கருணையாளர்கள்




04 மே 2025 ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு தர்சன் சொர்ணலிங்கம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை மூளாயைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி பரமேஸ்வரி கங்காதரன் அவர்களது 23வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




11 மே 2025 ஞாயிற்றுக்கிழமை சித்திரா பௌர்ணமி விரத உபயமாக புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த திருமதி பாக்கியம் சின்னையா அவர்களை நினைவு கூர்ந்து அன்னாரது குடும்பத்தினர் பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




13 மே 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் திரு திருமதி கோணேஸ்வரன் சுதர்சினி தம்பதிகளின் செல்வப்புதல்வி சௌமியா கோணேஸ்வரன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் செல்வி சௌமியா  தனது பெற்றோர்களுடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




13 மே 2025 செவ்வாய்க்கிழமை கனடாவில் வசிக்கும் இசை ஆசிரியை ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்களது பிறந்த நன்நாளாகும். அன்றையதினம் ஸ்ரீமதி சாருமதி மனோகாந்தன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் இணைந்து அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்.




16 மே 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 3ம் வட்டாரம் குறிகாட்டுவானைச் சேர்ந்த பொறளை பாலன் என்று அன்பாக அழைக்கப்படும் திரு கனகசபை பாலசிங்கம் அவர்களது 59வது ஆண்டு நினைவு தினமாகும். அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




16 மே 2025 வெள்ளிக்கிழமை கனடா Exevitive woodwork Ltd ஊழியர்கள் செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கி மகிழ்ந்தார்கள்.




18 மே 2025 ஞாயிற்றுக்கிழமை யாழ்.கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் சிங்கப்பூர் லண்டன் மலேசியா ஆகிய இடங்களை வதிவிடமாகவும் பிரம்டன் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திருமதி சாந்தகுமாரி சுப்பிரமணியம் அவர்களது 4வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 மே 2025 திங்கட்கிழமை சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த செல்வன் சிவசுப்பிரமணியம் சிவசங்கர் (குலம்) அவர்களது 27வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய தினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




19 மே 2025 திங்கட்கிழமை நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த சங்கீதபூஷணம் திருமதி தில்லைநாயகி கனகரெத்தினம் அவர்களது முதலாவது ஆண்டு நினைவு நாளாகும்.  அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




22 மே 2025 இணுவில் கிழக்கு இணுவிலைச் சேர்ந்த திருமதி குமாரதாசன் விஜயகௌரி அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம்  அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




27 மே 2025 செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு 12ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு கோபிநாத் கணேசமூர்த்தி அவர்களது நான்காவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றைய நாளுக்காக அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவக 29 மே 2025 வியாழக்கிழமை பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்.




28 மே 2025 புதன்கிழமை மறவன்புலவு சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வி நாகம்மா கணபதிப்பிள்ளை அவர்களது 21வது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக அன்பு இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




28 மே 2025 புதன்கிழமை கனடாவைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்டிருந்த செல்வன் விதுசன் சச்சிதானந்தன் அவர்களது மூன்றாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக பாரதி இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்




30 மே 2025 வெள்ளிக்கிழமை புங்குடுதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்.மருதனாமடத்தை வதிவிடமாகவும் கனடாவை வாழ்விடமாகவும் கொண்டிருந்த திரு நாகலிங்கம் முத்தையா அவர்களது ஆறாவது ஆண்டு நினைவு நாளாகும். அன்றையதினம் அன்னாரது குடும்பத்தினர் அவரது நினைவாக செஞ்சோலை இல்லக் குழந்தைகளுக்குச் சிறப்பு உணவு வழங்கினார்கள்

NISHANTHAN LAW OFFICE
Umananthini Nishanthan (LL.B)
Barrister & Solicitor and Notary Public
Cell: 647-535-6365
Tel: 416-289-9229
Fax 1-800-878-1348
39 Devonshire Avenue
Markham Ontario L3S3P2
office@nishanthanlaw.onmicrosoft.com
www.nishanthanlaw.com

Vijaya Jewellery
3341, Markham Road, Unit 127 Scarborough ON m1x0A5
+1 (437) 833-3197, (647) 329-3062
Email:yugan14@hotmail.com

Century 21
Innovative Realty Inc.
Jude GNANENDRAN
Sales Representative
416-827-2347 Direct
jude.gnanendran@century21.ca
www.century21jude.com
2250 Markham Road, Unit 3, Toronto ON M1B 2W4
Office: 416-298-8383 Fax: 416-298-8303



நந்தா உணவகம்
NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421

#1 RE/MAX
Outstanding Agent for Outstanding Results.
In Your Neighbourhood Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
DIR: 416-333-6115
nanohomes@gmail.com
RE/MAX Excel Realty Ltd., Brokerage



ஈழநாடு பத்திரிகையின் 32வது
ஆண்டுவிழா சிறப்புற நடைபெற
வாழ்த்துகின்றேன்.
சாந்தா பஞ்சலிங்கம்
416 200 5470
(முன்னாள் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத் தலைவர்)



நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா



ஈழத் தமிழினத்தின் செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை

## வேர்களைத் தேடுங்கள்

கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்



# சங்கீத சங்கமம் 2025

SUNDAY JUNE 01 2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

அன்பளிப்பு
VIP $100 $50

குறிப்பு: விழா சரியாக பிற்பகல் 5:30 மணிக்கு ஆரம்பமாகும். தயவு செய்து நுழைவுச் சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும். மண்டப வாசலிலும் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். நேரடி ஒலி-ஒளி பரப்பு இல்லை.

தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ், 416-841-9600 • eelanadu1993@gmail.com



MORTGAGE LOAN
ALMOST ALL SERVICES AVAILABLE
J.R.B UNIVERSAL INC.
Business Loan Business (Visa MC)
Best Rate Mortgage in Town, Bad Credit New Immigrants bankruptcy, 0% Down Payment.
1st, 2nd & 3rd Mortgage upto 100%
Loans, Mortgages, Insurances, RESP Real Estate, Credit Counseling Accounting and Tax Services
R.R.Rajkumar
Call for More Info
647-289-6164



Chapel Ridge
Funeral Home & Cremation Centre
Vilosan Sivatharman, B.Eng
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone: (416) 993-0826
Fax: (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மாடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com



INCOME TAX SERVICE
PERSONAL, SMALL BUSINESS, UNINCORPORATED AND INCORPORATED TAXES, TAXES AND ASSOCIATED SERVICES
THANAM KANAGARATNAM
Tax Analyst
416.298.6718
1080 Tabscott Rd, Unit 5
Scarborough, ON M1X 1E7

Ontario அரச அங்கீகாரம் பெற்ற முதன்மை நிறுவனம் ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை அடகுமாடம்
தங்க நகைக் கடன் மிகக் குறைந்த வட்டி விகிதத்தில் வழங்கப்படும்
தொடர்புகட்கு 416-754-7198
At Woodside Square Mall, 1571 SANDHURST CIRCEL #159D [Finch & McCowan] Scarborough, ON
2613 EGLINTON AVE, [Brimley & Eglinton] Toronto, ON



Sri Nadarajasundram
Real Estate Broker
416-276-6666 srinada21@gmail.com
RE/MAX ACE

AJITH SABARATNAM
INSURANCE & INVESTMENTS INC.
Ajith Sabaratnam
Cell: 647.401.5800
email:ajithsaba@gmail.com
10 THORNMOUNT DR
SCARBOROUGH,
ONTARIO M1B 3J4
Tel: 416.439.2800

Cash Point
PAWN BROKERS
$1000 $20/month
3852 Finch Ave. E. Unit G03, Scarborough, ON. M1T 3T9
Tel : 416-284-7000

உங்கள் அனைத்து விதமான சட்ட ஆலோசனைகளுக்கும் நம்பிக்கையுடன் நாடுங்கள்!
SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION
T: 416-949-0404
F: 416-948-0303
Vivekananthan Sasitharan - Rajabalini Sasitharan
Barristers, Solicitors & Notaries Public
10 Milner Business Court, Suite # 709, Scarborough Ontario, M1B 3C6

நியூ ரங்கனாஸ்
தங்கச்சுரங்கம்
சிங்கப்பூர்,டுபாய் தங்க நகைகளை
கோடைகால சிறப்புத் தள்ளுபடி விலையில்
கொள்வனவு செய்ய அரிய சந்தர்ப்பம்.
Cash for Gold
Pawning & Money Transfer
New Ranganas Jewellery
Markham & Steeles,Yellow Building,6055 Unit C-102
Scarbrough,ON M1X 0A7 - Canada. 647 702 2159

VIBRANT HOSPITALITY GROUP
Shankar Nallathamby
905.769.1509 | 1.888.674.7770
vibranthospitalitygroup.com

TIMES IRON WORKS INC.
Fabricators & Erectors
Times Metals Sales





நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை




கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்

# சங்கீத சங்கமம் 2025



# வேர்களைத் தேடுங்கள்

SUNDAY
JUNE 01
2025

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

அன்பளிப்பு
VIP $100 $50

குறிப்பு: விழா சரியாக பிற்பகல் 5:30 மணிக்கு ஆரம்பமாகும். தயவு செய்து நுழைவுச் சீட்டுடன் மண்டபத்திற்கு வரவும். மண்டப வாசலிலும் நுழைவுச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ளலாம். நேரடி ஒலி-ஒளி பரப்பு இல்லை.

தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ், 416-841-9600 • eelanadu1993@gmail.com


Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE
FUNERAL ARRANGEMENTS
OF YOUR LOVED ONES
Funeral Director
S. Christeen
416-258-6759

PACELAW
Over 40 years of putting our clients first
Call Us Today
647-968-7059
Poorany Sornabala
BD Specialist
Desmond Sornabala
Paralegal
Get In Touch
191 The West Mall Suite 1100
Toronto ON, M9C 5K8
psornabala@pacelawfirm.com
www.pacelawfirm.com
Personal Injury
Corporate & Commercial
Immigration
Family Law
Real Estate
Wills and Estates
Employment Law
Civil Litigation
Criminal Defence Law
Business Facilitation Services

விழா சிறப்புற வாழ்த்துகிறோம்
Netwyn
www.netwyn.com
Kula Sellathurai
CEO
10 Thornmount Drive
Scarborough, ON M1B 3J4
D: 416.902.9462
O: 416.906.1414
kula@netwyn.com

CSC Credit Solution Centre
Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
Main Branch Scarborough
309-80 Corporate Dr
Scarborough, ON
M1H3G5
Mississauga Branch
45-2355 Derry Road
Mississauga, ON
L5S1V6
creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com
Tel: 416 439 0224
Fax: 416 439 0226

N.K.S
DRAPERY & BLINDS FABRIC
•Custom Made Vertical Blinds •Venetian Blinds •Draperies
•Curtain •Shutters •Roller Blind
Contact: Ketha
416-321-6420
210 Silver star Blvd, Unit # 825, Scarborough, ON M1V 5J9
Email:Info@nksdrapery.com Web:www.nksdrapery.com

# உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்:- ஆணையை மதிப்பார்களா தமிழரசும் காங்கிரசும்?

1.ஈழத்தமிழ் மக்களுக்கான நிலையான அரசியல் தீர்வு காணப்படும்வரை தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டியது அவசிய, அவசரத் தேவையாகும்ஃ.

2.இத்தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள கட்சிகளுக் கிடையில் ஐக்கியம் மற்றும் ஒருங் கிணைந்த செயற்பாட்டுக்கான கதவு களைத் திறப்பதாக அமைய வேண் டும்.

3.அ. இத்தேர்தல் முடிவுகள் எமது தாயகத்தின் மீதான ஆட்சியாளர்களின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக் கூடியதாக அமைய வேண்டும்.

ஆ. நாடாளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி. என்ற மாயமானை ஆதரி த்ததன் மூலம் தவறாக எழுதப்பட்ட விதியை திருத்தி எழுதுவதற்கான தவற விடக்கூடாத சந்தர்ப்பம் இது வாகும். (ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் உள்ராட்சித் தேர்தல் அறிக்கையின் சில முக்கிய அம்சங் கள்)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் ஏறத்தாழ மேற்கண்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அரசியல் அறிக்கை வெளிப்படுத்திய கருத்து க்களை அங்கீகரிக்கும் வகையிலேயே அமைந்துள்ளமை குறிப்பிடத் தக்கது.

வடக்கு கிழக்கில் இலங்கைத் தமிழ ரசுக் கட்சி 3 ஆசனங்களை வென்று ள்ள அதேவேளை வடக்கில் கிளி நொச்சி மாவட்டத்திலுள்ள சபைகள் தவிர ஏனைய சபைகள் எதிலும் ஆட்சியமைப்பதற்கான பெரும்பான் மையைக் கொண்டிருக்கவில்லை. ஏனைய கட்சிகளின் ஆதரவுடனேயே ஆட்சியமைக்க முடியும். அதேபோல் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி யானது வடக்கு கிழக்கில் 109 ஆசனங்களை பெற்றிருக்கும் அதே வேளை வவுனியா மாநகர சபையில் மட்டுமே முன்னிலை வகிக்கிறது. வலி தெற்கு, மானிப்பாய், வலி கிழக்கு, சாவகச்சேரி, மன்னாரில் ஓர் சபை என சில சபைகளில் 5 அல்லது 6 ஆசனங்களைப் பெற்று ஓரளவு வலுவாக உள்ளது. இங்கு ஏனைய கட்சிகள் ஆதரித்தால் மட்டுமே ஆட்சி அமைக்க முடியும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிர சைப் பொறுத்தவரை வடக்கில் 9 உட்பட 84 வரையான ஆசனங் களைப் பெற்றுள்ளது. இதுவும் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, சாவகச்சேரி நகர சபைகளில் முன்னிலை வகிக்கின்றன. ஏனைய கட்சிகளின் ஆதரவின்றி இக்கட்சியும் எந்த சபையிலும் ஆட்சி அமைக்க முடியாது. நல்லூரில் மட்டும் தமிழ் மக்கள் கூட்டணி ஏனைய கட்சி ஏதுடனும் சேர்ந்து ஆட்சி அமை க்கக்கூடிய வலுவான நிலையில் உள்ளது. இதுவே தேர்தல் முடிவுகள் வெளிப்படுத்தும் நிலைப்பாடாகும். அதாவது மூன்று கட்சிகளுக்கும் மக்கள் வழங்கிய ஆணைக்கு மூன்று தரப்பும் உரிய மதிப்பினை வழங்கி வடக்கு கிழக்கின் அனைத்து சபை களையும் நீதியாக பகிர்ந்து கூட்டாக நிர்வகிக்க வேண்டும் என்பதே மக்களின் ஆணை.

இந்த யதார்த்தத்தின் பின்னணியில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஆதரவை கோரி நிற்கும் தமிழரசுக்கட்சி மற்றும் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவற்றின் நிலைப்பாடுகள் பற்றி நோக்கலாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரை தாம் முன்னிலை வகிக்கும் இடங்கள் அனைத்திலும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஆதரவு தர வேண்டும் என்ற நிலைப்பாட்டினையே வெளிப் படுத்தி வருகின்றனர். இங்கு தமக்கே மக்கள் ஏனைய கட்சிகளை விட அதிக ஆசனங்களை வழங்கியுள்ளனர் என்ற குறுகிய பார்வை மட்டுமே வெளிப்படுத்தப்படுகிறதே தவிர தமக்கு தனியாக ஆட்சியமைக்கும் ஆணையை மக்கள் வழங்கவில்லை என்ற பரிமாணத்தை மறைக்கின்ற னர். அல்லது மறுக்கின்றனர். அதேவேளை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு மக்கள் வழங்கிய ஆதரவையும் ஆணையை யும் கூட ஏற்க மறுக்கின்ற மனோ பாவமே வெளிப்படுத்தப்படுகிறது.

பொதுவாக ஒற்றுமை என்பது பரஸ்பர விட்டுக்கொடுப்புகள் மூலமே சாத்தியமாகும். ஓர் கட்சி இன்னோர் கட்சியை கருவேப்பிலை போல் பயன்படுத்த முனையும் அணுகு முறை வலுவான ஒற்றுமைக்கு வழிவகுக்காது. உள்ராட்சி சபைகள் அனைத்தையும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்படும் கட்சிகளே கைப் பற்ற வேண்டும் அல்லது அவர் களது ஆட்சியே அமைக்கப்பட வேண்டும் என்ற சாரப்படவே தமிழரசுக்கட்சியின் சுலோகமும் அமைந்திருந்தது. நாடு யாரோடும் இருக்கட்டும் ஊர் எம்மோடு என்ற கோசத்தின் அர்த்தம் அதுவே.



ஆனால் மக்கள் ஏனையவர்களுடன் சேர்ந்து ஆட்சியமைக்கவே ஆணை வழங்கியுள்ளனர் என்பதை ஏனை யோர்க்கும் அதே ஆணையை வழங்கியுள்ளனர் என்பதையும் மறுப்பது சபைகள் அனைத்தையும் பகிர்ந்து கூட்டாக ஆட்சியமைக்க மக்கள் இட்ட ஆணையை மறுப்ப தாகும். ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியைப் பொறுத்தவரை 109 ஆசனங்களை மக்கள் தமக்கு வழங்கிய ஆணைக்கு தமிழரசு மதிப் பளிக்கும் வகையில் தாம் ஓரளவு வலுவாக உள்ள மானிப்பாய், கோப் பாய் (வலி கிழக்கு), சாவகச்சேரி மற்றும் மன்னார் மாவட்டத்தில் மாந்தை மேற்கு பிரதேசசபை ஆகிய நான்கு பிரதேச சபைகளிலும் தாம் ஆட்சியமைக்கும் வகையில் தமிழரசுக் கட்சி ஆதரவு வழங்க வேண்டும்.

ஏனைய சபைகளில் தமிழரசுக்கு ஆதரவு வழங்குவதாகவும் தெரிவிக்க ப்பட்டுள்ளது. மேலும் தமிழ்க் காங்கி ரசுடனும் பேசுவதன் மூலம் அவர்கள் முன்னிலை வகிக்கும் இடங்கள் தொடர்பாகவும் முடிவெடுத்து செயற் படுவதே எதிர்கால நகர்வுகளுக்கு பலம் சேர்க்கும் என்றும் தமிழரசிடம் கூறப்பட்டுள்ளது. எனினும் ஜனநாய கத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் முதற்கோரிக்கைக்கு தமிழரசு இன்ன மும் பதிலளிக்கவில்லை. இருதரப்பும் முடிவுக்கு வந்தபின் மூன்றாவது (காங்கிரஸ்) தரப்புடன் பேசலாம் என்ற நிலைப்பாட்டையும் வெளிப் படுத்தியுள்ளனர். இக்கட்டுரை எழுதப் படும் வரை தமிழரசு பதிலளிக்காமல் இருப்பது வழமை போல் காலத்தை விரயமாக்கி மக்கள் எதிர்பார்க்கும் அர்த்தமுள்ள ஒற்றுமையை உரு வாக்குவதற்கு பதிலாக தமது கட்சி சார்ந்தவர்களை தவிசாளர் போட்டி க்கு களமிறக்குவதன் மூலம் தேசிய மக்கள் சக்தி வந்து விடக்கூடாது என்ற பொதுக் கொள்கையின் அடிப் படையில் வேறு வழியின்றி தமக்கே ஆதரவளிப்பர் என்ற சூழ்நிலைக் கைதியாக்கி சபைகளைத் தானே கைப்பற்றும் குறுகிய தந்திரோபாய த்தை செயற்படுத்த முனைவதாகவே தோன்றுகிறது. ஒவ்வொரு கட்சிக்கு மான மக்கள் ஆணையை ஏனைய இரு கட்சிகளும் மதித்து புரிந்து ணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் செயற்படுவதே தொடர்ச்சியான அரசி யல் நகர்வுகளுக்கேற்ற ஒற்றுமைக் கட்டமைப்பை வழங்க முடியும்.

சபைகளைக் கைப்பற்றுவது மட்டுமே இலக்கு என்ற அடிப்படை யில் புரிந்துணர்வற்ற குறுக்கு வழிகளில் அமைக்கப்படும் ஆட்சிகள் உறுதியாக நிலைத்திருக்க முடியாது. தேர்தல் முறைமையும் மக்கள் ஆணையும் பல்வேறு தரப்பினரையும் வெற்றி பெற வைத்துள்ளது. கடந்த உள்ராட்சி சபைகள் மாறி மாறிக் கூட்டணி சேர்ந்து ஆளும் தரப்பு களை மாறி மாறி கவிழ்ப்பது நாட ளாவிய வகையில் நடந்ததே அனுபவம். தமிழரசுக் கட்சி குறுக்கு வழிகளில் ஆட்சியமைக்க முயன் றாலோ, அமைத்தாலோ ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கான மக்களா ணையை மதிக்கத் தவறினாலோ சிங்கள மேலாதிக்க சக்திகளின் தொட ர்ச்சியான வளர்ச்சிக்கு அடித்தளமிடு வதாகவே அமையும்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிர சைப் பொறுத்தவரை ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து சபைகளைப் பொறுப் பேற்பது என்ற வகையில் அவர்களது அணுகுமுறை அமையவில்லை. யதார்த்தத்தில் யாழ். மாவட்டத்தில் இரு தரப்பும் இணைந்து செயற் பட்டால் பல சபைகளைக் கைப்பற்ற முடியும். எனினும் ஒற்றையாட்சியை நிராகரிக்கிறம், தமிழ் மக்கள் பேரவை யின் அரசியல் தீர்வுத் திட்டத்தையே ஆதரிக்கிறொம். 13வது திருத்தத்தை ஏற்க மாட்டோம் என்ற நிலைப் பாட்டை ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி எடுக்க வேண்டும் என்ற கோரிக்கை மட்டுமே முன்வைக்கப் பட்டது. 13 வது திருத்தம் என்பது நடைமுறையில் உள்ள விடயம் புதிய கோரிக்கை அல்ல என்ற கருத்து தெரிவிக்கப்பட்டது.

மேலும் தமிழ்மக்கள் பேரவையின் தீர்வுத்திட்டம் என்பது புதிய அரசியல் யாப்பு வருமானால் மட்டுமே பேச முடியும் என்பதுடன் 13ம் திருத்தத்தையே இல்லாதொழிக்க முயலும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்கள் சமடியை ஏற்றுக்கொள்ள வைக்க

**கட்டுரையாளர்**
**கொழும்பில் இருந்து**
**பேரா. சர்வேஸ்வரன்**



ஆக்கபூர்வமான சக்திமிக்க சர்வதேச தலையீடு அவசியம். எனவே இது பற்றிய முடிவுகளை முக்கிய தரப்பு களுடன் பல சுற்று பேச்சுவார்த்தை யின் பின்பே எடுக்க முடியும். அத்தகைய பேச்சைத் தொடரலாம் என பதிலளிக்கப்பட்டுள்ளது. காங் கிரஸ் கட்சி தமிழரசுடன் இதுவரை நேரடியாக பேசியதாக இல்லை.

இங்கு தமிழரசுக்கட்சி சபைகள் அனைத்தையும் கைப்பற்றும் பதவி மோகத்தை மட்டுமே மையமாக வைத்து செயற்படுவதையும் காங் கிரஸ்கட்சி யதார்த்தத்திற்கப்பாற்பட்ட நிலைப்பாடுகளை முன்வைத்து தன்னைத் தனித்துவமான விடாப்பிடி யான கொள்கைப்பற்றாளன் என்ற மாயையை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல முனைவதையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இனமோதல் தீர்வுக்காக தொடர்ச்சி யாக ஒன்றுபட்டுச் செயற்படுவதற்கான அடித்தளங்களை இடுவதற்கான இவ் வாய்ப்பை நிராகரித்து பதவி மட்டுமே என்ற நிலைப்பாடானது ஒருவகை முடமானது. அதேபோல் ஒன்றுபட்டு செயற்படுவதற்கான மக்கள் ஆதர வைப் பெறும் தளங்களை பயன்படுத் துவதை நிராகரித்து கொள்கை மட்டுமே பேசிக் கொண்டிருப்பதும் ஒருவகை முடமே.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்ட ணியானது மூன்று கட்சிகளும் இணைந்து மக்களாணை அடிப் படையில் பரஸ்பர விட்டுக் கொடுப்பு களுடன் சபைகளைப் பகிர்ந்து வினைத்திறனாக அனைத்து சபை களையும் கையேற்பதென்பது மக்களை ஓரணியில் திரட்ட வழி வகுக்கும் என்பதுடன் இவ்வொன்று பட்ட செயற்பாடானது, இனமோதல் தீர்வில் ஒன்றுபட்டு பயணிப்பதற்கான உறுதியான தளங்களை இடும் வாய்ப் பாக அமையும் என்ற கருத்தையும் வெளிப்படுத்தி வருகிறது.

இங்கு கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் தமிழ்த்தலைமைகள் மீது விரக்தியுற்று கடந்த நாடாளு மன்றத் தேர்தலில் ஜே.வி.பி.க்கு வாக்களித்த மக்கள் இத்தேர்தலில் ஒன்றுபட்டு செயற்படுவதற்கு தமிழ்க் கட்சிகளுக்கு ஓர் வாய்ப்பை வழங்கி யுள்ளார்களே தவிர தமிழ்த் தலை மைகள் மீது முற்றாக நம்பிக்கை வைத்த விட்டார்கள் என மயங்கி விடக்கூடாது.

வடக்கு கிழக்கில் 244 ஆசனங்களு டன் ஜே.வி.பி. இரண்டாம் இடத்தில்
(16ம் பக்கம் பார்க்க)

# காணி நிலம் வேண்டும்!

காணி நிர்ணயக் கட்டளைச் சட்டத்தின் நாலாம் பிரிவின் கீழ் 28.03.2025 ஆம் திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலானது இலங்கைத் தீவின் இன முரண்பாடுகள் தொடர்பில் ஆகப் பிந்திய தலைப்புச் செய்தியாக மாறியிருக்கின்றது.

வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5.940 ஏக்கர் காணிகளை 3 மாத காலத்துக்குள் எவரும் உரிமை கோராது விடின் அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என மேற்படி வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவிலிருந்து வடமராட்சி கிழக்கு வரையிலுமான நீண்ட பிரதேசத்துக்குள் காணப்படும் காணிகளைக் குறித்த மேற்படி வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருக்கும் காணிகளில் கிட்டத்தட்ட அரைவாசிக்கும் குறையாதவை அடர் காடுகள், திறந்த வெளிச் சதுப்பு நிலங்கள், குளங்கள், ஆறுகள்,நீர்த் துளைகள்,வண்டில் பாதைகள்...என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆறுகள், குளங்கள், அடர் காடுகள், சிறுகாடுகள் சதுப்பு நிலங்கள், வண்டில்பாதைகள் போன்றவற்றுக்கு யார் யார் உரிமை கோருவார்கள்?

மூன்று தசாப்தங்களுக்கு மேலான யுத்தம் ஈழத் தமிழர்களை ஆவணம் காவிகளாக மாற்றியது. ஒவ்வொரு இடப்பெயர்வின் போதும், ஏன் புலப்பெயர்ச்சியின் போதும் கூட, ஈழத் தமிழர்கள் ஆவணங்களைக் காவுகின்றார்கள். இறுதிக் கட்டப் போரில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு வந்தவர்களுக்கு ஐநா முதலில் வழங்கிய பொருட்களில் ஒன்று ஆவணங்களைப் பாதுகாப்பதற்கான பிளாஸ்டிக் ஃபைல் பைகள் ஆகும்.

எனினும் இடப்பெயர்வின் அகோரம் காரணமாக ஈழத் தமிழர்கள் எல்லா ஆவணங்களையும் காவ முடிந்ததில்லை. இறுதிக் கட்டப் போரில் வன்னியில் வாழ்ந்தவர்கள் பலரிடம் அவர்களுடைய வீட்டில் நடந்த நல்லவைகள் கெட்டவைகள் தொடர்பான ஒளிப்பட ஆல்பங்கள் அனேகமாக இல்லை.

ஒரு பகுதியினரிடம் தமது தொழில் சம்பந்தப்பட்ட ஆவணங்களும் இல்லை. தொடர்ச்சியான இடப்பெயர்களின் போது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடுவதா அல்லது ஆவணப் பையைக் காவுதா என்று கேள்வி வரும் பொழுது, ஆவணங்கள் கைவிடப்படுகின்றன. இவ்வாறு கைவிடப்பட்ட ஆவணங்களில் காணி உறுதிகளும் உட்பட காணி தொடர்பான ஆவணங்கள் பல அடங்கும். இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெயர்வுக்கு உள்ளான ஒரு மக்களிடம் காணி தொடர்பான ஆவணங்களைக் கொண்டு வந்து குறிப்பிட்ட கால எல்லைக்குள் தமது உரித்தை நிரூபிக்குமாறு மேற்சொன்ன வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் கேட்டது போல கோவகணத்தோடு வந்த மக்களிடம் காணி உறுதி உண்டா என்று கேட்கும் வர்த்தமானி அது.

ஒருபுறம் இடப்பெயர்ச்சி, புலப்பெயர்ச்சி காரணமாக தமிழ்க் கிராமங்களும் வாழிடங்களும் இடம் மாறியுள்ளன. ஒரு பகுதி தமிழர்கள் புலம்பெயர்ந்து விட்டார்கள். இது மொத்த ஜனத்தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி வரும். இவ்வாறு புலம்பெயர்ந்த தமிழர்களில் பலருடைய காணிகளை அவர்கள் பராமரிப்பது இல்லை. நாட்டில் உள்ள உறவினர்கள் சிலர் பராமரிக்கிறார்கள். ஆனால் அதுவும் இப்பொழுது பல இடங்களில் சிக்கலாகி நீதிமன்றம் வரை வந்து விட்டது. காணிகளைப் பராமரிக்கும் இரத்த உரித்துச் சொந்தங்களே அந்த காணிகளை அபகரிக்க முற்பட்டு அதனால் வழக்குகள் நீதிமன்றங்களுக்கு வருகின்றன என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சொந்தச் சகோதரர்களின் காணிகளை அபகரிக்க முற்படும் வழக்குகளும் இதில் அடங்கும்.

புலம் பெயர்ந்த நாட்டில் செற்றில் ஆகிவிட்ட தமது உறவினர்கள் திரும்ப வரப்போவதில்லை, திரும்பி வந்து காணிகளையும் வீடுகளையும் ஆண்டு அனுபவிக்கப் போவதில்லை என்பதனால் அவற்றை நாங்கள் திருடினால் என்ன அபகரித்தால் என்ன என்று இங்குள்ள ஒரு பகுதி சொந்தங்கள் சிந்திக்கின்றன. இது தமிழ்ச் சமூகத்தின் சீரழிந்த பகுதிகளில் ஒன்று. இப்படிப்பட்டதோர் பின்னணியில் மேற்சொன்ன அரச வர்த்தமானியானது 5940 காணிகளை மூன்று மாத கால அவகாசத்துக்குள் உரிய ஆவணங்களோடு வந்து உரிமை கோருமாறு அறிவித்துள்ளது.



சில ஆண்டுகளுக்கு முன்பு பலாலியில் ஒரு காணி விடுவிப்பு நிகழ்வின் போது ஒரு படைத்தளபதி பேசிய விடயத்தை ஒரு சமயப் பெரியார் எனக்குச் சுட்டிக் காட்டினார். அந்தத் தளபதி கூறினாராம், தமிழர்கள் காணிகளை விடுவிக்குமாறு போராடுகிறார்கள். ஆனால் விடுவித்த காணிகளில் வந்து குடியமர்வது குறைவு என்று.

ஆனால் பலாலி என்ற கிராமமே இப்பொழுது வரைபடத்தில் மட்டும் தான் உண்டு, அது நடைமுறையில் இல்லை என்று பலாலியில் பிறந்தவர்களும் பலாலியில் வாழ்ந்தவர்களும் கூறுகிறார்கள். ஏனென்றால் அது கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களுக்கு மேலாக ஒரு படைத்தளத்தின் பகுதியாக மாற்றப்பட்டு விட்டது. வடக்கு கிழக்கில் உள்ள கணிசமான படைத்தளங்கள் தனியார் காணிகளையும் சுவீகரித்துக் கட்டி எழுப்பப்பட்டவை தான்.

ஒரு மக்கள் கூட்டத்தை ஒரு தேசமாக வரையும் முக்கிய ஐந்து அம்சங்களில் ஒன்று தாயகம். பாரம்பரிய தாயகம். அதாவது நிலம். அந்த நிலத்தின் மீதான ஆட்சி அதிகாரம் இல்லை என்றால் ஒரு மக்கள் கூட்டம் தேசமாகவே இருக்க முடியாது. நிலம் இல்லையென்றால் கடல் இல்லை. நிலமும் கடலும் இல்லையென்றால் சனமும் இல்லை. எனவே நிலத்தின் மீதான கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதுப் பணுவது என்பது அரசியல் அதிகாரத்தின் பிரதான பகுதி.

இலங்கை அரசாங்கம் காணிகளை, அளந்தாலோ அல்லது காணிகள் தொடர்பான விவரங்களை ஒரு மையத்தில் சேகரிக்க முற்பட்டாலோ தமிழ் மக்கள் அதைக் கண்டு அச்சப்படுகிறார்கள்.

ஏனென்றால் உரித்தாளர் இல்லாத காணிகளை அரசாங்கம் சுவீகரிக்கலாம் என்ற பயம். தமது மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பகுதி புலம்பெயர்ந்திருக்கும் ஒரு பின்னணியில் ஈழத் தமிழர்களிடம் அப்படிப்பட்ட அச்சம் எழுவது இயல்பானதே. ஒற்றையாட்சிக் கட்டமைப்பின் கீழ் மாகாணங்களுக்குள்ள வரையறுக்கப்பட்ட காணி அதிகாரத்தின் கீழ்,நிலப் பறிப்புக்கு எதிராகப் போராடும் ஒரு மக்கள் கூட்டத்தின் நியாயமான பயம் அது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக வருவதற்கு முன்னதாக அமெரிக்காவின் மில்லீனியம் உதவித் திட்டம் தொடர்பான சர்ச்சைகள் எழுந்தன. இந்த உதவி திட்டத்தின்படி பெருமளவு நிதியை அமெரிக்கா இலங்கைக்கு வழங்கப் தயாராக இருந்தது. அது கடன் அல்ல, தானம். ஆனால் அதற்காக அமெரிக்கா நாட்டின் கேந்திரமான பகுதிகள் சிலவற்றின் நிலம் தொடர்பான டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட ஆவணங்களைத் தருமாறு கேட்டது. அவ்வாறு ஓர் உதவித் திட்டத்துக்காக உதவியைப் பெறும் நாட்டின் நிலம் தொடர்பான டிஜிட்டல் ஆவணங்களைக் கேட்பது சரியா? என்று ஓர் ஊடகவியலாளர் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் அதிகாரி ஒருவரைக் கேட்ட பொழுது, அவர் சொன்னாராம், ஏன், அதில் என்ன தவறு? என்று. பின்னர் அந்தத் திட்டத்தை கோத்தாபய அரசாங்கம் நிராகரித்து விட்டது. பொருளாதார நெருக்கடிக்கு அதுவும் ஒரு காரணம் என்று ரணிலின் ஆதரவாளர்கள் முன்பு கூறி வந்தார்கள்.



அதாவது ஓர் உலகப் பேரரசு, சிறிய நாடு ஒன்றுக்கு உதவி செய்யும் பொழுது அந்த நாட்டின் நிலம் தொடர்பான ஆவணங்களை தன் கையில் வைத்திருக்க விரும்புகிறது என்றால், அந்த உதவிக்கு பதிலாக நிலத்தை தன் கண்காணிப்புக்குள் வைத்திருக்க விரும்புகிறது என்று பொருள்.

1998 இல் அப்போதிருந்த இலங்கை அரசாங்கம் 'பிம்சவிய' என்ற பெயரில் காணி உரித்து பதிவுச் சட்டம் ஒன்றைக் கொண்டு வந்தது. நாட்டில் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் தமது காணி உரித்துக்களை உறுதிப்படுத்தி புதிய, ஒரே ஒரு பக்கத்தில் அச்சிடப்பட்ட ஆவணத்தைப் பெற வேண்டும் என்று பிம்சவிய திட்டம் அறிவுறுத்தியது.

இப்படிப்பட்டதோர் உலகளாவிய மட்டும் உள்ளூர் அரசியல் பின்னணியில் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் தேதி வெளியிடப்பட்ட வர்த்தமானி தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை எதிர்ப்பதற்கு தேவையான ஆகப் பிந்திய பிடியைக் கொடுத்திருக்கின்றது.

கட்டுரையாளர்:
யாழ்ப்பாணத்தில் இருந்து
– நிலாந்தன் –



உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில், குறிப்பாக ஏப்ரல் மாதக் கடைசியிலும் மே மாதத்தின் தொடக்கத்திலும் இந்த விடயம் சூடான பேசுபொருளாக மாறியது. வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டிருக்கும் திகதி மார்ச் 28. ஆனால் அது தமிழ் அரசியலில் சூடான பேசுபொருளாக மாறியது ஏப்ரல் கடைசியில். அதை தலைப்புச் செய்தியாக மாற்றியவர் சர்ச்சைக்குரிய விடையங்களைத் துருவித் துருவி ஆராய்ந்து கண்டு பிடிக்கும் ஊடகவியலாளர்களில் ஒருவர் முன்பு யாழ் மாநகர சபையின் உறுப்பினராக இருந்தவர். கெட்டிக்காரர். அவர் சுமந்திரனுக்கு நெருக்கமானவர் என்று ஓர் அபிப்பிராயம் பரவலாக உண்டு.

அது உண்மையோ பொய்யோ, அந்த வர்த்தமானியை வைத்து சுமந்திரன் தன்னை தமிழ் அரசியலிலும் தமிழரசுக் கட்சிக்குள்ளும் பலப்படுத்தி வருகிறார். அந்த வர்த்தமானியை அரசாங்கம் மீளப் பெறுவதற்கு இம்மாதம் 28ஆம் திகதி வரையிலும் அவர் கால அவகாசம் வழங்கியுள்ளார். இந்த விடயத்தை அரசுக்கு எதிரான ஒரு பெரிய போராட்டமாக மாற்றப் போவதாகவும் அவர் அறிவித்திருக்கிறார். இந்த விடயத்தில், நிலப் பறிப்பு தொடர்பில் சுமந்திரனின் நடவடிக்கைகள் தமிழ்த் தேசிய அரசியலைப் பலப்படுத்துபவை.

தேசிய மக்கள் சக்திக்கு எதிரான தமிழ்த் தேசிய அரசியல்வாதிகளை மேற் சொன்ன வர்த்தமானி ஒன்றாக்கியுள்ளது. நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அவர்கள் அதை ஒரு பேசு பொருளாக மாற்றினார்கள். அதன் விளைவாக அரசாங்கம் தன் நிலைப்பாட்டில் இருந்து ஓரளவுக்குக் கீழிறங்கி வந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை பிரதமர் ஹரிணி இது சம்பந்தமாக தமிழ் மக்களுடைய பிரதிநிதிகளை சந்தித்திருக்கிறார். சந்திப்பின்போது தமிழ் மக்களுடைய காணிகளை சுவிகரிக்கும் உள்நோக்கம் அரசாங்கத்திடம் இல்லை என்று கூறியுள்ளார். எனினும் குறிப்பிட்ட வர்த்தமானி இக்கட்டுரை எழுதப்படும் நாள் வரையிலும் மீளப் பெறப்படவில்லை. அடுத்த அமைச்சரவைக்கு கூட்டத்தில் அது தொடர்பில் பேசி முடிவெடுக்கப் போவதாக ஹரிணி கூறியுள்ளார்.

(இக்கட்டுரை 25 மே 2025 வரையப்பட்டது)

# சர்ச்சையில் சிக்கி இருக்கும் "வேடன்" இந்து அமைப்புக்கள் இவரைக் குறி வைப்பது ஏன்?

கேரளாவைச் சேர்ந்த பிரபல ராப் பாடகரான வேடனை பா.ஜ.கவும் இந்து அமைப்புகளும் கடுமையாக விமர்சித்து வருகின்றன. பா.ஜ.கவைச் சேர்ந்த தலைவர் ஒருவர், வேடனை தேசியப் புலனாய்வு முகமை விசாரிக்க வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். யார் இந்த வேடன்?

கடந்த சில நாட்களாக கேரளாவின் சமூக ஊடகங்களிலும் தமிழ்நாட்டின் யூடியூப் சேனல்களிலும் பரவலாக அடிபடும் பெயர் வேடன். கேரளாவைச் சேர்ந்த ராப் பாடகரான வேடனை பா.ஜ.கவும் இந்து அமைப்புகளும் கடுமையாக விமர்சிக்க ஆரம்பித்திருப்பதால், ஒரு பெரிய சர்ச்சையின் மையப் புள்ளியாக உருவெடுத்திருக்கிறார் அவர்.

வேடனை தேசிய பாதுகாப்பு முகமை விசாரிக்க வேண்டுமென உள்துறை அமைச்சகத்திற்கு பா.ஜ.கவைச் சேர்ந்த ஒருவர் கடிதம் எழுதியது தேசிய அளவில் இவர் மீது கவனத்தைத் திருப்பியிருக்கிறது.

கேரளாவின் திருச்சூரில் இலங்கையின் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தாய்க்கும் கேரளாவைச் சேர்ந்த தந்தைக்கும் பிறந்தவர் ஹிரந்தாஸ் முரளி. பள்ளிப் படிப்பை முடித்த பிறகு சில காலம் கட்டுமானத் தொழிலாளராக வேலை பார்த்த ஹிரந்தாஸ், ஒருகட்டத்தில் திரைப்பட இயக்குநரும் எடிட்டருமான பி. அஜீத் குமாரின் ஸ்டுடியோவில் பணியாற்ற ஆரம்பித்தார்.

இந்த காலகட்டத்தில் தான் அமெரிக்க ராப் பாடகரான ட்யுபக் ஷகூரின் தாக்கம் ஏற்பட்டதாக ஊடகம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார் வேடன். ஒரு பாடகராக உருவெடுக்க முடிவு செய்த பிறகு, தனக்கு 'வேடன்' என்ற பெயரை அவர் தேர்வு செய்து கொண்டார்.

2020ஆம் ஆண்டில், கோவிட் பெருந்தொற்று உச்ச கட்டத்தில் இருந்த போது அகில் ராமச்சந்திரன், ஹ்ரித்விக் சசிகுமார் என்பவர்களோடு இணைந்து Voice of the Voiceless என்ற தனது முதல் பாடல் வீடியோவை யூடியூபில் வெளியிட்டார் வேடன். சாதி பிரச்சனை, நிறம் சார்ந்த ஒதுக்கல், விளிம்பு நிலை மக்களின் வாழ்க்கைப் போராட்டம் ஆகியவற்றை அந்தப் பாடலில் சுட்டிக்காட்டியிருந்தார்.

குறுகிய காலத்திலேயே அந்தப் பாடல் 6,00,000 பார்வைகளைக் கடந்தது. (தற்போது 13 மில்லியன் பேர் அந்தப் பாடலைப் பார்த்திருக்கின்றனர்). இதற்கடுத்ததாக Bhoomi Njan Vazhunidam என்ற பாடலை வெளியிட்டார். அதுவும் பிரபலமான நிலையில், கேரளாவில் ஒடுக்கப்பட்டோருக்கான குரல்களில் ஒன்றாக அடையாளம் காணப்பட்டார் வேடன்.

அதே ஆண்டில் கொச்சி மியூசிக் ஃபவுண்டேஷனின் ஹிப் ஹாப் இசைத் திருவிழாவில் பங்கேற்று கவனத்தை ஈர்த்தார். இதற்குப் பிறகு அவரது இசைத் தொகுப்புகள் தொடர்ந்து வெளியாக ஆரம்பித்தன. 2021ஆம் ஆண்டில் நாயாட்டு படத்தில் 'நரபலி' என்ற பாடலை எழுதிப் பாடினார் வேடன். இதற்குப் பிறகு மலையாளத்தில் பெரும் வெற்றி பெற்ற மஞ்சுமோல் பாய்ஸ் படத்தில் 'குதந்திரம்' என்ற பாடலை எழுதிப் பாடினார் வேடன். இந்தப் பாடல்கள் மிகப் பெரிய ஹிட்டாகின. டோவினோ தாமஸ், சேரன் நடிப்பில் சமீபத்தில் வெளியான 'நரி வேட்டை படத்தில் 'வாடா வேடா' என்ற பாடலையும் எழுதி பாடியிருக்கிறார் வேடன்.

கேரளாவை ஆளும் இடது ஜனநாயக முன்னணியும் (எல்டிஎஃப்) எதிர்க்கட்சியான காங்கிரசும் வேடனை ஆதரித்து வருகின்றன. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக இந்து அமைப்புகள் பாடகர் வேடன் மீது கடுமையான விமர்சனங்களை முன் வைக்கத் துவங்கியுள்ளன.

2021ல் நடந்த தேர்தலில் வெற்றி பெற்று எல்டிஎஃப் மீண்டும் ஆட்சிக்கு



வந்து நான்கு ஆண்டுகள் நிறைவடைந்ததையொட்டி கேரள அரசு பல நிகழ்வுகளை நடத்தியது. அப்படி நடத்தப்பட்ட பல நிகழ்வுகளில் வேடன் பங்கேற்றார். கடந்த மே 18 ஆம் தேதியன்று பாலக்காட்டின் கோட்டை மைதானத்தில் வேடனின் இசை நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. மாநில அரசின் எஸ்.சி. – எஸ்.டி. மேம்பாட்டுத் துறை இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த இசை நிகழ்ச்சிக்கு பெருமளவில் ரசிகர்கள் திரண்டனர். இதனால் அங்கு பெரும் நெரிசல் ஏற்பட்டு சிலர் காயமடைந்தனர்.

இதையடுத்து அந்த மைதானத்தில் சேதமடைந்த நகராட்சி சொத்துகளுக்கு மாநில எஸ்.சி. – எஸ்.டி மேம்பாட்டுத் துறை உரிய இழப்பீட்டை வழங்க வேண்டும் என பா.ஜ.கவின் கட்டுப்பாட்டில் உள்ள பாலக்காடு நகராட்சி கூறியுள்ளது.

இதற்குப் பிறகு, பாலக்காட்டைச் சேர்ந்த பா.ஜ.கவின் கவுன்சிலரான வி.எஸ். மினிமோல் என்பவர் மத்திய உள்துறை அமைச்சகத்திற்கும் தேசிய பாதுகாப்பு முகமைக்கும் (என்ஐஏ) வேடன் குறித்து கடிதம் ஒன்றை எழுதினார். அந்தக் கடிதத்தில், வேடனின் பாடல்களில் பிரதமர் நரேந்திர மோதி குறித்து அவதூறான கருத்துகள் இடம்பெற்றிருப்பதாகவும் சாதியை முன்வைத்து இந்து சமூகத்தைப் பிளக்க வேடன் முயல்வதாகவும் அவர் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இதனால் அவரை தேசிய பாதுகாப்பு முகமை விசாரித்து சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்ய வேண்டும் எனவும் அவர் கோரியிருக்கிறார்.

வேடன் மீது ஏற்கனவே சில வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அவர் கைது செய்யப்பட்டதைச் சுட்டிக் காட்டியிருக்கும் மினிமோல், இருந்த போதும் ஜாமீனில் வெளிவந்திருக்கும் வேடன் பெரிய அளவில் இசை நிகழ்ச்சிகளை நடத்தி வன்முறையையும் வெறுப்பையும் தூண்டுவதாகக் குற்றம் சாட்டியிருக்கிறார்.

மினிமோல் குறிப்பிடும் சம்பவம் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்றது. ஏப்ரல் 28ஆம் தேதியன்று, கொச்சியில் ஒரு ஃப்ளாட்டில் தங்கியிருந்த வேடனும் அவரது நண்பர்கள் எட்டுப் பேரும் கேரள மாநில கலால் துறையினரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 6 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது.

இதற்குப் பிறகு காவல்துறை அந்த வீட்டைச் சோதனையிட்ட போது, அவரது சங்கிலியில் புலிப் பல் (அது சிறுத்தையின் பல் என்றும் குறிப்பிடப்படுகிறது) பதிக்கப்பட்டிருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது. அந்தச் சங்கிலி தாய்லாந்தில் வாங்கப்பட்டதாக வேடன் தெரிவித்தார்.

கஞ்சா வழக்கில் ஜாமீனில் விடுவிக்கப்பட்ட வேடனை, புலிப் பல் விவகாரத்தில் கேரள வனத் துறை அதிகாரிகள் கைது செய்தனர். பிறகு இந்த வழக்கிலும் வேடன் ஜாமீனில் விடுவிக்கப்பட்டார். இந்த கைது விவகாரங்கள் அனைத்திலும் கேரளாவின் ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வெளிப்படையாகவே வேடனுக்கு ஆதரவாக நின்றது.

அக்கட்சியின் மாநிலச் செயலர் எம்.வி. கோவிந்தன், வனத் துறை அவசரப்பட்டு கைதுசெய்ததாகக் குறிப்பிட்டார். அதேபோல வனத்துறை அமைச்சர் இதுபோன்ற விவகாரங்களில் பொது மக்களின் உணர்வுகளையும் மனதில் கொள்ள வேண்டுமெனத் தெரிவித்தார்.

இந்து அமைப்புகள் அவரைக் குறிவைக்க, அவரது பாடல்களில் இருக்கும் அரசியல்' தான் முக்கியக் காரணம் என்கிறார் கேரளாவைச் சேர்ந்த மூத்த பத்திரிகையாளரான எம்.ஜி. ராதாகிருஷ்ணன்.

அவரது பாடல்கள் தீவிரமான அரசியல் தன்மை உள்ளடக்கமும் கொண'டவை. தலித்துகளின் குரலை வலுவாக வெளிப்படுத்துபவை. பிராமண மேலாதிக்கத்தைக் கேள்விக்குட்படுத்துபவை. அதனால் தான் இந்து அமைப்புகள் ஆத்திரமடைகின்றன.' என்கிறார் அவர்.

வேடன் பிரதமர் மோதி குறித்து நேரடியாக விமர்சித்திருக்கிறாரா, இல்லையா என்பது ஒரு புறமிருக்க, சாதிய அடக்குமுறை குறித்து அவர் தொடர்ந்து கேள்வியெழுப்புகிறார். அது தான் அவர்கள் வேடனைக் குறிவைக்கக் காரணம் என்கிறார் எம்.ஜி. ராதாகிருஷ்ணன்.

இது ஒரு புறமிருக்க, பாலக்காட்டில் நடந்த இந்து ஐக்கிய வேதி கூட்டத்தில் பேசிய அதன் தலைமை டிரஸ்டி பி. சசிகலா, பட்டியல் இன மக்களின் வலுவான நாட்டுப் புற பண்பாட்டில் விழுந்த கறை தான் வேடனின் இசை எனக் குறிப்பிட்டிருக்கிறார். வேடனை சாதி தீவிரவாதி எனக் குறிப்பிட்டதற்காக கேரளாவில் ஆர்.எஸ்.எஸ். நடத்திவரும் இதழான கேசரியின் ஆசிரியர் என்.ஆர். மது மீது கொல்லம் நகரக் காவல்துறை மே 17ஆம் தேதி வழக்குப் பதிவு செய்துள்ளது.

நன்றி:– பிபிசி

## அநுரா:- சிங்கள பௌத்த தேசியவாத்தின்...

(9ம் பக்கத் தொடர்ச்சி) தேசியவாத சக்திகளின் எதிர்ப்பு காரணமாகவே அந்த முயற்சிகள் கைவிடப்பட்டிருந்தன. அந்த வரலாறு மீண்டும் திரும்புகின்றது என்பதை உணர்த்துவதாகவே சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்றும் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவேன் எனவும் வாக்குறுதி வழங்கியிருந்தார். ஆனால், அதற்கு எதிராக பெரும் எதிர்ப்புகள் பௌத்த தேசிய வாதிகளால் கிளப்பப்பட்டது. இதே போன்றதொரு நிலைமை தற்போதும் தோன்றி வருவதாகவே தெரிகின்றது. எனவே, தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளின் அழுத்தங்களுக்கு அடிபணியாது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைக்காண முன்வர வேண்டும்

## உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள்:-

(14ம் பக்கத் தொடர்ச்சி) இன்னும் இருக்கிறது என்ற அபாயத்தை யாரும் மறந்துவிடக்கூடாது. இது மேலும் பலவீனப்படுத்தப்பட்டு மக்களைத் தமிழ்த் தேசியத்தின் பால் உறுதியாக அணிதிரட்ட வேண்டுமாயின் மூன்று கட்சிகளும் இணைந்து அர்த்தமுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் அனைத்து சபைகளையும் கைப்பற்றி வினைத்திறன் மிக்க ஆட்சியை வழங்க வேண்டும். அதேவேளை தீர்வு தொடர்பில் ஆக்கபூர்வமான தொடர்ச்சியான கலந்துரையாடல்களை மேற்கொண்டு இனமோதல் தீர்வுக்கான வழிவகைகளை உள்ளடக்கிய வேலைத்திட்டங்களை உருவாக்கி செயற்பாட்டு பொறிமுறைகளை வகுத்த செயற்பட வேண்டும்.

# மாகாணசபைகளும் தமிழ் அரசியல் கட்சிகளும்

இந்த மாத முற்பகுதியில் நடைபெற்ற தேர்தல்களுக்கு பிறகு உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அரசாங்கமும் எதிர்க்கட்சிகளும் மல்லுக்கட்டிக் கொண்டிருக்கும் நிலையில் மாகாணசபை தேர்தல்களை பற்றி பேசுவது பொருத்தமற்றதாக தோன்றலாம். ஆனால், உள்ளூராட்சி தேர்தல்கள் சுமார் இரண்டரை வருடங்கள் தாமதிக்கப்பட்ட அதேவேளை மாகாணசபை தேர்தல்கள் ஏழு வருடங்களாக நடத்தப்படாமல் இருக்கின்றன.

உள்ளூராட்சி தேர்தல்களில் ஆளும் தேசிய மக்கள் சக்தியின் வாக்குகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாக மாகாணசபை தேர்தல்களை தற்போதைக்கு நடத்துவதில் அரசாங்கம் அவசரம் காட்டாது என்று அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. அரசாங்கம் மாத்திரமல்ல, எதிர்க்கட்சிகளும் கூட மாகாணசபை தேர்தல்களை விரைவில் சந்திப்பதற்கு விரும்பப் போவதில்லை. அதனால், அந்தத் தேர்தல்களை நடத்துமாறு தென்னிலங்கை அரசியல் கட்சிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு நெருக்குதல் வரப் போவதில்லை.

அதேவேளை வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளும் பல வருடங்களாக தாமதிக்கப்படும் மாகாணசபை தேர்தல்களை விரைவில் நடத்தி மாகாணங்களின் நிருவாகத்தை மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கோருவதில்லை. இந்திய தலைவர்கள் கொழும்பு வருகின்ற சந்தர்ப்பங்களில் அவர்களுடனான சந்திப்புகளில் அரசியலமைப்புக்கான 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதலை கொடுக்குமாறு வேண்டுகோள் விடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்துடன் நேரடியாக அதைப் பற்றி கவனம் செலுத்துவதில்லை.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க கடந்த வருட இறுதியில் புதுடில்லிக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப் படுத்துவதுடன் மாகாணசபை தேர்தல்களையும் நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்ட இந்திய பிரதமர் நரேந்திரமோடி அதே வேண்டுகோளை கடந்த ஏப்ரலில் கொழும்புக்கு விஜயம் செய்த வேளையிலும் முன் வைத்தார். அவருக்கு எந்த பதிலையும் வெளிப்படையாக கூறாத ஜனாதிபதி திசாநாயக்க மாகாணசபை தேர்தல்கள் குறித்து தற்போது எத்தகைய நிலைப்பாட்டில் இருக்கிறார் என்று தெரியவில்லை.

அவர் இப்போது பெரும்பாலும் தேசிய இனப்பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட விவகாரங்கள் குறித்து பேசுவதில்லை. சிறுபான்மைச் சமூகங்களின் பிரச்சினைகள் தொடர்பில் தனது அரசாங்கத்தினால் கடைப் பிடிக்கப்படக் கூடிய எந்தவொரு நடவடிக்கையும் தென்னிலங்கை தேசியவாத சக்திகளை தங்களிடமிருந்து அன்னியப்படுத்தி விடக் கூடாது என்பதில் மாத்திரமே அவர் எச்சரிக்கையாக இருக்கிறார் என்று தெரிகிறது.

இத்தகைய ஒரு பின்புலத்தில், தென்னிலங்கையை சேர்ந்த இரு சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் ஒரு முன்னாள் இராஜதந்திரியும் மாகாணசபைகள் குறித்து அண்மையில் வெளியிட்ட கருத்துக்கள் முக்கிய கவனத்துக்குரியவையாக இருக்கின்றன.

மாகாணசபை தேர்தல்களை அரசாங்கம் விரைவில் நடத்த வேண்டும் என்று இடையறாது வலியுறுத்தி வரும் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா மக்களினால் தெரிவு செய்யப்படும் மாகாணசபைகளை வலுப்படுத்துவதன் மூலமாக அதிகாரப் பகிர்வுக்கு புத்துயிரளிக்க வேண்டும் என்றும் மாகாணசபைகள் பயனுறுதியுடைய முறையில் செயற்படுவதற்கு தடையாக இருக்கும் ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டும் என்றும் எழுதியிருந்தார். பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப் பட்டதை போன்ற அமைச்சர்கள் மட்டத்திலான இன்னொரு குழுவை மாகாண ஆளுநர்களின் அதிகாரங்களை குறைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்க வேண்டும் என்றும் தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருக்கிறது. உண்மையில் இந்தக் கோரிக்கை தமிழ்க் கட்சிகளிடம் இருந்தே வந்திருக்க வேண்டியதாகும்.



தற்போது இந்திய வெளியுறவுச் செயலாளராக இருக்கும் விக்ரம் மிஸ்றி பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் பிரதி இந்திய உயர்ஸ்தானிகராக பதவி வகித்த நாட்களில் அவருடனான சந்திப்பு ஒன்றின்போது தமிழ் ஊடகவியலாளர்கள் ஆளுநர்களுக்கு இருக்கும் அளவு கடந்த அதிகாரங்கள் காரணமாக மாகாண முதலமைச்சர்களினால் பயனுறுதியுடைய முறையில் செயற் பட முடியவில்லை என்றும் மாகாண சபைள் மூலமாக தமிழ் மக்களால் எந்த பயனையும் அடைய முடியாமல் இருக்கிறது என்றும் கூறினார்கள். அதற்கு பதிலளித்த அவர் ஆளுநர்களின் அதிகாரங்களில் கணிசமானவற்றை முதலமைச்சர்களுக்கு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்து அழுத்தத்தைக் கொடுத்திருக்க வேண்டும் என்று கூறினார். ஏன் அவர்கள் அவ்வாறு செய்யவில்லை எனறும் அவர் கேட்டார்.

ஆளுநர்களின் அதிகாரங்களை குறைக்க வேண்டியதன் அவசியத்தை கலாநிதி ஜெகான் பெரேரா வலியுறுத்தியிருக்கும் நிலையில், விக்ரம் மிஸ்றி கொழும்பில் அன்று தெரிவித்த கருத்தை நினைவுபடுத்துவது பொருத்தமானது.

பாராளுமன்ற தேர்தலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்ட பின்னடைவில் இருந்து உள்ளூராட்சி தேர்தல்களில் மீண்டு விட்ட தமிழ்க் கட்சிகள் மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு தடையாக இருக்கும் விடயங்களை பாராளுமன்றத்தின் மூலமாக அகற்றி விரைவாக அந்த தேர்தல்களை நடத்த வேண்டும் என்று ஒன்றிணைந்து அரசாங்கத்தைக் கோருவதே தற்போதைய தருணத்தில் விவேகமான செயலாக இருக்கும் என்று முன்னாள் இராஜதந்திரியும் அரசியல் ஆய்வாளருமான கலாநிதி தயான் ஜெயதிலக கூறியிருக்கிறார். அந்த கோரிக்கைக்கு தென்னிலங்கையிலும் சர்வதேச சமூகத்திலும் ஆதரவைப் பெறக்கூடியதாக இருக்கும் என்றும் அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான எந்தவொரு பேச்சுவார்த்தையும் புதிதாக தெரிவு செய்யப்படும் மாகாணசபைகளுக்கும் ஜனாதிபதி திசாநாயக்கவின் நிருவாகத்துக்கும் இடையிலானதாகவே இருக்க முடியும் என்றும் அவர் உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பின்னரான சூழ்நிலைகள் குறித்து எழுதிய கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார். அவ்வாறு மாகாண சபைகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நடைபெறக் கூடிய பேச்சுவார்த்தைகளின் விளைவுகளை சர்வகட்சி வட்டமேசை மகாநாடு ஒன்றில் சமர்ப்பித்து நீண்டகால அடிப்படையிலான அரசியல் தீர்வொன்றை நோக்கிப் பயணிக்க முடியும் என்பது தயானின் கருத்தாக இருக்கிறது.

அரசியலமைப்பு திருத்தம் அல்லது புதிய அரசியலமைப்பு தொடர்பாக முடிவற்ற பேச்சுவார்த்தைகளை நடத்துவது சிங்கள அரசியல் அதிகார வர்க்கம் கவனத்தை திசைதிருப்புவதற்கு காலங்காலமாக கடைப்பிடித்து வருகின்ற ஒரு அணுகுமுறை என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கும் தயான் அத்தகைய ஒரு பொறியில் தமிழ்க் கட்சிகள் விழப் போகின்றனவா என்று கேள்வியெழுப்புகிறார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு இடைக் காலத் தீர்வைக் கண்டு அதில் இருந்து நீண்டகாலத் தீர்வை நோக்கிப் பயணிப்பது குறித்து பேசி வரும் தமிழ்க்கட்சிகள் அதற்காக கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறைகள் குறித்து சிந்திப்பதில்லை. சாத்தியமாகக் கூடியதும் இந்தியாவினதும் சர்வதேச சமூகத்தினதும் ஆதரவைப் பெறக் கூடியதுமான இடைக்கால ஏற்பாடுகள் குறித்து தமிழ்க்கட்சிகள் அக்கறை செலுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பிலேயே அவர்களின் கருத்துக்கள் இங்கே சுட்டிக்காட்டப்படுகின்றன.

உள்ளூராட்சி தேர்தல்களைப் போன்று மாகாணசபை தேர்தல்களையும் கலப்பு தேர்தல் முறையில் நடத்துவதற்காக பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டு வரப்பட்ட பிறகு நிறைவடையாமல் இருக்கும் எல்லை நிர்ணயச் செயன்முறைகள் மாகாணசபை தேர்தல்களுக்கு பெரும் முட்டுக்கட்டையாக இருக்கிறது என்பதே பொதுவான கருத்தாக இருக்கிறது. எல்லை நிர்ணயச் செயன்முறைகள் நிறைவு செய்யப்பட்டால் அல்லது முழுமையாக விகிதார பிரதிநிதித்துவ அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு சட்டத்தை திருத்தினால் மாத்திரமே மாகாணசபை தேர்தல்களை நடத்த முடியும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். இரத்நாயக்க சில தினங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

கட்டுரையாளர்:-
கொழும்பில் இருந்து
மூத்த பத்திரிகையாளர்
வீ.தனபாலசிங்கம்



அதை ஆட்சேபித்து அவருக்கு கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் சிவில் சமூகச் செயற்பாட்டாளரும் அரசியல் ஆய்வாளருமான குசல் பெரேரா தற்போதைய சட்டக் கட்டமைப்பை ஆணைக்குழுவின் தலைவர் தவறாக வியாக்கியானம் செய்வதாக குறிப்பிட்டிருக்கிறார். எல்லை நிர்ணயச் செயன்முறைகள் நிறைவு செய்யப்படாவிட்டாலும் கூட மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு ஆணைக்குழுவுக்கு எந்த தடையும் கிடையாது என்று பெரேரா வாதாடுகிறார்.

சட்டத்திருத்தங்களை நிறைவேற்றுவதற்கு அல்லது எல்லை நிர்ணயச் செயன்முறையை நிறைவுசெய்வதற்கு பாராளுமன்றம் தவறுவதனால் தற்போது நடைமுறையில் இருக்கும் மாகாணசபைகள் தேர்தல் சட்டம் செல்லுபடியற்றதாகப் போய் விடுவதில்லை என்று தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியிருக்கும் பெரேரா, புதிய சட்டம் ஒன்று நிறைவேற்றப் பட்ட பிறகு சபாநாயகர் கைச்சாத்திடும் வரை, நடைமுறையில் உள்ள சட்டங்கள் செல்லுபடியாகக் கூடியவை என்பது அனைவருக்கும் தெரிந்ததே என்றும் ஆணைக்குழு மாகாணசபை தேர்தல்களை நடத்துவதற்கு அரசின் எந்த நிறுவனத் திடமிருந்தும் அனுமதியைப் பெற வேண்டிய தேவை இல்லை என்றும் கூறியிருக்கிறார்.

தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள் ஒரு சிலரிடமிருந்தாவது இத்தகைய கோரிக்கைகளும் கருத்துக்களும் வருகின்ற அதேவேளை தமிழர் தரப்பில் அரசியல்வாதிகளிடமிருந்தோ அரசியல் ஆய்வாளர்களிடமிருந்தோ மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் மாகாணசபைகளின் நிருவாகங்களை மக்களால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் அக்கறை வெளிப்படுவதில்லை என்பது ஒரு விசித்திரமான அம்சமாகும்.

மாகாணசபைகளின் மூலமாகவோ அல்லது 13 வது திருத்தத்தை முழுமையாக (22ம் பக்கம் பார்க்க)

# சொல்லப் போனால் யார் அகதி? எது தர்ம சத்திரம்?

(20ம் பக்கத் தொடர்ச்சி) தொடர்ந்து பல்லாயிரக்கணக்கில் ஈழத் தமிழர்கள் வெளியேறினர். தமிழ்நாட்டின் வழியாகவும் பிற வழிகளிலும் பிரிட்டன், ஜெர்மனி, ஸ்வீடன், நார்வே, டென்மார்க், ஸ்விட்சர்லாந்து போன்ற பிற ஐரோப்பிய நாடுகள், கனடா, ஆஸ்திரேலியா என எங்கெங்கோ இவர்கள் புலம் பெயர்ந்து சென்றனர்.

இன்றைக்குத் தமிழ்நாடு, அதாவது இந்தியா தவிர்த்துப் புலம்பெயர்ந்து சென்ற நாடுகளில் எல்லாமும் (அல்லது பெரும்பாலானவற்றில்) மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் கண்காணிப்புக்குப் பிறகு அல்லது சில வரையறைகளுக்கு உள்பட்டுக் குடியுரிமை பெற்றுத் தற்போது அந்த நாட்டு மக்களாகவே மாறி விட்டனர். அந்தந்த நாடுகள் அப்படியே அனைவரையும் சொந்த மக்களாக உள்வாங்கிக் கொண்டு விட்டன.

இந்த நாற்பது ஆண்டுகளில் மூன்றாம் தலைமுறை கண்டுவிட்ட இவர்களின் குழந்தைகளில் பலருக்குத் தமிழே கூட ஓரளவு பேச மட்டும் தான் தெரியும். ஆனால், தமிழை, தமிழர்களை நம்பித் தமிழ்நாட்டுக்கு வந்தவர்களின் நிலை? இன்னமும் பெரும்பாலானோர் அகதிகள் முகாமில் திறந்தவெளிச் சிறைச் சாலைக் கைதிகளைப் போலவே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

தமிழ்நாட்டில் மட்டும் 106 முகாம்கள் இருக்கின்றன. சுமார் 60 ஆயிரம் பேர் இந்த முகாம்களிலும் 30 ஆயிரம் பேர் முகாம்களுக்கு வெளியேயும் (வெளிப் பதிவு) வாழ்ந்துவருகின்றனர் எனக் கூறப்படுகிறது. ஆனால், இந்தக் கணக்கு எப்போது எடுக்கப்பட்டதெனத் தெரியவில்லை. உள்ளபடியே, தமிழ்நாட்டில் அகதிகளாக 1.46 லட்சம் பேர் வாழ்ந்து வருவதாகவும் இவர்களில் கால் பங்கினர் குழந்தைகள், சிறார்கள் என்றும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.1983 தொடக்கம் அலை அலையாக வந்தவர்கள் இவர்கள். இங்கே இவர்களும் மூன்றாம் தலைமுறை கண்டு விட்டனர்.

ஆனால், இன்னமும் அகதிகளாகவே முகாம்களுக்குள் பத்துக்குப் பத்து சதுர வீடுகளில் (அல்லது வீடுகளைப் போன்றதொரு கட்டுமானத்தில்) வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். பெரும்பாலான நாடுகளில் ஒரு குழந்தை அந்த நாட்டில் பிறந்தால், பிறப்பால் தானாகவே, அந்த நாட்டின் குடிமகனா(ளா)கி விடும். ஆனால், இங்கேயோ பிறக்கும் போதே அகதி தான் (ஏதோ குறிப்பிட்ட கால கட்டத்தில் பிறந்த குழந்தைகளுக்கு மட்டும் குடியுரிமை தந்திருப்பதாகக் கூறுகிறார்கள்).

வாராவாரம் என்பது மாறி இன்னமும் மாதந்தோறும் முகாம்களில் சோதனைகள் நடத்தப்பட்டுக் கொண்டு தானிருக்கின்றன. ஒருவர் எங்கேயாவது வெளியூர் செல்வதாக இருந்தால் தலையாரி அல்லது கிராம நிர்வாக அலுவலரில் தொடங்கி, வட்டாட்சியர் வரையிலான முன் அனுமதி பெற வேண்டும் (கிட்டத்தட்ட அந்தக் கால குற்றப்பரம்பரைச் சட்டத்தைப் போல) ஊருக்கு அல்லது அருகிலுள்ள நகருக்கு யாராவது விஜபிக்கள் வந்தால் தொடர்ந்தாற் போல மூன்று நான்கு நாள்கள் கூட முகாம்களில் சோதனைகள் இருக்கும்.

இந்தக் குழந்தைகள் பள்ளி, கல்லூரிகளில் பயில முடியும். ஆனாலும், மருத்துவம் போன்ற படிப்புகளைப் படிக்க முடியாது. கடவுச் சீட்டுகள் கிடையா. எனவே, வெளிநாடுகளுக்குச் செல்ல முடியாது. ஒரு முறை வெளியேறினால் மீண்டும் இந்தியாவுக்குள் வர முடியாது. அகதிகளில் பலரும் சாதாரண வேலைகளில் தான் இருக்கின்றனர்.

நல்ல படிப்பு, நல்ல வேலை கிடைக்காத நிலையில், இவர்களில் சிலரை சமூக விரோத சக்திகள் பயன்படுத்திக் கொள்ளும் போது பொதுப் புத்தியில் ஒட்டுமொத்தமாக இவர்கள் அனைவர் மீதும் பழிபோடப்படுகிறது. ஐக்கிய நாடுகள் அகதிகள் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடவில்லை என்பதால் சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அகதிகளுக்காகக் குடும்ப அட்டை போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்ட போதிலும், இன்னமும் கூட சிறப்பு முகாம்கள் என்ற பெயரிலும் கணிசமானோர் சிறை வைக்கப்பட்ட நிலையில்தான் இருக்கின்றனர்.

இவற்றில் குடியுரிமை தவிர்த்த வேறு பல பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க மத்திய அரசு தேவையில்லை, நினைத்தால், மாநில தமிழ்நாட்டு அரசாலேயே செய்துவிட முடியும். ஆனால் வரலாற்றில் இந்தியா எவ்வளவு பேரை உள்வாங்கிக் கொண்டிருக்கிறது? எவ்வளவு பேரை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது? சில, பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அகதிகளாக வந்தவர்கள்தான் பார்ஸிக்களும் இரானியர்களும். இன்றைக்கு அவர்கள் நாடு இந்தியா தான், அவர்களும் இந்தியர்கள் தான்.

நாடு விடுதலை பெற்ற பிறகு 1959–ல் தலாய்லாமா தலைமையில் திபெத்திய அகதிகள், சுமார் 80 ஆயிரம் பேர் வெளியேறி இந்தியா வந்தனரே, கர்நாடகத்தில் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பில் அவர்களுக்கென நகரமே உருவாக்கிக் கொடுக்கப்பட்டதே! 1971–ல் இப்படி இந்தியாவுக்குள் வந்து குவிந்த அகதிகளுக்காகத் தான் ஒரு படையெடுப்பே நடைபெற்றது. பாகிஸ்தான் இரண்டானது, வங்க தேசம் என்றொரு நாடே உருவானது. அப்போது நாட்டின் பிரதமராக இருந்தவர் இந்திரா காந்தி. இதைப் படித்துக் கொண்டிருக்கும் இந்தக் கணத்திலும் கூட ஏதோ வொரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டுக்கு அகதிகளாக மக்கள் வெளியேறிக் கொண்டு தான் இருப்பார்கள் இருக்கிறார்கள். எவரொருவரும் அகதிகளாக வெளியேறுவது இன்பச் சுற்றுலாவுக்காக அல்ல. அகதி வாழ்வை வாழ்ந்து பார்த்தால்தான் தெரியும், ஒவ்வொருவருக்குமான வலி!

இத்தகைய உலகச் சூழலில், தனியொருவர் தொடர்ந்த வழக்கில், மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்ததைத் தாண்டி எங்கேயாவது போங்கள் இங்கே வராதீர்கள், இதுவென்ன தர்ம சத்திரமா? என்றெல்லாம் உச்ச நீதிமன்றமே கருத்துத் தெரிவித்திருப்பதைக் கேட்டு, தமிழர்கள் மட்டுமல்ல, அகதி வாழ்வை நினைத்துப் பார்க்கும் அனைவருமே அதிர்ந்திருக்கிறார்கள். இலங்கை திரும்ப இயலாது. இங்கிருக்க அனுமதி கொடுங்கள் என்றொருவர் கேட்டிருக்கிறார். இங்கேயோ முகாம்களில் ஒன்றரை லட்சம் ஈழத் தமிழர்கள் எதிர்காலம் தெரியாமல் அகதிகளாகக் கிடக்கின்றனர். ஆனால் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்களோ ஏழரைக் கோடி பேர்! ஒற்றைத் தமிழரை நிராகரிக்கும் நீதிமன்றத்தின் கருத்தானது, எதிர்காலத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாகி, ஒட்டுமொத்த தமிழர்களை மட்டுமின்றி உலகெங்கும் வெளியேறுகிற இன்னபிற அகதிகளையும் நிராகரிப்பதாகி விடக் கூடிய ஆபத்து இருக்கிறது.

இது பற்றி ஏனோ பெரிய அரசியல் கட்சிகளின் பெரிய தலைவர்களும் கூட எதிர்வினையாற்றாமல் கடக்கின்றனர்.ஆமாம், கொப்பூழ்க் (தொப்புள்) கொடி உறவு, அரைஞாண் கொடி உறவு, அவரைக் கொடி, வெற்றிலைக் கொடி உறவு என்றெல்லாம் அவ்வப்போது கூறிக் கொண்டிருக்கிறார்களே? இவற்றுக்கெல்லாம் தமிழில் என்ன தான் பொருள்?

# பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்க வேண்டும்!

## பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு பிரான்ஸ் அழுத்தம்

பிரிட்டன் உட்பட ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தினை அங்கீகரிக்க வேண்டும் என பிரான்ஸ் அழுத்தம் கொடுத்துவருவதாக பொலிட்டிகோ செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் பாலஸ்தீன தேசத்தை பிரிட்டன் நெதர்லாந்து பெல்ஜியம் உட்பட ஐரோப்பிய நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்ற அழுத்தத்தை பிரான்ஸ் கொடுத்து வருகின்றது..

பல ஐரோப்பிய நாடுகள் பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்க செய்வதன் மூலம் அதேவேளை சில மத்திய கிழக்கு நாடுகள் இஸ்ரேலை அங்கீகரிக்க செய்வதன் மூலம் ஐக்கிய நாடுகள் சபையின் மாநாட்டினை இஸ்ரேல் பாலஸ்தீன பேச்சுவார்த்தைகளிற்கான ஆரம்பமாக பயன்படுத்தலாம் என பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோன் கருதுகின்றார்.

இரு அரசுகள் தீர்வு முன்னர் எப்போதையும் விட அவசியமானது எனினும் யுத்தம் இடம்பெயர்வு தீவிர தன்மை மிகுந்த இஸ்ரேலிய குடியேற்ற வாசிகளின் வன்முறை போன்றவற்றால் அது முன்னர் எப்போதையும் விட அதிக குறைமதிப்பிற்கு உட்படுத்தப்பட்டுள்ளது என பெயர் குறிப்பிட விரும்பாத பிரான்ஸ் இராஜதந்திரியொருவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இஸ்ரேலின் காசாமீதான குண்டு வீச்சுக்கள் காரணமாகவும் இஸ்ரேலின் மூன்று மாத கால தடைகள் காரணமாக உணவிற்கும் மருந்திற்கும் நீருக்கும் காசாவில் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றதாலும் சவுதி அரேபியாவில் இடம் பெறவுள்ள அந்த மாநாட்டின் மூலம் ஏற்படக் கூடிய சாதகமான விளைவுகள் குறித்து பிரான்ஸ் தனது நம்பிக்கைகளை குறைத்துள்ளது.

அராபிய தேசங்கள் இஸ்ரேலிற்கு எதிராக தடைகளை விதிப்பது குறித்தே ஆர்வமாக உள்ளன பாலஸ்தீன தேசம் குறித்து ஆர்வம் கொண்டிருக்கவில்லை என ஐரோப்பிய இராஜதந்திரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன தேசத்திற்கான அடித்தளத்தினை ஆதரிப்பதற்காக பிரிட்டன் சகாக்களுடனும் ஏனைய நாடுகளுடன் இணைந்து எதனையும் செய்ய தயார் என பிரிட்டிஸ் பிரதமரின் பேச்சாளர் கடந்த வாரம் தெரிவித்திருந்தார்.

பாலஸ்தீன தேசத்தை அங்கீகரித்த முதல் ஜி7 நாடுகளாக பிரான்சும் இங்கிலாந்தும் மாறலாம். பாலஸ்தீன தேசம் என்பது பாலஸ்தீனியர்களின் தசாப்தகால கோரிக்கை.

இதேவேளை பிரான்ஸ் இராஜதந்திரிகளின் முயற்சிகளை இஸ்ரேல் தொடர்ந்தும் கடுமையாக விமர்சித்து வந்துள்ளது. பிரான்சின் நடவடிக்கை ஹமாசினை சட்டபூர்வமான அமைப்பாக மாற்றுகின்றது.இ2023 பயங்கரவாத தாக்குதலிற்காக அந்த அமைப்பிற்கு வெகுமதி வழங்குகின்றது என இஸ்ரேல் தெரிவித்து வருகின்றது.

பாலஸ்தீன தேசத்தை பிரிட்டனும் பிரான்சும் அங்கீகரித்தால் இஸ்ரேல் இதனையே தெரிவிக்கப் போகின்றது.

கடந்த ஆண்டு ஸ்பெயின் அயர்லாந்து மற்றும் நோர்வே ஆகிய நாடுகள் பாலஸ்தீன அரசை அங்கீகரித்த நிலையில் 140க்கும் மேற்பட்ட ஐ.நா. உறுப்பு நாடுகள் பாலஸ்தீன அரசை அங்கீகரித்துள்ளன. பல வட ஆப்பிரிக்க மற்றும் மத்திய கிழக்கு நாடுகள் இஸ்ரேலை அங்கீகரிக்க வில்லை

பல ஆண்டுகளாக பாரிஸ் பாலஸ்தீன பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்கும் நிலையில் இருப்பதாக பிரெஞ்சு அதிகாரிகள் கூறி வருகின்றனர். ஆனால் சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் மாத்திரமே பிரான்ஸ் பாலஸ்தீன தேசத்தை அங்கீகரிக்கவேண்டும் என எச்சரிக்கையையும் விடுத்து வந்துள்ளனர்.

ஏப்ரல் மாதத்தில் 'அங்கீகாரத்தை நோக்கி நகர' வேண்டிய நேரம் வந்துவிட்டதாகவும் இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன அரசு இரண்டும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கூட்டு செயல்பாட்டில் பங்கேற்க வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் மக்ரோன் கூறினார். ஆனால் அது ஒருபோதும் நடக்கவில்லை. இப்போது காசா பகுதியில் மனிதாபிமான நெருக்கடி ஆழமடைந்து வருவதால் பாலஸ்தீன அரசை முறையாக அங்கீகரிப்பது என்பது அமைதியை நோக்கி அடியெடுத்து வைப்பதற்குப் பதிலாக ஒரு இஸ்ரேலிற்கு எதிரான ஒரு கண்டனமாகத் தோன்றும் என்று சிரியாவிற்கான முன்னாள் தூதரும் இன்ஸ்டிட்யூட் மோன்டைக்னேவின் உறுப்பினருமான மைக்கேல் டக்லோஸ் விளக்கினார் இது இஸ்ரேலுக்கு எதிரான கண்டனமாக இருக்கும் என்று அவர் கூறினார்.

இருப்பினும் பாலஸ்தீனிய பிரதேசங்களை ஐரோப்பிய நாடுகள் அங்கீகரிப்பது இஸ்ரேலுடனான உறவுகளை இயல்பாக்குவதற்கான நிபந்தனைகளை வரையறுக்க அரபு நாடுகளை ஊக்குவிக்கும் என்று டுக்லோஸ் கூறினார். ஜீன் 17 முதல் 20 வரை நியூயார்க்கில் நடைபெற உள்ள மாநாட்டில் மத்திய கிழக்கு நாடுகள் இன்னும் இயல்பாக்கத்தை நோக்கி 'நடவடிக்கைகளை' எடுக்கும் என்று பிரான்ஸ் நம்புவதாக மேலே மேற்கோள் காட்டப்பட்ட பிரெஞ்சு தூதர் கூறினார். இறுதியில் காசா பகுதியில் வன் முறையை நிறுத்துவதும் ஓரளவிற்கு மேற்குக் கரையில் வன்முறையை நிறுத்துவதும் இஸ்ரேலின் நெருங்கிய கூட்டாளியும் மிகப்பெரிய இராணுவ ஆதரவாளருமான அமெரிக்கா என்ன செய்ய முடிவு செய்கிறது என்பதைப் பொறுத்தது.

# NPPயின் தடுமாற்றங்களும் குழப்பங்களும் வரலாற்றுப் பொறுப்பும்

மிகச் சிறப்பான மக்கள் அங்கீகாரத்தையும் அரசியல் ஆணையையும் பெற்றிருக்கும் NPP தீர்மானங்களை எடுப்பதில் குழப்பத்துக்கு தடுமாற்றத்துக்கு– உள்ளாகியிருப்பது ஏன்?

இன்றைய இலங்கையில் அனைத்துச் சமூகத்திலும் ஜனவசியம் மிக்க ஒரே தலைவராக இருக்கிறார் அநுரகுமார திசநாயக்க. ஆனாலும் அந்த மக்களுடைய நம்பிக்கைகளை நிறைவேற்ற முடியாதிருப்பது எதற்காக?

NPPக்குப் பின்னிருக்கும் அல்லது அநுரகுமார திசநாயக்குவுக்குப் பின்னுள்ள சக்திகள் எவை? யாருடைய நிகழ்ச்சி நிரலில் NPP இயங்குகிறது? அல்லது அநுரகுமார திசநாயக்க இயங்குகிறார்?

ஜே.வி.பி தவிர்ந்த வெளிச்சக்திகளின் பின்னணியோ பிடியோ இல்லாமல் தனித்துச் சுயாதீனமாக NPP இயங்குவதாக இருந்தால், அந்த அடையாளம் என்ன?

இவ்வாறான கேள்விகள் NPP அரசாங்கத்தைக் குறித்தும் அநுரகுமார திசநாயக்கவைக் குறித்தும் எழுகின்றன. இவ்வாறான கேள்விகள் எழும் என்பதை NPP யும் புரிந்து கொள்ள வேண்டும். அநுரகுமார திசநாயக்கவும் புரிந்து கொள்ள வேண்டும். NPP யின் ஆதரவாளர்களும் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் சீரழிந்த அரசியல் வரலாற்றில் ஒரு மாற்றத்தை உருவாக்கும் சக்தியாகவே –மாற்றுச் சக்தியாகவே NPP ஐ மக்கள் பார்த்தனர் இன்னமும் பார்க்கின்றனர். மக்கள் மட்டுமல்ல, வெளியுலகமும் அப்படித்தான் எதிர்பார்க்கிறது.

NPPயும் அப்படிச் சொல்லித் தான் அதிகாரத்துக்கு வந்தது. குறிப்பாக முறைமையில் மாற்றம் (System Change) செய்வதாக.

முறைமையில் மாற்றம் நிகழ்ந்தால் மட்டுமே நடைமுறையில் மாற்றம் ஏற்படும். இதனால் தான் முறைமையில் மாற்றம் செய்வதற்கான அதிகார பலத்தை, மூன்றில் இரண்டு பெரும்பான்மையின் மூலம் NPPக்கு மக்கள் கொடுத்தனர். இல்லையெனில் 60 ஆண்டு வரலாற்றில் அப்படியொரு வெற்றியை NPP யோ JVP யோ பெற்றிருக்க முடியாது. இதனை JVP யும் NPP உம் புரிந்து கொள்வது அவசியம்.

ஆகவே முறைமை மாற்றத்தின் (System Change) மூலம் நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வையும் எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பையும் NPP செய்யும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், முறைமை மாற்றத்தை (System Change) செய்வதற்குத் தயக்கம் கொள்கிறது NPP அப்படியென்றால் இதைச் செய்யக் கூடிய ஆற்றல் NPPக்கு இல்லையா? அல்லது அதிகாரத்துக்கு வந்த பிறகு முறைமை மாற்றத்தை NPP விரும்பவில்லையா? அல்லது முறைமை மாற்றம் (System Change) தொடர்பாக NPPக்குள் குழப்பங்களும் இழுபறிகளும் நிகழ்கின்றனவா?

NPP க்குள் குழப்பங்கள் நிகழ்கின்றன என்பது வெளிப்படையாகவே தெரிகிறது. என்பதால் தான் ஜனாதிபதியின் கருத்துகளுக்கும் நிலைப்பாட்டுக்கும் மாறான முறையில் அமைச்சர்களின் கருத்துகளும் நடவடிக்கைகளும் உள்ளன. ஜனாதிபதி நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான முனைப்போடு உள்ளதாகக் காட்டுகிறார். அநுரவின் உரைகளும் முயற்சிகளும் இதைச் சொல்கின்றன. அவரிடம் நிதானமும் மென்போக்கும் யதார்த்தத்தைப் புரிய வைக்கும் முனைப்பும் உள்ளது.

பௌத்த பீடங்களுடன் அநுரகுமார நெருக்கத்தைக் காட்டுவது கூட தன்னுடைய கடினமான நோக்கினை நிறைவேற்றுவதற்கான ஒரு வகையான அரசியல் உத்தியாகவே படுகிறது. அதாவது தனக்கும் சிங்கள பௌத்தத்துக்கும் இடையில் இடைவெளி இருப்பதாக அந்தத் தரப்பினர் உணரக் கூடாது. அப்படி உணர்ந்தால் அது தன்னுடைய மாற்று அரசியலை — முறைமை மாற்றத்தோடு கூடிய அரசியலை மேற்கொள்வதற்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தக் கூடும் எனக் கருதியே பௌத்த பீடங்களுடன் நெருக்கத்தைக் காட்டுவதாக தெரி



கிறது. ஏறக்குறைய பிரதமர் ஹரிணியும் இந்த அலைவரிசையில் தான் உள்ளார். NPP யின் முகமே பிரதானமாக இவர்கள் தான்.

ஆனால் அரசாங்கத்தரப்பிலுள்ள ஏனையவர்கள் (NPP யின் ஏனைய ஆட்கள்) JVP யின் அடையாளத்தையே பிரதிபலிக்கிறார்கள். அவர்கள் இன்னும் இனவாதச் சிந்தனையிலிருந்து விடுபடவில்லை என்பதால் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் உளநிலை (கரிசனை) NPP க்கு இல்லை என்பதை அமைச்சர்கள் வெளிப்படையாகவே தெரிவித்து வரும் கருத்துகள் சொல்கின்றன. இது எவ்வளவு கவலைக்கும் வெட்கத்துக்கும் உரியது! இனவாதத்தைத் தூக்கிச் சுமந்து கொண்டிருக்கும் வரையில் JVP யினால் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியவில்லை. இனவாதத்துக்கு வெளியே வந்துNPP யாக அது முகம் காட்டிய போது தான் அதற்கு அங்கீகாரமும் அதிகாரமும் கிடைத்தது. தமிழ் பேசும் மக்களுடைய ஆதரவை NPP பெற்றதும் இனவாதமற்ற போக்கை அது கொண்டிருக்கிறது என்றபடியால் தான்.

JVP யினர் NPP யைப் பிடித்துப் பின்னோக்கி இழுப்பதற்குக் காரணம், அவர்கள் இயல்பில் இனவாத சிந்தனையில் ஊறியவர்கள் என்பதே. ஆனால், அதிலிருந்து விலகி மீறி வரவேண்டும் என்பதே வரலாற்றின் நிபந்தனையாகும்.

ஆனாலும் இந்த விடயத்தில் கடந்த கால ஆட்சியாளர்களின் வழித்தடத்திலேயே NPP யும் பயணிக்க முயற்சிக்கிறது. அல்லது NPP ஐ அப்படி பயணிக்க வைக்க JVP முயற்சிக்கிறது.

தன்னுடைய நிறைவேற முடியாதிருந்த நீண்ட காலக்கனவுகளை NPP யின் மூலம் நிறைவேற்றுவதற்கு JVP விரும்புகிறது.

அதனால் அது NPP யில் அழுத்தத்தைப் பிரயோகிக்க முயற்சிக்கிறது. என்பதால் தான் NPPக்குள் குழப்பங்களும் தடுமாற்றங்களும் நீடிக்கின்றன. NPPக்குள் குழப்பங்களும் தடுமாற்றங்களும் உள்ளவரை அதனால் முறைமை மாற்றத்தை (System Change) மட்டுமல்ல மக்கள் எதிர் பார்க்கின்ற எதையும் செய்யவே முடியாது. இது தான் இப்போது NPP மீதான விமர்சனங்களாகவும் நம்பிக்கையீனமாகவும் மேற்கிளம்புகின்றன.

இதொரு புறமிருக்க, தமிழ் பேசும் சமூகத்தினர் நம்பிக்கை கொள்ளக் கூடிய அளவுக்கு NPP யின் எந்தச் செயற்பாடுகளும் அமையவில்லை. பதிலாக அவர்களுடைய நம்பிக்கையைச் சிதைக்கும்படியாகவே அமைச்சர்களின் பேச்சுகளும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளும் உள்ளன. இதனால் தான் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது தமிழ் பேசும் மக்களிடம் NPP க்கான ஆதரவில் இறக்கம் நிகழ்ந்தது. ஆனால், பாராளுமன்றத் தேர்தலில் கிடைத்த ஆதரவையும் விட உள்ளூராட்சித் தேர்தலில் கூடுதலான ஆதரவு கிட்டும் என்றே NPP எதிர்பார்த்தது.

இதற்காக வடக்குக் கிழக்கு மற்றும் மலையகமெங்கும் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் எனப் பலரும் கிராமங்களுக்குக் கூடச் சென்றனர். யாழ்ப்பாணத்தில் 17 சபைகளையும் NPP யே கைப் பற்றும் என்று அமைச்சர் சந்திரசேகரன் உள்பட NPP பலரும் வெளிப்படையாகவே சொன்னார்கள் நம்பினார்கள். ஆனால், ஒரு சபையைக் கூட NPP யினால் கைப்பற்ற முடியவில்லை. (இதற்குப் பிரதான காரணம் அமைச்சர் சந்திரசேகரன், பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் போன்றோரின் பொறுப்பற்ற அதிகாரத்தனமான பேச்சுகளும் கேலிக்குரிய நடத்தைகளுமாகும் என்று சொல்கிறார்கள் வடக்கிலுள்ள NPP ஆதரவாளர்கள்).

வடக்கில் மட்டுமல்ல, நாடு முழுவதிலும் வெவ்வேறு விதமாக NPP மீதான கேள்விகள் எழுந்துள்ளன. இதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை NPP க்கு. இதனால்தான் தாம் ஆட்சியமைக்கக் கூடிய சபைகளில் தாம் ஆட்சியமைப்பதற்கு யாராவது இடையூறு விளைவித்தால் இடைஞ்சலாக இருந்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று ஜனாதிபதி நிதானமிழக்க நேர்ந்தது.

இந்த நிதானமிழப்பை NPPயின் அமைச்சர்கள் பலரிடத்திலும் கூடக் காண முடிகிறது. அவர்கள் நிதானமிழந்தால் அவர்களுக்கும் NPP க்கும் தான் நட்டம் பாதிப்பு. மக்களுக்கும் பாதிப்புண்டு தான். ஆனால், அவர்கள் வரலாற்றின் ஓட்டத்தில் இன்னொரு மாற்றத்துக்காக முயற்சிப்பார்கள். ஒரு காலம் ராஜபக்ஸக்களை ஏற்றுக் கொண்ட மக்கள், இன்னொரு காலச் சூழலில் அவர்களை விரட்டி அடித்ததைப் போல, NPP யை விட்டு விட்டு இன்னொரு சக்தியைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள்.

ஆகவே மக்களைத் தம்மோடு வைத்துக் கொள்வதா இல்லையா என்பதை NPP தான் முடிவு செய்ய வேண்டும். மக்களைத் தம்முடன் வைத்துக் கொள்வதென்றால், அவர்களுடைய நியாயமான தேவைகளை நிறைவேற்ற வேண்டும். நம்பிக்கையைக் காப்பாற்ற வேண்டும்.

இதற்கு முறைமை மாற்றம் (System Change) அவசியம். அதைச் செய்வதற்கு காலம் தாழ்த்தவே கூடாது. காலம் தாழ்த்தினால் எதிர்த்தரப்புகள் பலமடையும். இலங்கை போன்ற நாடுகளில் எளிதாக மாற்றத்தை உருவாக்கி விட முடியாது. அதற்கான வரலாற்றுச் சூழல் எப்போதும் அமைவதல்ல. NPP அது கிடைத்துள்ளது. நாட்டுக்கும் அது வாய்த்திருக்கிறது.

இப்பொழுது கடந்த ஆறு மாதங்களுக்குள்ளேயே எதிர்த்தரப்புகள் தம்மைச் சுதாகரித்துக் கொண்டு மேலெழத் தொடங்கி விட்டன. மறுவளத்தில்

கட்டுரையாளர்:–
கிளிநொச்சியில் இருந்து
– கருணாகரன் –



NPP எதிர்த் தரப்புகளின் அரசியல் அழுத்தத்திற்குப் பணியும் நிலையில் உள்ளது. தடுமாற அல்லது குழம்பத் தொடங்கி விட்டது. அதனால்தான் லால்கந்த, விஜித ஹேரத், ஹந்துன் நெத்தி போன்றவர்களெல்லாம் இனவாதத்தைத் தூக்க முற்படுகிறார்கள். இனவாதத்தைத் தூக்கினால் தான் ஆட்சியில் நீடிக்க முடியும் என்று நம்புகிறார்கள்.

இனவாதத்தை தமது அரசியலாக அரசியல் முதலீடாகக் கொண்டு அரசியல் நடத்திய சுதந்திரக் கட்சி, ஐ.தே.க மற்றும் ராஜபக்ஸக்களின் பெரமுன போன்ற சக்திகளை வரலாறு புறமொதுக்கித் தோற்கடித்து விட்டது. மட்டுமல்ல, இனவாதத்தை அரசியல் மூலதனமாக்கியதால் தான் அந்தக் கட்சிகள் தோற்றதோடு, நாடும் அழிவடைந்தது. பல்லாயிரம் மக்கள் உயிரிழக்க நேர்ந்தது. பல்லாயிரம் பேர் அங்கவீனர்களாயினர். பெருமளவு சொத்துகளும் இயற்கை வளமும் அழிந்தது. நாடு தாங்கவே முடியாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியது. அந்நிய சக்திகளிடத்திலும் உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் கால்களில் விழ வேண்டியேற்பட்டது.

வரலாறு இதை JVPக்கும் NPP க்கும் மக்களுக்கும் தெளிவாக உணர்த்தியுள்ளது. இதை JVP – NPP புரிந்து கொள்ளத் தவறினால் இவர்களும் வரலாற்றின் குப்பைக்குள் தான் வீசப்படுவர்.

முடிவாக, அரசியலமைப்பு மாற்றம் உள்பட அனைத்திலும் திருத்தங்களை வே தாமதிக்காமல் செய்ய வேண்டும். இலங்கையில் இப்போதுள்ளது காலனித்துவ ஆதிக்கச் சிந்தனைமுறையும் கட்டமைப்புகளுமேயாகும். இதை மாற்றியமைப்பதைப் பற்றி அரசாங்கமும் எதிர்த்தரப்புகளும் சிந்திக்க வேண்டும். அதாவது காலனித்துவச் சிந்தனையிலிருந்தும் கட்டமைப்புகளிலிருந்தும் (Decolinize) விடுபட வேண்டும். இதற்கான ஒரு புதிய அரசியற் பண்பாட்டைக் கொண்ட முன்னெடுப்பும் அதற்கான கட்டமைப்பும் அவசியமாகும்.

எதிர்ச்சக்திகள் ஏற்படுத்தும் நெருக்கடிகளையும் அழுத்தங்களையும் மீறி எழுந்து, நாட்டுக்குத் தேவையானதை,

(22ம் பக்கம் பார்க்க)

# சொல்லப் போனால் யார் அகதி? எது தர்ம சத்திரம்?

- எம்.பாண.டியராஜன் -

உலகம் முழுவதுமுள்ள அகதிகளை வரவேற்க இந்தியா ஒன்றும் தர்ம சத்திரம் அல்ல' என்று இலங்கைத் தமிழர் தொடர்பான தீர்ப்பு ஒன்றில் உச்ச நீதிமன்றம் தெரிவித்திருப்பது உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் தொடர்பில் இருந்ததாக சுபாஷ்கரன் என்பவர், 2015ல் கைது செய்யப்பட்டு, 2018ல் ராமநாதபுரம் விசாரணை நீதிமன்றம் பத்தாண்டு சிறைத்தண்டனை விதித்த நிலையில், மேல் முறையீட்டில் 2022ல் 7 ஆண்டுகளாகத் தண்டனையைச் சென்னை உயர் நீதிமன்றம் குறைத்தது.

மேலும் தண்டனை முடிந்ததும் இந்தியாவில் இருக்கக் கூடாது இலங்கை திரும்ப வேண்டும் என்றும் உத்தரவிட்டது. தண்டனைக் காலம் முடிவடையவுள்ள நிலையில், சுபாஷ்கரனை நாடு கடத்தாமல் இந்தியாவிலேயே தங்கியிருக்க அனுமதி கேட்டுத் தமிழ்நாடு அரசிடம் அவருடைய மனைவி விண்ணப்பித்தார் அரசு பதிலளிக்கவில்லை. தொடர்ந்து, சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்த சுபாஷ்கரன், மனைவி குழந்தைகள் இந்தியாவில் குடியேறி விட்ட நிலையில், தன்னையும் இங்கேயே இருக்க அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். விசாரித்த நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, கே. வினோத்சந்திரன் ஆகியோரைக் கொண்ட உச்ச நீதிமன்ற அமர்வோ மனுவைத் தள்ளுபடி செய்து விட்டது. கூடவே... உலகம் முழுவதிலுமிருந்து வரும் அகதிகளை இந்தியா வரவேற்க வேண்டுமா? ஏற்கெனவே, நாங்கள் 140 கோடி மக்கள்தொகையுடன் போராடி வருகிறோம்.

அனைத்து நாடுகளிலுமிருந்து வரும் வெளிநாட்டினரை வரவேற்று மகிழ்விக்க இந்தியா தர்ம சத்திரம் அல்ல. இந்தியாவில் குடியேற உங்களுக்கு என்ன உரிமையுள்ளது? இலங்கையில் உயிருக்கு ஆபத்து இருந்தால் வேறு நாட்டுக்குச் சென்று அடைக்கலம் கோருங்கள்'' என்றும் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்..

தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து வழக்கு தொடர்பான சுபாஷ்கரனை மட்டுமல்ல் தாண்டி ஒட்டுமொத்த தமிழர்களையுமே புறந்தள்ளுவதாகவும் நிராகரிப்பதாகவும் இருப்பதாகத் தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் மட்டுமின்றிப் புலம்பெயர்ந்து உலகெங்கும் வாழும் ஈழத் தமிழர்களையும் வேதனையில் ஆழ்த்தியிருக்கிறது.

இனக் கலகத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட நிலையில், 1980-களில் தொடங்கி கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவில் தமிழ்நாட்டை நோக்கியும் தமிழ்நாட்டின் வழியாக உலகின் பிற நாடுகளை நோக்கியும் ஈழத் தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் வெளியேறினர் வெளிநாடுகளுக்குச் செல்வதற்குச் செலவிட முடியாத நிலையிலிருந்த, பெரும்பாலும் ஏழைகள், நடுத்தர குடும்பங்களைச் சேர்ந்த சில லட்சம் பேர், தமிழ்நாட்டிலேயே தங்கி விட்டனர். பிற நாடுகளை விடவும் ஒரே மொழி, ஒரே பண்பாடு மட்டுமல்ல, தாயான தமிழகம், நாமெல்லாம் தமிழர்கள் என்ற உணர்வும் நம்பிக்கையும் இவர்களைப் பாதுகாப்பு எனக் கருத வைத்துவிட்டது



அதுவே ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்து அனுபவித்துக் கொண்டிருக்கும் அனைத்துத் துயரங்களுக்கும் கூட காரணமாகியும் விட்டது!

உலகம் முழுவதும் ஒவ்வொரு நாளும் எங்கோ ஒரு மூலையில் யாரோ சிலர் ஏதோவொரு காரணத்துக்காகத் தங்கள் வாழிடத்தைத் துறந்து வெளியேறிக்கொண்டுதான் இருக்கின்றனர். பெருமெடுப்பிலான பல வெளியேற்றங்களுக்கான முதன்மைக் காரணங்கள் ஆயுதப் போராட்டங்கள், சண்டைகள், வன்முறைகள். இடைவிடா போர்கள், இன அடிப்படையிலான மோதல்கள், மத அடிப்படையிலான அச்சுறுத்தல்கள், விடுதலைப் போராட்டங்கள், பசி, பஞ்சம், பட்டினி, பாலியல்ரீதியிலான வன்கொடுமைகள், சில தருணங்களில் வாழமுடியா பேரழிவுகள் என இன்னும் எத்தனையோ காரணங்கள்..

முற்றிலும் ஏலாத நிலையில் பெரும்பாலும் தங்கள் நாட்டையொட்டியுள்ள, வாய்ப்புக் கிடைத்தால் சற்றுத் தொலைவில் இருக்கும் ஏதேதோ நாடுகளைத் தேடி ஏதிலிகளாக அகதிகளாக, கொஞ்சமும் விருப்பமின்றி, உயிர் பிழைத்தால் போதும், தங்கள் குடும்பங்களைக் காக்க முடிந்தால் போதும் என்றுதான், வேரோடும் வேரடி மண்ணோடும் எல்லாவற்றையும் பறித்தெடுத்துக் கொண்டு மக்கள் வெளியேறுகின்றனர்.

உலகம் முழுவதும் 6.33 கோடி மக்கள் தங்கள் வாழிடங்களை விட்டு இடம் பெயர்ந்து வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் 4.34 கோடி பேர் அகதிகள் என்ற நிலையில் இருக்கின்றனர். நாடற்றவர்கள் அல்லது நாடற்றவராகும் ஆபத்தில் இருப்பவர்கள் 44 லட்சம். 2023ல் உலகம் முழுவதும் பிற நாடுகளில் தஞ்சம் கேட்டிருப்பவர்கள் எண்ணிக்கை 36 லட்சம்.அகதிகள், புலம்பெயர்ந்தோர் எண்ணிக்கையில் 73 சதவிகிதத்தினர் ஆப்கானிஸ்தான், சிரியா, வெனிசுவேலா, உக்ரைன், சூடான் ஆகிய 5 நாடுகளைச் சேர்ந்தவர்கள். மூன்றிலொரு பங்கு அகதிகளுக்கு ஐரோப்பிய நாடுகள் தான் மறுவாழ்வு அளிக்கின்றன.


உலகிலேயே ஈரானில் தான் மிக அதிகளவிலான அகதிகள் தஞ்சமடைந்து வாழ்கின்றனர் - வாழ வைக்கப்படுகின்றனர் 37.6 லட்சம் பேர் (பெருமபாலும் ஆப்கானியர்கள்). அடுத்தடுத்து, துருக்கி (36 லட்சம்), ஜெர்மனி, உகாண்டா, பாகிஸ்தான், சாட், ரஷியா, எத்தியோப்பியா, வங்கதேசம், போலந்து ஆகிய நாடுகள் இடம் பெறுகின்றன.உள்நாட்டுக் கலகம், அமைதியின்மை காரணமாக சூடானிலிருந்து அருகிலுள்ள நாடுகளுக்கு வெளியேறியோர் மட்டும் 12 லட்சம். ஆப்கானிஸ்தானிலிருந்து அல்லது சிரியாவிலிருந்து வெளியேறியவர்கள் 1.28 கோடி பேர்! அகதிகளில் 75 சதவிகிதத்தினர் வறிய அல்லது நடுத்தர வருமானமுள்ள நாடுகளில் தான் இருக்கின்றனர் (இந்தியா எந்தப் பிரிவில் வருகிறதெனத் தெரியவில்லை)..மியான்மரில் நாடற்றவர்களாகக் கருதப்படுவோர் ரோஹிங்கியா முஸ்லிம் மக்கள். 2017 வன்முறைக்குப் பிறகு மியான்மரிலிருந்து 12 லட்சம் பேர் அகதிகளாக வெளியேறியிருக்கின்றனர். இவர்களில் 90 சதவிகிதத்தினர் வங்கதேசத்திலும் மலேசியாவிலும் தஞ்சமடைந்திருக்கின்றனர். சொந்த நாட்டிலேயே அகதிகளாக இருப்பவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். மணிப்பூரில் 2023 மே 3ஆம் தேதி தொடங்கிய வன்முறைகளைத் தொடர்ந்து, மோதிக் கொள்ளும் மெய்தி, குக்கி ஆகிய இரு இனங்களையும் சேர்ந்த 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மாநிலத்துக்குள்ளேயே வாழிடம் பெயர்ந்து மிகவும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

அதிபர்கள், பிரதமர்கள், முதல்வர்கள், நீதிபதிகள் மட்டுமின்றிக் கஞ்சிக்கே வழியின்றிக் கஷ்டப்படும் பல நூறு கோடி ஏழைகள் உள்பட நாம் எல்லாரும் இந்த உலகத்தில் தான் நிலப்பரப்புகள் வேறுவேறாக இருந்தாலும் ஒன்றாகத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நம் எல்லாருக்குமே பரஸ்பரம் உயிர்களைக் காக்க வேண்டிய பொறுப்பு என்றொன்று இருக்கிறது.ஏதோவொரு வகையில் நாம், இந்தியாவோ, இன்ன பிற நாடொன்றோ, நல்ல நிலைமையில் இருப்பதாகக் கொள்ளலாம்.

ஏதோ ஒரு காரணத்தால் தங்கள் நாடுகளை விட்டு அகதிகளாக வெளியேறும் மக்களைக் கண்டுகொள்ளாமல் ஒருவரால் அல்லது ஒரு நாட்டால் எப்படி இருக்க முடியும்? உலகில் அகதிகள் பாதுகாப்புக்கென எத்தனையோ சட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன் ஆனால், இவற்றைப் பின்பற்றுவதற்குத்தான் சில நேரங்களில் ஆள்களையும் நாடுகளையும் தேட வேண்டியிருக்கிறது. பரந்து கிடக்கிறது உலகம்.

1983 இனக் கலகத்தைத் தொடங்கி, இலங்கையிலிருந்து உயிருக்குப் பயந்து தமிழர்கள் வெளியேறத் தொடங்கினார்கள். தொடர்ந்தது ஆயுதப் போராட்டமும் அரச அடக்குமுறைகளும் ராணுவ நடவடிக்கைகளும் (18ம் பக்கம் பார்க்க)


சிவமயம்



ஸ்ரீ கைலாசம்
சைவசமய கிரியைகள் சேவை

சமயதீட்சை
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு)
அந்தியேட்டி (தர்ப்பை சுடுதல்)

ஆகியவற்றை ஈழத்து சைவ பாரம்பரிய முறையில் செவ்வனே செய்து கொள்வதற்கு
சைவக்குருக்களை
தொடர்பு கொள்ளவும்
"இணுவில் திருவூர்"
சிவஸ்ரீ. M.S. வைத்தியநாதன் குருக்கள்
647.629.5468
msvkurukkal@gmail.com

# ஒரு தீவு இரு நினைவு நாட்கள்

கடந்த 18ஆம் தேதியும் 19 ஆம் தேதியும் இலங்கைத் தீவில் இரண்டு மக்கள் கூட்டங்கள் இருப்பதனை மீண்டும் உணர்த்திய அடுத்தடுத்த நாட்கள். 18 ஆம் திகதி தமிழ் மக்கள் இன அழிப்பை நினைவு கூர்ந்தார்கள். 19ஆம் திகதி சிங்கள மக்கள் யுத்த வெற்றியைக் கொண்டாடினார்கள்.

பதினெட்டாம் திகதியை நோக்கி அந்த வாரம் முழுவதும் தமிழ் மக்கள் ஊர் ஊராக, சந்தி சந்தியாக கஞ்சி காய்ச்சிக் கொடுத்தார்கள். 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மைதானத்தில் ஆயிரக்



கணக்கில் கூடினார்கள் உருகி அழுதார்கள். அடுத்த நாள் கொழும்பில் அரசாங்கம் யுத்த வெற்றியைக் கொண்டாடியது. காலையில் அரசுத் தலைவர் உடல் வழங்காத படை வீரர்கள் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்று அவர்களைக் கௌரவித்தார். அதன்பின் படைத் தளபதிகளோடு போய் யுத்த வெற்றி வீரர்களின் நினைவுச் சின்னத்தைத்த தரிசித்தார்.

நாட்டின் ஒரு பக்கத்தில் தமிழ் மக்கள் துக்கத்தை அனுஷ்டித்த அடுத்த நாள் நாட்டின் தலைநகரில் சிங்கள மக்களும் அவர்களுடைய பிரதானிகளும் வெற்றியைக் கொண்டாடினார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு ஊடகவியலாளர் எழுதியது போல மே பதினெட்டு கொல்லப்பட்டவர்களின் தினம் மே பத்தொன்பது கொன்றவர்களின் தினம்.

பதினெட்டாம் திகதி பெரும்பாலான தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்கள் முள்ளிவாய்க்காலில் கூடியிருந்தார்கள். 19ஆம் திகதி பெரும்பாலான சிங்களத் தலைவர்கள் தமது வெற்றி நாயகர்களைப் போற்றி அறிக்கை விட்டார்கள்.

பதினெட்டாம் தேதி தமிழ் மக்கள், உணவு ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட ஒரு யுத்தத்தின் நினைவாக கஞ்சியைப் பகிர்ந்தார்கள். முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தின் முன் பூக்களை வைத்து அஞ்சலித்தார்கள். அதே நாளில் யுத்த வெற்றி வீரர்களின் நினைவுச் சின்னத்தின் முன் ‘‘பிவிதுறு ஹெல உரிமை’’யின் செயற்பாட்டாளரான பெண் ஒருவர் சிறப்பு அதிரடிப் படை வீரருக்கு ஒரு ரோஜாப் பூவை பரிசளித்தார்.

பதினெட்டாம் தேதி முள்ளிவாய்க்காலில் கூட்டுத் துக்கமும் கூட்டுக் காயங்களும் கூட்டு இழப்பும் கூட்டு அவமானமும் கண்ணீராய் பெருகி ஓடின. 19ஆம் திகதி கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கை தலைநகரங்களிலும் கூட்டு வெற்றி கொண்டாடப் பட்டது.

18 ஆம் தேதி தமிழ் அரசியல்வாதிகள் தமது மக்களின் கூட்டுத் துக்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள். அதே நாளிலும் அடுத்த நாளும் சிங்கள அரசியல்வாதிகள் யுத்த வெற்றியைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது செய்தியில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்... சண்டை பிடிப்பது நமக்கு புறத்தியானது அல்ல. நாங்கள் சமர்க் களத்தில் சுய கட்டுப்பாடு உடையவர்கள். எங்களுக்கு நன்றாகத் தெரியும் சண்டை என்றால் என்ன? யாருடன் என்று? மகத்தான மன்னர்களான துட்டு கெமுனு, வளகம்பா,தாது சேனன்,விஜய பாகு ஆகிய மகத்தான மன்னர்கள் அந்நிய படையெடுப்பாளர்களை தோற்கடித்து வெற்றியை உறுதிப்படுத்திய நிலம் இது. பிரிட்டிஷ்காரர் டச்சுக்காரர் போர்த்துக்கீசர் போன்ற கொலனித்துவ சக்திகளுக்கு எதிராக தேசபக்தர்கள் சமர் புரிந்த நிலம் இது. வீரபுரான் அப்பு கெப்பிட்டிபொல போன்ற நாயகர்களும் பௌத்த துறவிகளும் மேலாதிக்க சக்திகளுக்கு எதிராக எழுந்த நிலம் இது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காக ஆயிரக்கணக்கான வீரம் மிகுந்த யுத்த நாயகர்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்து 30 ஆண்டுகால கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த நாடு இது. அதாவது அவர் சுட்டிக் காட்டும் உதாரணங்கள் அந்நியப் படைகளுக்கு எதிரானவை. அதாவது தமிழர்களையும் அவர் அந்நியராகத் தான் பார்க்கிறார்?

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பிடமிருந்து தாயகத்தை விடுவித்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம் என்று தனது செய்தியில் கூறியுள்ளார்.

தாயகத்தின் நீட்சியும் அகட்சியுமாகக் காணப்படும் புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் குறிப்பாக கனடாவில் அண்மையில் ஒரு இன அழிப்பு நினைவகம் திறக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே அதிக தொகை தமிழர்கள் வாழும் இடம் கனடா.அங்கே அந்த நினைவுத் தூபியை திறந்து வைத்து உரை நிகழ்த்திய பிரம்டன் நகர மேயர் பின்வருமாறு சொன்னார்

இன அழிப்பு நடந்தது என்பதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கொழும்புக்கு திரும்பி போய் விடுங்கள் என்று. ஆனால் கொழும்பிலிருந்து கொண்டு நாமல் ராஜபக்ச அதற்கு எதிராகக் குரல் கொடுத்தார்.முன்னாள் வெளியுறவு அமைச்சரும் இந்நாள் வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்தும் கூறுகிறார்கள், நாட்டில் இன அழிப்பு நடக்கவில்லை என்று.

முள்ளிவாய்க்காலில் திரண்ட ஆயிரக் கணக்கான மக்கள் கூறுகிறார்கள் நடந்தது இன அழிப்பு என்று. கனடாவிலும் தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் வாழும் தமிழர்கள் கூறுகிறார்கள் அது இன அழிப்பு என்று. பொறுப்புக்கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரித்து வருகிறது’’ என்று கனேடியப் பிரதமர் மார்க் கார்ணி தனது செய்தியில் கூறியுள்ளார். அவருடைய செய்தியில் இனஅழிப்பு என்ற வார்த்தையைப் பிரயோகித்திருக்கிறார்.க னேடிய கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர், இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு. ராஜபக்ச அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது என்று கூறியுள்ளார்.

அதாவது தமிழ் மக்களும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் அரசியல்வாதிகளும் கூறுகிறார்கள், நடந்தது இன அழிப்பு என்று. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் கூறுகிறார்கள் அது இன அழிப்பு இல்லை என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் கூறுகிறார்...இன அழிப்பு என்று கூறினால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று.

மேற்கண்டவற்றைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது என்ன தெரிகிறது? இச்சிறிய தீவில் இரண்டு வகை நினைவுச் சின்னங்கள் உண்டு. இரண்டு மக்கள் கூட்டங்கள் உண்டு. இரண்டு வேறு அரசியல் அபிப்பிராயங்கள் உண்டு. இரண்டு வேறு தேசங்



கள் உண்டு. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரான அபிலாசைகளோடும் இருவேறு அரசியல் நிலைப்பாடுகளோடும் காணப்படுகின்றன. ஆனால் அரசுத் தலைவர் அனுர வெற்றி வீரர்களின் சின்னத்தை முன்னிறுத்தி பின்வருமாறு கூறியுள்ளார் ‘‘இந்த நினைவிடத்தின் முன் நாம் நின்று அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்துவது என்பது மீண்டும் ஒரு மோதல் ஏற்பட இடமளிக்காமல் வெறுப்பு நிறைந்த சமூகத்திற்குப் பதிலாக, சகோதரத்துவம் அன்பு மற்றும் நல்லிணக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்கத் தயார் என்று உறுதி மொழியை எடுப்பதற்காகவும்’’ என்று.


அந்த நினைவுச் சின்னமே நல்லிணக்கத்திற்கு எதிரானது. ஒரு இனத்தின் வெற்றியைக் கொண்டாடுவது. நாடு இப்பொழுதும் வென்றவர்கள் தோற்றவர்கள் என்று இரண்டாகதான் நிற்கிறது. நாட்டின் வடக்கில் முள்ளிவாய்க்காலில் மற்றோர் நினைவுச் சின்னம் உண்டு.கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்த ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் ஒருவர் கூட அந்த நினைவுச் சின்னத்துக்கு வரவில்லை. அங்கே ஒரு பூவைக் கூட வைக்கவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகளை எந்த சஜித்துக்கு சுமந்திரன் சாய்த்துக் கொடுத்தாரோ அந்த சஜித்தோ அவருடைய கட்சிப் பிரமுகர்களோ அந்த நினைவுச் சின்னத்துக்கு வரவில்லை. அங்கே ஒரு பூவைக் கூட வைக்கவில்லை. ஆனால் சுமந்திரன் கொழும்பில் மே 18ஐ நினைவு கூர்ந்த பொழுது. சஜித் யுத்த வெற்றியைப் போற்றி அறிக்கை விட்டிருந்தார். சிங்களத் தலைவர்கள் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வாக்காளர்களுக்கு உண்மையாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் அப்படியிருக்கிறார்கள்?


நாடாளுமன்ற தேர்தலிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற அனுர 19 ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ செய்தியில் பின்வருமாறு கூறியுள்ளார்... நாம் முழுமையான வெற்றியாளர்கள் அல்ல. நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதன் மூலம் மட்டுமே நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற முடியும். எனவே அச்சமின்றி சமாதானத்துக்காக எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.... யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த தன் மூலம் தாய்நாட்டின் முழுமையான சுதந்திரத்தை நாம் பெறவில்லை..’’

கடந்த 16 ஆண்டுகளில் ஒரு பேருண்மையை ஒப்புக்கொண்ட முதலாவது அரசுத் தலைவர் அவர். 2009 மே மாதம் தாங்கள் பெற்ற வெற்றி முழுமையானது அல்ல என்பதனை அவர் ஒப்புக் கொள்கிறார். போரில் வெற்றி பெற்ற பின்னரும் நாட்டில் சமாதானத்தை உருவாக்க முடியவில்லை என்பதனை அவர் ஏற்றுக் கொள்கிறார். அது தான் உண்மை. தமிழ் மக்களுக்குச் சமாதானம் இல்லையென்றால் சிங்கள மக்களுக்கும் சமாதானம் இல்லை.இந்தப் பிராந்தியத்துக்கும் சமாதானம் இல்லை 16 ஆண்டுகளின் பின்னரும் வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையே இரண்டாகப் பிளவுண்டிருக்கும் இலங்கைத் தீவு.

# இவ்வாரம் உங்களுக்கு எப்படி?




மேடராசி அன்பர்களே! நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். மற்றவர்களின் காரியங்களில் ஈடுபடும் போது கவனம் தேவை. திட்டமிட்டு எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் கூடுதல் கவனம் தேவை. வாடிக்கையாளர்களை அனுசரித்து நிதானமாக பேசுவது நன்மை தரும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். மேலதிகாரிகளுடன் கவனமாக பேசுவது நல்லது.





ரிஷபராசி அன்பர்களே! சில குழப்பங்கள் நேர்ந்தாலும் இது வரை நடக்காமல் இருந்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து மனநிம்மதி அடைவீர்கள். அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். பொழுது போக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும். தொழில் வியாபாரம் நடக்க தேவையான உதவிகள் கிடைக்கும்.





மிதுனராசி அன்பர்களே! சில சங்கடங்கள் நேரலாம். கெட்ட கனவுகள் உண்டாகலாம். எதிர்பாராத இடமாற்றம் ஏற்படும். உஷ்ண சம்பந்தமான நோய் ஏற்படலாம். எதிர்பார்த்த பணம் கைக்கு வர தாமதமாகும். இடம் பொருள் அறியாமல் பேசுவதால் அடுத்தவர்களிடம் மனஸ்தாபம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் திடீர் செலவுகள் உண்டாகும். வீண் அலைச்சல் இருக்கும். உத்யோகத்தில் இருப்பவர்கள் தேவையற்ற பயணம் செல்ல நேரலாம்.





கடகராசி அன்பர்களே! எந்த விஷயத்தையும் எளிதாக எடுத்து கொள்வீர்கள். சுக்கிரன் சஞ்சாரத்தால் அலைச்சலை சந்திக்க நேரிடும். எதிர்பாலினத்தாரிடம் பழகும் போது கவனம் தேவை. விருப்பத்திற்கு மாறான சம்பவங்கள் நடக்கலாம். தொழில் வியாபாரத்தில் குறிப்பாக கூட்டு தொழிலில் இருப்பவர்கள் எச்சரிக்கையாக செயல்படுவது நல்லது.கணவன், மனைவிக்கிடையே நீடித்து வந்த மனவருத்தம் நீங்கி சந்தோஷமான சூழ்நிலை ஏற்படும்.





சிம்மராசி அன்பர்களே! அறிவு திறமை வெளிப்படும். உங்கள் வார்த்தைக்கு மதிப்பு உண்டாகும். அடுத்தவர்களின் குற்றச்சாட்டுக்கு ஆளாக நேரிடலாம். தொழில் வியாபாரம் தொடர்பான அலைச்சல் இருக்கும். அடுத்தவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்கும் போது கவனம் தேவை. அவற்றை ஆராய்ந்து பார்த்து செய்வது நல்லது. புதிய பொறுப்புகள் கிடைக்கும். புதன்கிழமை அவதானம் தேவை.




கன்னிராசி அன்பர்களே! சுபச் செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அடுத்தவர் பிரச்னைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. உத்யோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. குடும்பத்தில் சுபகாரியங்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும்.




துலாம்ராசி அன்பர்களே! மனதில் குறிக்கோளை வைத்து துணிவுடன் செயலாற்றுவீர்கள். உங்கள் பேச்சு திறமையால் பல காரியங்கள் சிறப்பாக நடந்துமுடியும். முக்கிய பிரமுகர்களின் அறிமுகம் அவர்களால் உதவி கிடைக்கலாம். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு உதவுவதற்காக யாராவது ஒருவர் துணை நிற்பார். தொழில் வியாபாரம் விரிவாக்கம் செய்ய எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும். போட்டிகள் விலகும். உத்தியோகஸ்தர்களுக்கு உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்கும்.





விருச்சிகராசி அன்பர்களே! சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியங்களை சாதிப்பீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கான வாய்ப்புகள் வரும். வெளியூர் பயணங்கள் சாதகமான பலன் தரும். மற்றவர்களின் நலனுக்காக வாதாடி வெற்றி பெறுவீர்கள். கவுரவம், அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு இடமாற்றம் உண்டாகலாம்.








தனுசுராசி அன்பர்களே! எதிலும் லாபமான நிலை காணப்படும். எடுத்த காரியத்தை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். எதிலும் தயக்கமோ பயமோ இருக்காது. தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் லாபம் கூடும். ஆனால் கைக்கு பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உத்யோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவார்கள். குடும்பத்தில் இருப்பவர்கள் உங்கள் விருப்பத்திற்கு மாறாக எதையும் செய்வார்கள்




மகரராசி அன்பர்களே! எடுத்த காரியத்தை தைரியமாக உறுதியுடன் செயல்படுத்துவீர்கள் .உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.வீடு, மனை வாங்க திட்டமிடுவீர்கள். எடுக்கும் காரியம் சிறிது முயற்சிக்கு பின் நடைபெறும். தொழில் வியாபாரம் ஏற்ற இறக்கமாக இருந்தது இனி சீராகும். பழைய பாக்கிகள் வசூலாகும். உத்யோகத்தில் இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டி இருக்கும். தேவையான வசதி வாய்ப்புகள் கிடைக்கும்.




கும்பராசி அன்பர்களே! எந்த காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்து வெற்றி பெறுவீர்கள். மனதில் தைரியமும், தன்னம்பிக்கையும் பிறக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. நண்பர்கள், உறவினர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். தந்தையுடன் மனஸ்தாபம் ஏற்படலாம். கணவன், மனைவிக்கிடையே ஒற்றுமை காணப்படும். நம்பிக்கையுடன் செயலாற்றி நன்மை அடைவர்.




மீனராசி அன்பர்களே! எதையும் சாதிக்கும் திறமை உண்டாகும். எடுத்த காரியத்தை செய்யும் போது எது சரி, எது தவறு என்று தடுமாற்றம் ஏற்பட்டாலும் திறமையால் அதனை செய்து முடிப்பீர்கள். பண வரவு எதிர்பார்த்தபடி இருக்கும். தொழில் வியாபாரம் முன்னேற்ற பாதையில் செல்லும். நிதி உதவி கிடைக்கும். வாடிக்கையாளர் மத்தியில் மதிப்பு கூடும். உத்யோகத்தில் இருப்பவர்களுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கலாம்.

வெள்ளிக்கிழமைகளில்
உங்கள் அபிமான
ஈழநாடு பத்திரிகையை
eelanadu.ca
மின்னிதழ்
மூலமாகவும் வாசிக்கலாம்.

## மாகாணசபைகளும் தமிழ் அரசியல்...

(17ம் பக்கத் தொடர்ச்சி) நடைமுறைப்படுத்துவதன் மூலமாகவோ தேசிய இனப்பிரச்சினைக்கு நிலைபேறான அரசியல் தீர்வொன்றைக் கண்டு விட முடியும் என்று இந்த கட்டுரையாளர் நம்புவதாக எவரும் கருத வேண்டியதில்லை. ஆனால், போரின் முடிவுக்கு பிறகு 16 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட தமிழ் மக்கள் பெருமளவக்கு ஒரு அரசியல் வெற்றிடத்தில் இருப்பதால் அவர்களின் பிரச்சினைகளை கையாளுவதற்கான அணுகுமுறையை எங்கிருந்து தொடங்குவது என்ற தெளிவு தமிழ் அரசியல் சமுதாயத்திடம் இல்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

வடக்கு கிழக்கில் தமிழர்கள் தென்னிலங்கையைச் சேர்ந்த தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்கக்கூடாது என்று கூறிக் கொண்டு உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழ்க்கட்சிகள் கூடுதலான வாக்குகளைப் பெற்று விட்டதால் நிலைவரத்தில் எந்த மாற்றமும் வந்துவிடவில்லை. தங்களுக்கு கிடைத்த வாக்குகள் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியவாத அரசியல் இலட்சியத்தை கைவிடவில்லை என்பதை மீண்டும் நிரூபித்து விட்டதாக தமிழ் அரசியல்வாதிகள் திருப்தியடைந்திருக்கிறார்கள். ஆனால், தமிழ்ப் பகுதிகளில் உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் அவர்களால் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு இன்னமும் வர முடியவில்லை. தமிழர்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கக் கூடாது என்பதில் மாத்திரம்தான் அவர்களால் ஒன்றுபட்டு நிற்க முடிந்தது.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கு பிறகு ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்களைச் சந்தித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளருமான எம்.ஏ. சுமந்திரன் வடமாகாண சபை தேர்தலில் தனது கட்சியின் சார்பில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவதில் தனக்கு இருக்கும் விருப்பத்தை வெளிப்படுத்தினார்.

அது தொடர்பாக ஊடக சந்திப்பில் தமிழரசு கட்சியின் தலைவர் சி.வி.கே. சிவஞானத்திடம் செய்தியார்கள் கேட்டபோது மாகாணசபை தேர்தல்கள் எப்போது நடைபெறும் என்பதே தெரியாமல் இருப்பதால் முதலமைச்சர் வேட்பாளர் பற்றி பேசுவது அவசியமற்றது என்று அவர் பதிலளித்தார். மாகாணசபை தேர்தலைப் பற்றிக்கூட பேச வேண்டாம் என்றும் அவர் செய்தியாளர்களிடம் கேட்டுக் கொணடார்.

யாழ்ப்பாணத்தில் தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு கடந்த வாரம் நேர்காணல் ஒன்றை வழங்கிய சிறீதரனிடமும் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவது குறித்து சுமந்திரன் வெளியிட்ட விருப்பம் தொடர்பாக கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர் சுமந்திரன் பற்றி சில விமர்சனங்களை முன்வைத்ததுடன் மாகாணசபை தேர்தல்கள் விரைவில் நடத்தப்படக்கூடிய வாய்ப்பு இல்லை என்றும் கூறினார். எல்லை நிர்ணயம் தொடர்பிலான சட்ட இழுபறியை அதற்கு சிறீதரன் ஒரு காரணமாகவும் சொன்னார்.

முதலமைச்சராக யார் போட்டியிடுவது என்பது தேர்தல்கள் அறிவிக்கப்பட்ட பிறகு தீர்மானிக்கப்பட வேண்டிய விடயம். ஒரு அரசியல்வாதி என்ற வகையில் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு சுமந்திரன் விரும்புவதிலும் தவறில்லை. தமிழரசு கட்சி தற்போது அவரின் கட்டுப்பாட்டில் இருப்பதாக கூறப்படுகின்ற நிலையில், அவருக்கு எதிராக அனேகமாக சகல தமிழ்க் கட்சிகளும் செய்த படுமோசமான பிரசாரங்களுக்கு மத்தியிலும் வடக்கில் குறிப்பாக குடாநாட்டில் மக்கள் தமிழரசு கட்சிக்கே கூடுதலாக வாக்களித்திருக்கிறார்கள். அதனால், அவர் மீதான வெறுப்புப் பிரசாரங்களை தமிழ் மக்கள் தற்போது எவ்வாறு நோக்குகிறார்கள் என்ற ஒரு கேள்வி எழுகிறது. உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழரசு கட்சிக்கு கிடைத்த வெற்றி முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கலாம் என்ற நம்பிக்கையை சுமந்திரனுக்கு கொடுத்திருக்கலாம். அது வேறு விடயம்.

ஆனால், சிவஞானமும் சிறீதரனும் செய்தியாளர்கள் சுமந்திரன் தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளித்த போது தேர்தல்கள் தற்போதைக்கு நடைபெறுவதற்கான சாத்தியம் இல்லை என்று கூறுவதை விடுத்து முதலமைச்சர் வேட்பாளர் பிரச்சினைக்கு அப்பால் மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுப்போம் என்றுதான் கூறியிருக்க வேண்டும். அத்தகைய அரசியல் பக்குவத்தை அவர்கள் வெளிப்படுத்தவில்லை. தனிப்பட்ட ஆளுமை மோதல்களுக்கு அப்பால் மக்களின் நலன்களில் அக்கறை காட்டும் மனோபாவம் பெரும்பாலான தமிழ் அரசியல்வாதிகளிடம் கிடையாது.

தங்களுக்கு விருப்பம் இல்லாதவர்கள் பதவிக்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இருக்கும் என்றால் மாகாணசபை தேர்தல்களே வேண்டாம் என்றுகூட எமது அரசியல்வாதிகள் கூறி விடுவார்கள் என்று அல்லவா எண்ண வேண்டியிருக்கிறது.

## NPPயின் தடுமாற்றங்களும் குழப்பங்களும்

(19ம் பக்கத் தொடர்ச்சி) சரியானதைச் செய்வதே அரசியல் ஆளுமையின் பணியாகும். அநுரகுமார திசநாயக்க அந்தத் தலைமைப் பாத்திரத்தை வகிக்க வேண்டும். அதற்கான அங்கீகாரத்தை மக்கள் அவருக்கு வழங்கிருக்கிறார்கள். மக்களுடைய ஆணைக்கும் அங்கீகாரத்துக்கும் மதிப்பளிப்பதே ஜனாதிபதிக்கான முதற்கடமை. அதற்குப் பின்பு தான் அவர் தன்னுடைய கட்சிக்கான இடத்தை அளிக்க வேண்டும். கட்சியைத் திருப்திப்படுத்துவதற்காக மக்கள் வழங்கிய வாய்ப்பையும் அங்கீகாரத்தையும் பாழடிக்கக் கூடாது.

வரலாறு எப்போதும் ஒரு சுழலுக்குள் நிற்பதில்லை. அப்படி நின்றிருந்தால் உலகில் முன்னேற்றமோ வளர்ச்சியோ, மாற்றமோ ஏற்பட்டிருக்காது. ஒரு காலம் மேற்கு நாடுகளில் மிக மோசமான பிற்போக்குத்தனமும் வெறித்தனமும் இருந்தது. விளைவாகப் பெரும் போர்கள் கூட நடந்தன. பேரழிவுகள் ஏற்பட்டன. அதிலிருந்து படித்துக் கொண்ட பாடங்களின் அடிப்படையில்தான் அவர்கள் முன்னேற்றத்தை அடைந்தனர். மாற்றங்களை உருவாக்கினர்.

எனவே NPP செய்ய வேண்டியது அறுவைச் சிகிச்சையே தவிர, புண்ணைத் தடவிக் கொடுத்தல் அல்ல. அதாவது தற்காலிக சுகமளித்தல் அல்ல. JVP யின் உருவாக்கம், அதனுடைய 60 ஆண்டு கால அரசியல் முன்னெடுப்பு, NPP யின் 10ஆண்டுகால அரசியல் எல்லாம் System Changeஐ அடிப்படையாகக் கொண்ட அரசியல் மாற்றம் — ஆட்சி மாற்றமே. மக்களின் ஆணையும் அதற்கானதே. அதைச் செய்யவில்லை என்றால் எதற்காக NPP? ரணில், மைத்திரி, சஜித் போன்றவர்கள் போதுமே. அவர்களுடைய போதாமை — தவறுகளுக்கு — மாற்றுத்தானே அநுரவும் NPP யும்.

SASITHARAN LAW
PROFESSIONAL CORPORATION



**Vivekananthan Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*



**Rajabalini Sasitharan**
*Barrister, Solicitor & Notary Public*

**Real Estate**
- Residential & Commercial: *Purchases, Sales*
- Mortgages & Refinances

**Family Law**
- Divorce
- Custody & Support

**Estate Law**
- Power of Attorney
- Wills & Estate Administration

**Immigration Law**
- Skilled Migration
- Provincial Nominee Program
- Super Visa and Sponsorship

**Business Law**
- Incorporations
- Purchases
- Sales & Leases

**Sasitharan Law Professional Corporation**
10 Milner Business Court, Suite 709, (Markham & Milner),
Scarborough ON M1B 3C6
Tel: 416.949.0404 / Fax: 416.948.0303 • info@sasilaw.ca • www.sasilaw.ca

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.

*At Need Funeral Arrangements*

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

- *Vistation*
- *Funeral & Memorial Service*
- *Reception*
- *Burial* • *Cremation*



**Vilosanan Sivatharman**
416-993-0826

மார்க்கம், மற்றும் மிசிசாகா நகரங்களில் எமது சேவை



**Christeen Seevaratnam**
416-258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

*Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**
- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**
- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1 • www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com







# போரைத் தூண்டும் புதுவிமானம்! இந்தியப் படைக்குப் பலமா? உலக நாடுகளுக்கு பெரும் எச்சரிக்கை!

இந்தியா தனது உள்ளூர் ஆயுத உற்பத்தியை ஊக்குவிக்கும் சமீபத்திய முயற்சியாக, மேம்பட்ட போர் விமான முன் மாதிரியை உருவாக்கும் திட்டத்திற்கு பாதுகாப்புத் துறை அமைச்சர் செவ்வாய்க்கிழமை ஒப்புதல் அளித்தார். பாகிஸ்தானுடனான சமீபத்திய மோதலுக்கு கிட்டத்தட்ட மூன்று வாரங்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வந்துள்ளது. இது, இந்தியாவின் பாதுகாப்பு பலத்தை அதிகரிப்பதற்கான அவசர நடவடிக்கையாகக் காட்டப்பட்டாலும், அணு ஆயுத அண்டை நாடுகளான பாகிஸ்தான் மற்றும் சீனாவுடனான பதட்டமான சூழ்நிலையில், இந்த நடவடிக்கை ஒரு ஆயுதப் போட்டியைத் தூண்டி, பிராந்திய அமைதிக்கு அச்சுறுத்தலாக அமையலாம் என்ற கேள்விகளை எழுப்புகிறது.

உலகின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதியாளர்களில் ஒன்றான இந்தியா, தனது படைகளை நவீனமயமாக்குவதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. இந்த 5ஆம் தலைமுறை மேம்பட்ட நடுத்தர போர் விமானம் (AMCA) உள்நாட்டுப் பாதுகாப்பை மேம்படுத்தும் ஒரு முக்கிய நகர்வாகக் கருதப்பட்டாலும், அதன் வளர்ச்சி மற்றும் உற்பத்திச் செலவுகள், அத்துடன் அதன் வெளிநாட்டு தொழில்நுட்ப சார்புநிலை குறித்த விவாதங்களும் எழுந்துள்ளன.

இந்தியாவின் ஏரோ நாட்டிக்கல் டெவலப்மென்ட் ஏஜென்சி (ADA) — பாதுகாப்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஒரு அரசு நிறுவனம் — தொழில்துறை கூட்டாண்மை மூலம் திட்டத்தைச் செயல்படுத்தத் தயாராக உள்ளது என்று பாதுகாப்பு அமைச்சகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது ஒரு முக்கியமான படி... இது விண்வெளித் துறையில் ஆத்ம நிர்பர்தா (“RarhuG”) நோக்கிய ஒரு பெரிய மைல்கல்லாக இருக்கும்.'' எனினும், இந்தத் திட்டம் எவ்வளவு உள்நாட்டுமயமாக்கப்படும் என்பது கேள்விக்குறியே. ஸ்டாக்ஹோம் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் (SIPRI) கடந்த ஆண்டு வெளியிட்ட தகவல்படி, 2019-23 கால கட்டத்தில் இந்தியாவின் ஆயுதக் கொள்முதல் உலகளாவிய இறக்குமதியில் கிட்டத்தட்ட 10 சதவீதமாக அதிகரித்துள்ளது.

சமீபத்திய ஆண்டுகளில் மேற்கு நாடுகளுடன், குறிப்பாக அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஆஸ்திரேலியாவுடன் குவாட் கூட்டணியின் ஒரு பகுதியாக இந்தியா தனது பாதுகாப்பு ஒத்துழைப்பை ஆழப்படுத்தியுள்ளது. இது அதன் நீண்டகால ரஷ்ய இராணுவ வன்பொருள் சார்புநிலையை மெதுவாக மாற்றியமைக்கிறது. ஆனாலும், இந்தியாவின் இந்த ஆயுதக் குவிப்பு, பிராந்திய சமநிலையை சீர்குலைத்து, ஏற்கனவே உள்ள பதட்டங்களை அதிகரிக்கக் கூடும் என்ற அச்சங்கள் நிலவுகின்றன.

சமீபத்தில், பிரான்சின் டசால்ட் ஏவியேஷனில் இருந்து 26 ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கு இந்தியா பல பில்லியன் டாலர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஆனால், பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் 2033 ஆம் ஆண்டுக்குள் உள்நாட்டு ஆயுத உற்பத்தியைத் தூண்டுவதற்கு குறைந்தபட்சம் 100 பில்லியன் டாலர் புதிய உள்நாட்டு இராணுவ வன்பொருள் ஒப்பந்தங்களை உறுதியளித்துள்ளார். போர்க்கப்பல்கள், ஏவுகணைகள், விமானங்கள் என பல துறைகளில் இந்தியா தனது இராணுவ பலத்தை அதிகரித்து வருகிறது.




இது பாகிஸ்தான் மற்றும் சீனாவிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அவசியம் என்று இந்தியா கூறினாலும், இந்த ஆயுதப் பெருக்கம் பிராந்தியத்தில் ஒரு புதிய ஆயுதப் போட்டியின் சுழற்சியைத் தூண்டி, மோதல்களுக்கான வாய்ப்புகளை அதிகரிக்கும் என்று சில விமர்சகர்கள் அஞ்சுகின்றனர். பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையே சமீபத்தில் நடைபெற்ற நான்கு நாள் மோதல், இரு தரப்பிலும் 70க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்,

இது பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையின்மையை எடுத்துக் காட்டுகிறது. இந்த புதிய போர் விமானத் திட்டம், இந்திய-பாகிஸ்தான் மற்றும் இந்திய-சீன எல்லைகளில் ஏற்கனவே நிலவும் பதட்டங்களை மேலும் அதிகரிக்கக் கூடும் என்ற அச்சத்தை வலுப்படுத்துகிறது.

இது இவ்வாறிருக்க செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தும் புதிய போர் விமானத்தை உருவாக்க பிரித்தானியா, இத்தாலி மற்றும் ஜப்பான் இடையே ஒத்துழைப்பை பிரதமர் ரிஷி சுனக் அறிவிக்கவுள்ளார். இந்த கூட்டு முயற்சியானது ஆயிரக்கணக்கான பிரித்தானியர்களுக்கு வேலைகளை உருவாக்குவதையும் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று பிரதமர் தெரிவித்தார். அடுத்த தலைமுறை போர் விமானத்தை 2030ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியில் உருவாக்க முடியும் என நம்பப்படுகின்றது. இதை உருவாக்கும் பணி ஏற்கனவே நடந்து வருகிறது.

மேம்பட்ட சென்சார்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆகியவை இதில் பயன்படுத்தப்படும். மனித விமானி அதிக மன உளைச்சலுக்கு ஆளாகும்போது அல்லது அதிக மன அழுத்தத்தில் இருக்கும்போது இது அவருக்கு உதவவும். தேவைப்பட்டால், விமானியின் உள்ளீடு இல்லாமல் இது பறக்க முடியும் மற்றும் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை சுட முடியும்.

ஆனால் அத்தகைய சிக்கலான விமானத்தை உருவாக்குவது மிகவும் விலை உயர்ந்தது. எஃப்- 35 ஜெட் விமானத்தை உருவாக்குவது பென்டகனால் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிக விலையுயர்ந்த திட்டமாகும். எனவே பிரித்தானியா கூட்டாளர்களைத் தேடுகிறது.

